Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
ரூபா 30.00
மே 21 - 27, 2015

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1119

## தமிழ்த் தேசியமும் தனித் தேசியமும்

முரண்பாடுகள்



## அடுத்த பிரதமர்



## யார்?

02 ஆம் உலகப் போர்

70 ஆண்டுகள்



சர்ச்சையில் சிக்கியிருக்கும் அருங்காட்சியகம்



## விளக்கு பூஜை விரதம்

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி, அமாவாசை மற்றும் மாதப்பிறப்பு நாட்களில் விளக்குப் பூஜைசெய்வது மிகுந்த நற்பலன் தரும். அன்று விரதமிருந்து இதை செய்யவேண்டும்.

வீட்டில் திருவிளக்கு ஏற்றும் முன் சந்தனம் குங்குமம் இடவேண்டும் என்பது நியதி. விளக்கின் எட்டு பாகத்தில் பொட்டு இடவேண்டும். அவை உச்சி, முகங்கள் ஐந்து, தீபஸ்தம்பம், தீபத்தின் பாதம் ஆகியவை. எட்டு இடங்களிலும் பொட்டிடும்போது, ஆதிலட்சுமி, சந்தான லட்சுமி, வித்யாலட்சுமி, தனலட்சுமி, தான்ய லட்சுமி, கஜலட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரை தியானித்து இடவேண்டும்.

இதனால், வீட்டில் ஐஸ்வர்யம் பெருகும். எட்டு பொட்டுகள் வைப்பதற்கு தத்துவரீதியாவும் ஒரு காரணமும் சொல்வர். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்கள், சூரியன், சந்திரன் ஆகிய கண்கண்ட தெய்வங்கள், ஆத்மா என்னும் உயிர தத்துவம் ஆகியவற்றை- இந்த பொட்டுக்கள் குறிக்கின்றன.

வீட்டில் பூஜையறையில் ஒற்றை குத்துவிளக்கு ஏற்றக்கூடாது. காமாட்சி அம்மன் விளக்கு, மண் அகல் மற்றும் இரண்டு குத்துவிளக்குகள் ஏற்றினால் நல்லது. மூன்று அடுக்கு வைத்த விளக்கு மிகச் சிறப்பானது.

[தொடரும்]

## அன்பு செய்வோம்

இயேசுவோடு சீடர்கள் பல நாட்கள் இருந்திருந்தாலும், இன்றைய நற்செய்தியில் மட்டும் சிறப்பான வகையில், இயேசுவை முழுமையாக நம்புவதாகவும், இறைமகன் என ஏற்றுக்கொள்வதாகவும் சீடர்கள் கூறுகின்றனர். சீடர்களின் இந்த மனநிலைக்கு என்ன காரணம்? இயேசுவின் சீடர்கள் இயேசுவிடத்திலே அடிக்கடி வியந்து பார்க்கவைத்தது, அவருடைய உள்ளத்தையும் ஊடுருவும் பண்பு.

சீடர்கள் மனதில் என்ன நினைக்கிறார்கள்? என்பதை இயேசு உடனடியாக அறிந்து, அதற்கேற்ற பதிலைத்தருவது சீடர்களை ஆச்சரியப்படவும், மெய்சிலிர்க்கவும் வைத்தது. ஆக, இயேசுவின் இந்த ஆற்றல்தான், இயேசுவின் மட்டில் சீடர்களின் விசுவாசத்தை அதிகப்படுத்தியது என்றால் அது மிகையாகாது. இயேசுவும் தன் சீடர்களைப் புரிந்துகொள்கிறார்.

இயேசுவின் சீடர்களிடம் ஏராளமான குறைகள் இருந்தது. அவர்கள் பலவீனர்களாகவே இருந்தனர். ஆனாலும் இயேசு அவர்களை அன்பு செய்தார். அவர்கள்மீது தன் முழுமையான நம்பிக்கையை வைத்து, இறையரசுப் பணியைக் கட்டியெழுப்புகின்ற பணியை அவர்களிடம் ஒப்படைத்தார்.

நாமும் மற்றவர்கள்மீது நம்பிக்கையை வைப்போம். அதிகப் பலனைப் பெற்றுக்கொள்வோம்.

## மறுமையில் நன்மையடைவோர்

இவ்வுலக வாழ்வு பற்றி மண்ணுலக மனிதன் என்ன கருத்துக்களையும், கண்ணோட்டங்களையும் கொள்ளவேண்டும். இது பற்றி இஸ்லாம் என்ன கூறுகிறது? மனித வாழ்வு வளம்பெற மறுமைக்காக உழைப்பதுடன் மறுவுலக வாழ்வு செழிக்கவும் ஒவ்வொரு முஸ்லிமும் உலகில் செயற்படவேண்டும். இதற்கு நாம் இறைமறை வசனங்களை விரிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். இதன்மூலம் இம்மை, மறுமை இரண்டும் ஏற்புடையதாக எமக்கு அமையும்.

உலக வாழ்வை மட்டும் நோக்கமாகக் கொண்டோரை அல்குர்ஆன் இகழ்கின்றது. உலகையும், மறுமையையும் இணைத்துப் பார்ப்போரை அல்குர்ஆன் புகழ்கின்றது. இவ்வுலக வாழ்வு பற்றியும் மறுமை வாழ்வு பற்றியும் தெளிவான கண்ணோட்டமுடையோரே நாளை மறுமையில் நன்மையடைவோர்.

எம்.சி.கலீல், கல்முனை - 05

## கவிதைப்போட்டி 1116



● பாராட்டுக்குரியது ●

### காரணம்

முதுமையின் செழிப்புக்கு
இளமையில் சேமிக்க
இயலவில்லை.
காரணம்
என் பிள்ளைகள்
இன்று
என் பிள்ளைகள்
செல்வச் செழிப்பில்
நானோ நடுவீதியில்.

அ.சந்தியாகோ,
கண்டி

## கவிதைப் போட்டி இல 1119



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01. 06. 2015

கவிதைப் போட்டி இல. 1119 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### புதுமைப் பெண்

பாரதி காணாத
புதுமைப் பெண்ணே!
தந்தையான அன்னையென்று
தரணி புகழாதோ - எம்
தமிழினப் பெண்ணிவளை - உன்
பணிகண்டு பாரில் பெண்ணினம்
தலைநிமிரட்டும்.

த.நித்தி. மட்டக்களப்பு

### காத்திருக்கும் கண்கள்

வாழ்க்கைச் சக்கரம் சுழன்றிட
வருவாய் வேண்டும் அதைச் சுழற்றிட
வருவாய்த் தேடும் வழிக்கோ - இந்த
வியாபாரம் தான் வழியென - தன்
வாடிக்கையாளரைத் தேடியே
காத்திருக்கின்றனவோ இவர்கள்
கண்கள்.

இளம்பிறை.
புத்தளம்.




### சொகுசு வாழ்க்கை

நடை தள்ளாடும்
வயதிலும்
உன் காலிலே
நீ நிற்கிறாய்
இளசுகளோ
வெளிநாட்டுக் காசில்
சொகுசு வாழ்க்கை
வாழ்கின்றது.

கே.மதுஷா.



### நடை

கட்டிய மனைவியை
கடைசிவரை காப்பாற்றுவதற்கு
கடைத்தெருவில்
காத்துக்
கொண்டிருக்கிறார்
இவ்வயோதிபர்.

எஸ்.சனா.
கொக்குவில்.

## உங்கள் பக்கம்

### நிரந்தர வீடுகள் தேவை

யுத்தம் தந்த அழிவுகளை சுமந்த மக்கள் இன்றுவரையும் அவலங்களைச் சுமந்தவண்ணமே இருக்கின்றனர். அடிப்படை வசதிகளே இல்லாமல் பல மக்கள் இன்றுவரையும் மிகவும் துயரங்களைச் சுமந்தவண்ணமே உள்ளனர்.

தற்போது பரவலாக பெய்துவரும் மழைகாரணமாக கிளிநொச்சியில் தற்காலிக வீடுகளில் வசிக்கின்ற குடும்பங்கள் பெரும் அவதிப்படுவதாக கவலைகொள்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டபின்னர், ஒரு வருடத்துக்கு பயன்படக்கூடிய அளவில் பல குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அந்த வீடுகளிலேயே மக்கள் இன்றுவரையும் வாழ்ந்து வாழ்கின்றனர். தற்போது பெய்யும் மழையால் அந்த வீடுகளில் வசிக்க முடியாத- நிலை காணப்படுகின்றது.

இந்திய வீட்டுத்திட்டம், புள்ளித் திட்ட அடிப்படையில் வழங்கப்பட்டமையால், 2, 3 அங்கத்தவர்களைக் கொண்ட வறிய குடும்பங்கள் இந்த வீடுகளைப் பெறவில்லை.

இதனால் அந்தக் குடும்பங்கள் தற்காலிக கொட்டகைகளில் மிகவும் அவதியுற்ற நிலையில் வாழ்ந்துவரும் வருகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் எமக்கு தகுந்த வீடுகளைப் பெற்றுத்தர வேண்டுமென உங்கள் பக்கமூடாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

எச்.சானுபேகம், கிளிநொச்சி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com


## வாசகர்சாலை

### சுடர்!!

வாசகர்கள் மனம்விரும்பும் நாளிதழாக தினமுரசு வீறுநடை போட்டுக்கொண்டிருக்கின்றது. முரசினுடைய பக்கங்கள் எல்லாம் என்னைக் கவர்ந்தவையே. அதுமட்டுமல்லாமல் அற்புதராஜா காலத்தில் ஆரம்பித்த எனது வாசிப்பு பழக்கம் இன்றுவரை தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. குறுக்கெழுத்து பிரமாதமாக உள்ளது. அறிவை வளர்ப்பதற்கு முரசு திறம்பட செயற்படுகின்றது. முரசு மேலும் மேலும் சுடர்விடவேண்டும்.

எம்.எம்.இஸ்மாயில்,
கொள்ளுப்பிட்டி.

### தன்னம்பிக்கை

முரசுக்கு வணக்கம். அண்மையில் நேபாளத்தில் நடந்த பூகம்பம் பற்றி முரசு தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. பல சுவாரசியமான தகவல்களை வெளியிட்டு வருகின்றாய். அடுத்து சினிமா பக்கம் கவர்ச்சியாக உள்ளது. படங்களின் வருகை பற்றி உடனுக்குடன் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. 24 ஆம் பக்கத் தகவல்கள் அதிசயத்தக்கவகையிலும், நம்பிக்கையை ஊட்டக்கூடிய வகையிலும் இருக்கின்றது. தன்னம்பிக்கை என்ற தலைப்பில் வெளியான வீரனின் முயற்சியை பாராட்டுகின்றேன். இது தன்னம்பிக்கை இழந்த ஒவ்வொரு மனிதனையும் நித்திரையில் இருந்து எழுப்பும்.

வ.சானுஷா, வவுனியா.

### வேண்டுகோள்

முரசின் தீவிர வாசகி நான். சிந்தை மகிழ, அறிவு வளர உன் பங்களிப்பு சிறப்பானது. முரசில் ஆரம்பமாகியுள்ள விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா தொடரை எழுதும் இக்பால் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். விடுதலை வீரனுடைய வாழ்க்கை முறையை அழகாக சித்தரித்துக் கொண்டு வருகின்றார். இன்னும் வாசிக்கத் தூண்டும் வகையில் எழுத வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

ம.தாவீர், மட்டக்களப்பு.


### அமைதியின் சொற்கள்

அமைதி தனிநபர்களிலிருந்துதான் ஆரம்பமாகின்றது. ஒவ்வொரு தனி மனிதரினுள்ளேயும் தான் அமைதிக்கான ஆவல் குடிகொண்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு தனிநபரின் அரங்கிலும்தான் அந்த அமைதி நடனமாடவேண்டும்.

இணையத்தளம்: www.wopg.org

- பிரேம் ராவத்

# அபிவிருத்தியும் நல்லிணக்கமும் சரிநிகராக பயணிக்கவேண்டும்



## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

**நாட்டில் யுத்தம் முடிவுற்று 6 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் புதிய ஆட்சியின் நோக்கத்தின் அடிப்படையில் அபிவிருத்தியும் நல்லிணக்க முயற்சியும் சரிநிகராக பயணிக்கவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

அடிப்படைவாத பிரிவுகள் முன் வைக்கும் போலிக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் சேறு பூசல்களை நம்பவேண்டாம் என்று அவர்களின் நோக்கம் நல்லிணக்க முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்துவது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டி உள்ளார். நாட்டில் நல்லிணக்க முயற்சிகளை முதன்மையாகக் கொண்டு புதிய அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டில் யுத்தத்தை இல்லாதொழித்து சமாதானத்தை ஏற்படுத்திய இராணுவ வீரர்கள் என்றும் மறக்கப்படமாட்டார்கள் என்றும் அவர்களுக்கு உரிய மரியாதை, கௌரவம அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படவும் தீவிரவாதிகள் தலைதூக்கவும் இடமளிக்கப்படாது என்றும் தேசிய பாதுகாப்புக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாகவும் முப்படையினரும் பாதுகாப்பு சபையில் வழங்கப்படும் ஆலோசனைக்கு அமைய திறம்பட செயற்படுவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். நாட்டில் உள்ள சில

## ஆட்கடத்தல்காரர்களுக்கு எதிராக புதிய திட்டம்

ஆட்கடத்தல்காரர்களுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள புதிய திட்டமொன்றுக்கு ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் அங்கீகாரம் வழங்குவார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது. லிபிய கடல் எல்லைப் பகுதியில் ஆட்கடத்தல்காரர்களால் பயன்படுத்தப்படும் படகுகளை அழிப்பதற்காக கொண்டுவரப்படவுள்ள புதிய திட் டத்திற்கே ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் அங்கீகாரம் வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளின் வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சர்களுடன் புரூஸ்ஸெல் நகரில் பேச்சுவார்த்தையொன்று இடம்பெறவுள்ளது. இதன்போதே குறித்த தலைவர்கள் இந்த திட்டத்திற்கு தமது ஆதரவை தெரிவிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மத்திய தரைக் கடலினூடாக சட்டவிரோதமாக பயணம் மேற்கொள்வதை தடுப்பதற்கு தமக்கு ஒரு கடமை இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## எல்பட தோட்டப்பாதை புனரமைக்க கோரிக்கை

அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட நோர்வூட் எல்பட தோட்டத்துக்கான பாதையை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோர்வூட் நகரிலிருந்து சுமார் பத்து கிலோமீற்றர் தூரமான இப்பாதை மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் குறித்த பாதையூடாக தனியார் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டன. இந்நிலையில், பாதை சீர்கேடு காரணத்தால் இச்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த காலங்களில் விபத்துக்களும் அதிகரித்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வாடகை வாகன சேவையாளர்களும் குறித்த பாதையில் சேவையில் ஈடுபட்டுவருகின்றனர். தமது வாகனங்கள் இப்பாதையினூடாக பயணிப்பதால் உடைந்து விடுவதாகவும் இதனால் தமது அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆடு பாலமும் மழை காலங்களில் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே இப்பாதையை புனரமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



காமுகர்கள் இந்த பாதகத்தை புரிந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த காமுமுகர்கள் ஐவரும் கொடூரமாக கொலைச் செய்யப்பட்ட வித்தியாவின் பிரேதத்தை மீட்க உதவியதாகவும், அவர்கள்மீது சந்தேகம் ஏற்படாமல் இருக்க அவ்வாறு நடந்துகொண்டு உள்ளதாகவும் தெரியவருகின்றது.

கைதுசெய்யப்பட்டுள்ள எட்டு சந்தேக நபர்களும் புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தை சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் அனைவரும் உறவினர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அத்துடன் உயிரிழந்த . மாணவிக்கும் அவர்கள் எட்டு பேரும் ஒரு முறையில் உறவினர்கள் ஆவார்கள் எனவும் தெரியவந்துள்ளது.

அதேவேளை கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பொலிசாரிடம் வாக்குமூலம் அளிக்கையில்,

"நாங்கள் கொழும்பில் இருந்துவந்து கடந்த 13ஆம் திகதி புதன்கிழமை காலை புங்குடுதீவில் மது அருந்திக்கொண்டு இருந்தோம். அந்தவேளை 14ஆம் திகதி வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்ட மூவரில் ஒருவர் எனக்கு தொலைபேசியில் "அயிட்டம் (பெண்ணு) ஒன்று இருக்கு வா" என ஒரு இடத்தை சொல்லி அழைத்தார்.

அதையடுத்து, நாங்கள் அந்த இடத்திற்கு காரில் சென்றோம். அங்கே ஒரு பெண்ணை கடத்திபின் புறமாக கைகள் கட்டப்பட்டநிலையில் அவர்கள் மூவரும் அந்த பெண்ணை வன்புணர்வுக்கு



# வித்தியாவின் கொலைக் குற்றவாளியின் பரபரப்பு வாக்குமூலம்



**புங்குடுதீவு** மாணவி வித்தியாவின் கொலை வழக்கில் இதுவரை கைதாகியுள்ள ஒன்பது காமுகர்களிடமும் நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிசார் கூறுகின்றனர். பிரதான சூத்திரதாரிகளிற்கு எதிரான வழக்கொன்றின் பிரதான சாட்சியமாக கொல்லப்பட்ட மாணவியின் தாயார் இருந்தது. நீதிமன்றத்தில் சாட்சி வழங்கியதற்கு பழிதீர்க்கும்முகமாகவே இந்த கொடூரத்தை புரிந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் இந்திரகுமார் (வயது40), பூபாலசிங்கம் ஜெயகுமார் (வயது 34), பூபாலசிங்கம் தவக்குமார் (வயது 32) ஆகிய பிரதான காமுகர்கள் கொடுத்த ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையிலேயே, பின்னர் கைதான ம.சிவதேவன் (வயது 31), துசாந்தன் (வயது 31), சசிதரன் (வயது 26), சந்திராஜ் (வயது 25), நிசாந்(வயது 23) ஆகிய உட்படுத்திய நிலையில் இருந்தார்கள்.

அந்த பெண் எமக்கு ஒரு முறையில் உறவினர்கூட. அந்தவேளை நாம் மது மயக்கத்தில் இருந்ததால் நாமும் அந்த பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்தினோம்.

பின்னர் நாம் காரில் காலை 10 மணியளவில் கொழும்பு நோக்கி சென்றுவிட்டோம். மறுநாளே எமக்கு அந்த பெண் உயிரிழந்துள்ளார் என்ற தகவல் கிடைத்தது.

நாம் செல்லும்போது அந்த பெண் உயிரிழக்கவில்லை. அவரது கைகள் பின்னால்தான் கட்டப்பட்டு இருந்தது. ஆனால் பின்னர் கைகள் தலைக்கு மேல் விரித்து இரண்டு மரங்களில் கட்டப்பட்டது தொடர்பில் எமக்கு தெரியாது.

எமக்கு அயிட்டம் (பெண் ) இருக்கு என்று சொல்லி அழைத்தவர், ஏற்கனவே ஒரு திருட்டு சம்பவத்துடன் தொடர்புபட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்.

அவரை பொலிசாரிடம் காட்டிக்கொடுத்தது உயிரிழந்த பெண்ணின் தாயாராவார். எனவே தாய்மீதான கோபத்திலேயே அவர் அந்த பெண்ணை கடத்தி வன்புணர்வுக்கு உட்படுத்தியதுடன் எம்மையும் அழைத்து இருந்தார்.

தாயின் மீதான கோபத்தினால்தான் அவர் அந்த பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்து இருக்கலாம்.

அதனை அடுத்து நாம் புங்குடுதீவுக்கு வந்து அந்த பெண்ணின் இறுதி கிரியைகளிலும் கலந்துகொண்டு இறுதி கிரியைகளில் உதவிகளையும் முன்னின்று செய்தோம்.

அதன் பின்னர் ஞாயிற்றுக்கிழமை 17ஆம் திகதி இரவு மீண்டும் கொழும்பு நோக்கி செல்ல இருந்தோம். அந்த நிலையிலேயே பொலிசார் எம்மை கைது செய்துள்ளனர் எனத் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.


தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com


## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## ஒற்றுமைப்படுவதே உண்மையான அஞ்சலியாகும்

மே பதினெட்டாம் திகதி அரசியல் கட்சிகள் ஆளுக்கொரு திசையில் அஞ்சலி செலுத்தியுள்ளார்கள். இன்னும் சிலர் யாழ்ப்பாணத்திலும், சிலர் கொழும்பிலும் அஞ்சலி செலுத்தியிருப்பதாக பதிவு செய்திருக்கின்றார்கள்.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பலியாகிப் போனவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாகவே இவர் கூறினார்கள். ஆனால் முள்ளிவாய்க்காலில் மட்டுமல்ல மூன்று தசாப்தங்களுக்கும் மேலான காலப்பகுதியில் பல ஆயிரம் தமிழர்கள் பலியாகியிருக்கின்றார்கள்.

பொதுமக்கள், இயக்கப் போராளிகள் என பலரும் தங்களது உயிர்களை மாய்த்திருக்கின்றார்கள். அவர்கள் அனைவரையும் பொதுவான தினத்தை முடிவுசெய்து நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்த வேண்டும்.

தமிழ் இனத்தின் உரிமைக்கான போராட்டத்தில் அவரவருக்கு ஏற்ற வழிமுறையில் ஒவ்வொருவரும் பங்களிப்பைச் செய்திருக்கின்றார்கள். இதில் புலிகளை மட்டுமோ, முள்ளிவாய்க்காலில் பலியாகியவர்களை மட்டுமோ நினைவுகூருவது அரசியல் கலந்த கபடத்தனமேயன்றி அது அகத்திலிருந்து செலுத்தப்படும் உண்மையான அஞ்சலியாக அமையாது.

பொதுவான தினத்தில், குறித்த நேரத்தில் இலங்கையில் வாழ்கின்றவர்களும், உலகமெங்கும் பரந்து வாழுகின்ற தமிழர்களும் எமது உரிமைகளுக்கான போராட்டத்தின் பெயரால் பலியாகிப் போனவர்களுக்கு அந்த நாளிலாவது அரசியல் பேதங்களையும், இதர முரண்பாடுகளையும் தூரப்படுத்தி ஒற்றுமையாக அஞ்சலிகளை செலுத்த வேண்டும்.

அது ஒரு துக்கநாளாக, கறுத்த நாளாக தமிழர் மனங்களில் நினைவு கொள்ளப்படவேண்டும். ஆனால் இம்முறை ஆங்காங்கே அஞ்சலிகள் நடைபெறுகின்றபோது, திரையரங்குகளிலும், மதுபான சாலைகளிலும், களியாட்டங்களில் பெரும்பாலானவர்கள் நேரத்தை போக்கினார்கள்.

யாருடைய அஞ்சலி நாடகத்தில் நாங்கள் கலந்துகொள்வது என்று இளைஞர் கேட்கத் தொடங்கினார்கள். வீட்டில் பெண்கள் ஒரு விளக்கைக்கூட தூரங்களை வெளிப்படுத்த ஏற்றிவைக்கவில்லை. இந்த நிலைமை மாறவேண்டும்.

துக்கதினம் அனுஷ்டிக்கப்படுவதும், அஞ்சலிகள் செலுத்தப்படுவதும் அரசியல் நிகழ்ச்சி நிரல் அல்ல. அது திக்குத் திக்காக செய்யும் சடங்கும் அல்ல. ஒவ்வொருவருக்கு ஒரு மாதிரி அஞ்சலிகள் வேறுபடவும் முடியாது. இவ்விடயத்திலாவது தமிழர்கள் ஒற்றுமைப்படவேண்டும்.

தமிழ் மக்கள் இதிலாவது ஒற்றுமைப்படுவதே இறந்தவர்களுக்கு உயிரோடு இருப்பவர்கள் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். அத்தகைய உயரிய செய்தியை உணர்த்துவதற்காகவே இத்தனை உயிர்கள் பலிகொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை புரிந்துகொள்வது அவசியம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# தமிழ்த் தேசியமும் தனித் தேசியமும்

## முரண்பாடுகள்

“தனித் தேசியக் கொள்கைகள் மேலோங்கியிருக்கும் தற்போதைய சூழலில் மாவட்டங்களை தமது ஆளுமைக்குள் கொண்டுவரும் குறுக்கு ஓட்டங்கள் வெளிப்படத்தொடங்கியுள்ளது. மட்டக்களப்பில் அரியநேந்திரன், செல்வராசா போன்றவர்கள் தலைதூக்கியுள்ளனர். திருகோணமலையில் இன்னொரு ஆளுமை தலைதூக்கும்வரை சம்மந்தனுக்கு வாய்ப்பு இருப்பதை தடுக்க கூட்டமைப்புக்குள் எவரும் இல்லை. வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆளுமை செலுத்துகின்றது. மன்னாரில் ரெலோ ஆளுமை செலுத்துகின்றது. கிளிநொச்சியில் சிறீதரன் தனித்துவ ஆளுமை எடுக்க முயற்சிக்கின்றார். முல்லைத்தீவு வாக்குப்பலம் இல்லாத மாவட்டம் என்பதால் அந்த மாவட்டத்தை யாரும் சொந்தம் கொண்டாடவில்லை. அதை உபரியாக பங்கிட்டுக் கொள்ளலாம்.”

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக தம்மையே காட்டிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமக்கிடையேயான முரண்பாடுகளை களைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனியான கட்சியாகப் பதிவு செய்வதில் ஒற்றுமையில்லாமல் முரண்பட்டு நிற்கின்றனர்.

பரஸ்பர ஒற்றுமையும், பொது வேலைத்திட்டமும் இல்லாமல் வெறுமெனவே தேர்தல் அரசியலுக்கு மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னிறுத்திவருகின்றனர். தமிழரசுக் கட்சியினரே தொடர்ந்தும் கூட்டமைப்பை தனிக்கட்சியாக பதிவு செய்வதற்கும், தனியாக யாப்பு ஒன்றை உருவாக்குவதற்கும் தடையைப் போட்டுவருகின்றனர்.

அப்படி கூட்டமைப்பை தனியான கட்சியாக பதிவுசெய்வதாக அமைந்தால் அந்தக் கூட்டமைப்பில் ஐம்பத்தியொரு விகித அதிகாரங்கள் தமிழரசுக் கட்சிக்கே இருக்க வேண்டுமெனவும் கூறிவருகின்றனர்.

தமிழரசுக் கட்சியினரின் இந்த நிலைப்பாடு கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிருப்திகள் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் மேடைகளில் வெளிப்பட்டுவருகின்றது.

அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் மேடையில் வடமாகாண முதலமைச்சர், தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஆகியோரை வைத்துக் கொண்டே ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியினரும், ரெலோ கட்சியினரும் தமது அதிருப்திகளை பகிரங்கமாக வெளிப்படுத்தியபோது, அதற்கு முதலமைச்சர் நியாயப்படுத்த முயற்சித்ததையும், மாவை சேனாதிராசா அந்த மேடை, இந்த விவாதத்துக்குரிய மேடை இல்லை என்று புத்திசாலித்தனமாக பதிலளித்துத் தப்பித்ததையும் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த நூற்றுக் கணக்கான மக்கள் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

அதற்குப் பின்னர் முள்ளிவாய்க்காலில் ஆளுக்கொரு மெழுகுதிரிக்கு முன்னால் தலையை குனிந்தபடி அஞ்சலி செலுத்துவதாக காட்டிக் கொண்டபோதே சிலர் ஒன்றாகக் காட்சியளித்தார்கள்.

இந்த அஞ்சலியை செலுத்துவதற்கு கூட்டமைப்பிலுள்ள எவருக்கும் அருகதை இல்லை என்பதை முதலில் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால், யுத்தத்தின் இறுதி நாட்களில் தமிழ் மக்கள் அழியப் போகின்றார்கள் என்பது தெளிவாக தெரிந்திருந்தபோது இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யுத்தத்தை நிறுத்தச் சொல்லியோ, அங்கு அகப்பட்டுள்ள அப்பாவி மக்களை யுத்த பிரதேசத்திலிருந்து வெளியேற அனுமதிக்கும்படியோ ஒருவார்த்தைகூட பேசவில்லை.

மாறாக தமது குடும்பங்களையும், உறவுகளையும் பாதுகாப்பாக நாட்டை விட்டு வசதியான நாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். அப்படியும் அனுப்ப முடியாதவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படும் அரச வீட்டில் மாலபே எனும் இடத்தில் தங்கவைத்து பராமரித்தார்கள்.

அத்தோடு நின்றுவிடாமல், தமிழ் மக்கள் அழிந்தது காணாது இன்னும் அதிகமான மக்கள் உயிரிழக்க நேரிட்டாலே சர்வதேச சமூகம் சிங்கள அரசைக் கண்டிக்கும் என்று உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் வீரம் பேசினார்கள்.

இப்போது யுத்தத்தில் பலியான உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துகின்றார்களாம். தமிழ்த் தேசியம் என்பதே தமிழ் மக்களை அழிவுக்குள்ளும், அழிவின் வடுக்களோடும் வைத்திருப்பதும், அதை சிங்கள அரசுக்கெதிரான பகையாக வடிவமைத்து தேர்தலில் வாக்குகளாக அறுவடை செய்வதுமான தந்திரோபாயமாக மாற்றப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில், அச்சமற்றும், உரிமைகளோடும், பாதுகாப்பாகவும், தமது கலை கலாசாரங்களுடன் வாழ்வதற்கான அடிப்படைகளை முன்னிறுத்துவதாகவே தேசியம் என்பது பொருள்பட வேண்டும் என்ற அடிப்படைகள் தகர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியம் ஒற்றுமைக்கும், பல்கருத்து ஜனநாயகத்துக்கும் முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. தமிழ்த் தேசியம் என்றால் கேள்விகளுக்கும், மாற்று அபிப்பிராயங்களுக்கும், அப்பாற்பட்டது. அது ஒரு இனத்தின் ஏகோபித்த கருத்தியல், இங்கே ஜனநாயகத் தன்மைகளுக்கு இடமில்லை. அப்படி இருப்பதாக யாரேனும் கூறினால் அவர்கள் தேசியத்திற்கு எதிரானவர்கள். அல்லது துரோகிகள்.

இந்த குருட்டுப்பயணமே தமிழ் மக்களை பெரிதும் அழித்தது என்பதை காலத்தைத் தவிர வேறு எவராலும் உணர்த்தமுடியாது. ஆனால் தேசியத்துக்குள் நுழைந்தவர்களையும், இதே ஏகபோக கோட்பாடு இன்று அடக்கிவைத்திருக்கின்றது. தேசியத்துக்குள்ளே, தமது தனித்துவங்களை பாதுகாக்க முடியாமலும், தலைமை என்ற ஒரு சர்வாதிகாரத்தின் சகல முடிவுகளையும் தலையை அசைத்து ஏற்றுக்கொள்ள முடியாமலும் தமக்குள்ளேயே முரண்பட்டு நிற்பதன் நிதர்சனம் இதுதான்.

இதற்கிடையே தமிழ்த் தேசியத்தில் மக்களை ஒற்றுமையாக வாக்களிக்குமாறும், சர்வதேசத்தின் முன்னால் ஒன்றுபட்ட வெளிப்பாட்டைக் காட்டுமாறும் கேட்கும் இவர்களிடையே தனித்தேசியக் கொள்கைகள் மாறுபட்டதாக இருப்பதையும் அவதானிக்கமுடிகின்றது.

ஏற்கெனவே கூட்டமைப்பை பதிவு செய்யும் சச்சரவில் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளுக்கிடையே குத்துவெட்டுக்கள் நிலவுகின்ற சூழலில் அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளரை சந்திக்கச் சென்றவேளையில் சம்மந்தன் நடந்து கொண்டவிதம் தீயாக எரியத்தொடங்கி உள்ளது. வடமாகாண முதலமைச்சரை கருவேப்பிலைபோல் குழுவில் அழைத்துக் கொண்டுபோய் வாய்திறக்கவிடாமல் ஒதுக்கிவைத்ததும், சுரேஸ் பிரேமச்சந்திரன் பிரச்சினைகளை முன்வைத்தபோது அதைத் தடுத்து மிரட்டி அடக்கியதும் சம்மந்தனின் மீதான ஏனையவர்களின் அதிருப்தியை அதிகரித்துள்ளது.

ஏற்கெனவே தற்போதைய இலங்கை அரசோடு இணக்க அரசியல் செய்து கொண்டு சுமந்திரனும், சம்மந்தரும் செய்கின்ற வேலைகள் கூட்டு முடிவுக்கு உட்படாதவையாக இருக்கின்றநிலையில், தொடர்ந்தும் கூட்டுக்குள் இருக்கும் சகாக்களை மதிக்காமலும், அவமதிக்கும் விதமாகவும் அவர்கள் நடந்துகொள்வதை சகித்துக் கொள்ளமுடியாது என்ற உச்சக்கட்டத்தில் கூட்டுக்குள்ளிருக்கும் ஏனைய கட்சிகள் இருப்பதாக கூறிவருகின்றனர்.

தனித்தேசியக் கொள்கைகள் மேலோங்கி இருக்கும் தற்போதைய சூழலில் மாவட்டங்களை தமது ஆளுமைக்குள் கொண்டுவரும் குறுக்கு ஓட்டங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

மட்டக்களப்பில் அரியநேந்திரன், செல்வராசா போன்றவர்கள் தலைதூக்கி உள்ளனர். திருகோணமலையில் இன்னொரு ஆளுமை தலைதூக்கும்வரை சம்மந்தனுக்கு வாய்ப்பு இருப்பதை தடுக்க கூட்டமைப்புக்குள் எவரும் இல்லை. வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆளுமை செலுத்துகின்றது. மன்னாரில் ரெலோ ஆளுமை செலுத்துகின்றது. கிளிநொச்சியில் சிறீதரன் தனித்துவ ஆளுமை எடுக்க முயற்சிக்கின்றார். முல்லைத்தீவு வாக்குப்பலம் இல்லாத மாவட்டம் என்பதால் அந்த மாவட்டத்தை யாரும் சொந்தம் கொண்டாடவில்லை. அதை உபரியாக பங்கிட்டுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சி ஆளுமை செலுத்த பகீரதப்பிரயத்தனம் செய்கின்றது. ஆனால் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சிகளும் சில இடங்களை தமிழரசுக் கட்சிக்கு விட்டுக் கொடுக்காத பிடிவாதத்தோடு காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலைமைகளை எல்லாம் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின்பால் கண்டு கொள்ளாமல் ஒற்றுமையாகவும், பார்த்துக் கொண்டிருக்கும் சர்வதேசத்தின் மனம்கோணாமலும் வாக்களித்தால் அதுவே தன்மானத் தமிழர்களின் பிறவிக் கடமையாகும்.

தமிழ் இனத்தினுள்ளே பல கருத்துக்கள் இல்லை. அவர்கள் ஒற்றுமையானவர்கள். அவர்களின் தேசியத் தன்மையானது முரண்பாடுகளுக்கோ, தனிமனித விருப்பு வெறுப்புக்களுக்கோ இடங்கொடுக்காது. எப்போதும் ஒருவழிப் பயணத்தையே கொண்டிருப்பார்கள். ஆகவே தமிழ்த் தேசியத்தின் தலைவரை மட்டும் பார்த்து கருத்துக்களை கேட்டுக் கொண்டால் அது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கருத்தாகிவிடும் என்றெல்லாம் சர்வதேசம் நம்மை நினைத்து பெருமைப் பட்டுக் கொண்டிருப்பதாக நாம் நம்பிக் கொண்டிருப்பது உலக மகா முட்டாள்தனமாவே இருக்கும்.

மதியூகி



# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

### தொடர் 166

நான்கைந்து **இந்த** நாட்களில் எனது உட்றகாயங்கள் சீராகக் குணமாகா விட்டாலும், பொறுமை இழந்த எனது விசாரணையாளன் தயாபரன் வந்து என்னை மீண்டும் விசா ரணைக்கு அழைத்துச்சென்றான்.

மீண்டும் விசாரணை ஆரம் பித்ததும் அவன் என்னைப் பார்த்து முதல் கேட்ட கேள்வி, "நீங்கள் முதலிலேயே உண்மை யைச் சொல்லியிருந்தா காந்தி அண்ணையிட்டை வீணாக அடி வேண்டாமல் இருந்திருக்கலாம் தானே?" என்பதுதான்.

நான் மௌனமாக இருந்தேன்.

அவன் மீண்டும் என்னை நோக்கி, "நாங்கள் சிறீதரனைத் தேடுகிறோம் எண்டது உங்களுக் குத் தெரியாதா?" என்று கேட்டான்.

நான் என்ன சொல்வது என்று தெரியாமல் இருந்தேன். பின்னர் அவனை நோக்கி, "தேடுறது தெரியாது. ஆனால் அவரைத் தேடக்கூடும் என நினைத்தேன்" என்று சொன்னேன்.

"அப்பிடி நீங்கள் நினைச்சிருந் தால் அவரை நீங்கள் உங்கள் வீட்டில் ஏன் தங்கவைச்சனீங்கள்?" எனக் கேட்டான்.

"நான் அதை யோசிக்காமல் செய்துபோட்டன்" எனப் பதில் அளித்தேன்.

"பாத்தியளா நீங்கள் யோசிக்கா மல் செய்த பிழையாலை எவ்வளவு கஸ்டத்தை அனுபவிக்கிறியள்? அவரை நீங்கள் தங்க வைக்க வில்லையெண்டால், இஞ்சை வந்திருக்கவேண்டிய தேவையே வந்திருக்காது" எனப் புத்திமதி சொல்லிய அவன் பின்னர் முகத்தை சற்று கடுமையாக்கிக் கொண்டு, "அவரை எப்பிடி கொழும்புக்கு அனுப்பி வைச்சனிங்கள்?" என்று வினவினான்.

சிறீதரனை நான் கொழும்புக்கு அனுப்பி வைக்கவில்லை என் பதை பிடிபட்ட எமது கிளிநொச்சித் தோழர்கள்மூலம் அறிந்திருந்த போதிலும் வேண்டுமென்றே அந்தக் கேள்வியை கேட்கிறான் என்பது புரிந்தது.

"சிறீதரன் கொழும்பு சென்றது பற்றி எனக்கு உண்மையில் ஒண்டும் தெரியாது" என்றேன்.

அவன் சிரித்துவிட்டு, "சிறீதரன் உங்களிடம் வந்தபோது ஏன் வந்தது என ஏதாவது சொன்னாரா?" எனக் கேட்டான்.

"இல்லை, எமக்குக் குழந்தை கிடைத்ததால், பார்த்துப்போக வந்ததாகச் சொன்னார்" எனச் சொன்னேன்.

"என்ன கொண்டு வந்து தந்தவர்" எனக் கேட்டான்.

"500 ரூபா காசு தந்தவர்" என நான் பொய் சொன்னேன்.

"அவர் உங்கடை வீட்டில் தங்கியிருந்த நேரத்திலை அவரை யாராவது வந்து சந்திச்சவையோ? என திடீரென ஒரு கேள்வியைத் தூக்கிப்போட்டான்.

அவனது அந்தக் கேள்வி எனது மனதில் ஒரு மின்னலைத் தோற்றுவித்தது. இப்பொழுது ஒரு வெளிச்சம் தோன்றியது.

"அப்பிடி யாரும் வந்து சந்திச்ச தாக எனக்கு ஞாபகமில்லை. தற்செயலாக ஆரும் சந்திச்சவை யோ எண்டதை யோசிச்சுச் சொல்லிறன்" என்று சொன்னேன்.

"நாளைக்கு எப்பிடியும் விசார ணையை முடிக்கவேணும்" என்று சொல்லி அன்றைய விசாரணையை குறுகிய நேரத்தில் முடித்துக் கொண்டான்.

நான் சிறைக்குள் வந்த பின்னரும் அவன் கேட்ட ஒரு கேள்வி என் மனத்துக்குள் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. "சிறீ தரனை எனது வீட்டில் வந்து யாராவது சந்தித்தார்களா?" என்ற அந்தக் கேள்வி, எனது மனதைக் குடைந்த கேள்விக்கு ஓரளவு பதில் அளிப்பதுபோல இருந்தது.

எனது வீட்டில் சிறீதரன் தங்கியிருந்தபோது தற்செயலாக வந்த அவருக்குத் தெரிந்த ஒருவர் அவருடன் உரையாடிச் சென்றி ருந்தார் என்ற விடயம் ஞாபகத்துக்கு வந்தது.

ஒருவேளை அவர்மூலம்தான் சிறீதரன் எனது வீட்டில் தங்கியது தெரிந்திருக்குமோ என எண்ணினேன்.

அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அந்த நபரும் ஏற்கெனவே புலிகளின் பிடியில் சிக்கி இருந்ததுதான்!

**புலிகள் எதிர்பார்த்த பதில்**

கலாநிதி கோ.சிறீதரன் அவர்களை நான் தங்கியிருந்த மீசாலை வீட்டில் நண்பர் மனோரஞ்சன் விட்டுச் சென்ற பின்னர், அவரைத் தெரிந்த ஒரேயொருவர் மட்டும் எனது வீட்டுக்கு வந்து சென்றது இப்பொழுது எனது ஞாபகத்துக்கு வந்தது. அவர் வேறு யாருமல்ல, என்னைக் கடத்துவதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே கடத்தப்பட்டு புலிகளின் பிடியில் இருக்கும் முன்னாள் யாழ். பல்கலைக்கழக மாணவரான தில்லை என அழைக்கப்படும் தில்லைநாதன்தான் அவர்.

கோட்டை அடிபாடு காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து மீசாலையில் தங்கி இருந்த என்னிடம், யாழ்ப்பாணத் தில் தொடர்ந்தும் தங்கியிருந்த சில தோழர்களும் நண்பர்களும் வந்துபோவது வழமையாக இருந்தது. அவர்களில் தில்லை முக்கியமானவர். அவர் பெரும் பாலும் ஒன்றுவிட்டு ஒருநாள் வந்து போய்க் கொண்டிருந்தார்.

அப்படி ஒருநாள் வரும்போது சிறீதரனும் அங்கு தங்கியிருந்தார். அவரையும் தில்லைக்கு தெரியு மாகையால், சிறிதுநேரம் இருந்து அவருடனும் உரையாடிவிட்டுச் சென்றிருந்தார்.

(தொடரும்...)

**நான்** உங்களது சகோதரரின் சவப்பெட்டியைத் திறந்து பார்க்க வேண்டும் என்றார்.

மிஸ் மரியம் கண்ணீர்விட்டார்.

"நானே எனது சகோதரனைப் பறிகொடுத்த துயரத்தில் இருக்கிறேன். ஒருவேளை அவர் உயிர்த்து எழுந்து மேலேயுள்ள மணியை அடிப்பார் என்று ஏழு நாட்களாக காத்திருக்கிறேன். நீங்கள் திறக்கப்போவதாக கூறுகிறீர்களே?"

பெட்டியை நோக்கி நகர்ந்த சாம் நின்றார். "என்ன... ஏழு நாட்களாகவா? அப்படியானால் உங்கள் சகோதரர் இறந்து ஏழு நாட்களாகிவிட்டதா"

இறந்து ஒரு வார காலம் ஆகிவிட்டதால், உடல் கெட்டுப் போயிருக்கும். அதைத் திறந்து பார்ப்பதா என்று அவர் தயங்குவது தெரிந்தது.

"ஆம், ஏழு நாட்களாகி நன்றாக இருந்த எனது சகோதரருக்கு கொடிய தொற்றுநோயான கொலரா வந்து இறந்துவிட்டார். அவரது உடலில் இருந்து கொலரா நோய்க்கிருமிகள் தொற்றிக்கொள்ளும் என்று உறவினர்கள் யாருமே சகோதரனின் உடலைக் கூட பார்க்கவரவில்லை" என்றார் மிஸ் மரியம் கண்களைத் துடைத்தபடி.



சாம் திகைத்துப் போனார். "என்ன? கொலராவா? கிருமி தொற்றுமா?"

"அப்படித்தான் வைத்தியசாலையில் சொன்னார்கள்"

பெட்டியைத் திறப்பதா வேண்டாமா என்று சாமின் மனதுக்குள் ஒரு போராட்டமே நடந்தது. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்.

"எனது கடமையில் இருந்து தவற முடியாது. ரிஸ்க் எடுத்துப் பெட்டியைத் திறக்கத்தான் போகின்றேன்" என்றபடி பெட்டியை நோக்கித் திரும்பினார்.

அப்போது, சவப்பெட்டிக்கு மேலிருந்த மணி ஒலித்தது!

"அற்புதம்... அற்புதம்... எனது சகோதரர் உயிர்பெற்றுவிட்டார்" என்றார் மிஸ் மரியம் பரவசமாக.

சவப்பெட்டிக்கு மேலேயிருந்த மணி ஒருதடவைதான் அடித்தது.

"ஓ என்னுடைய சகோதரன் உயிருடன் இருக்கிறார். கடவுள் கண்களைத் திறந்துவிட்டார்" என்று மிஸ் மரியம் உணர்ச்சி மேலிடச் சொன்னதைக் கேட்டு ரெயில்வே பிளாட்போர்மில் நிறையப் பேர் கூடிவிட்டார்கள்.

"உடனே சவ்ப்பெட்டியின் மூடியைத் திறவுங்கள். உயிருடன் இருக்கும் என் சகோதரனை நான் பார்க்க வேண்டும்" என்று மிஸ்மரியம் கத்தத் தொடங்கினார்.

ரெயில்வே நிர்வாகம் புதிதாக நியமித்திருந்த காவலரும், ரெயில்வே கார்ட் பேர்க்ஸூம் சவப்பெட்டியின் மூடியைத் திறக்கத் தொடங்கினார்கள். புதிதாக நியமிக்கப்பட்டிருந்த காவலர் மகா குழப்பத்தில் இருந்தார்.

"ஒருவேளை இந்தப் பெண் நம்புவதுபோல அவரது சகோதரர் உயிர்த்துவிட்டாரோ"

ஆனால், ரெயில்வே கார்ட் பேர்க்ஸூக்கு அந்த சந்தேகமேதும் கிடையாது. உள்ளே என்ன இருக்கிறது என்பது அவருக்கு தெரியும் அல்லவா... எனவே தாமும் ஆச்சரியப்படுவதுபோல நடித்தார்.

சில நிமிடங்களின் பின்னர் சவப் பெட்டியின் மூடியிலுள்ள இரும்பு ஸ்குரூக்கள் அகற்றப்பட்டுவிட, பெட்டியின் மூடி திறக்கப்பட்டது. உடனே, பிளாட்போர்ம் முழுவதும் கடும் துர்நாற்றம்.

மூக்கைப் பிடித்தபடி பெட்டிக்குள் எட்டிப்பார்க்க உள்ளே இறந்துபோன பிரேதம்! அதிலிருந்து துர்நாற்றம்.

மிஸ் மரியம் நினைத்ததுபோல, அவரது சகோதரர் உயிர்த்து எழவில்லை.

பிரேதம்போல படுத்திருந்தவர் ரொபேர்ட் என்பதையோ, துர்நாற்றம் வீசுவது, அவரது உடலுக்கு கீழே மறைத்து வைக்கப்பட்டிருந்த (சில தினங்களுக்குமுன்) இறந்து போன பூனையில் இருந்து என்பதையோ, அங்கிருந்த யாரும் அறிந்திருக்கவில்லை.

"நீங்கள் கவலைப்படக் கூடாது மிஸ்... காற்று அடித்ததால் சவப் வெட்டிக்கு மேலேயிருந்த மணி ஒலித்திருக்கவேண்டும். உங்கள் சகோதரரை ஆண்டவர் தன்னுடன் சேர்த்துக் கொண்டுவிட்டார். அவர் சொர்க்கத்துக்குப் போயிருப்பார். நீங்கள் மனதைத் தேற்றிக்கொள்ளுங்கள்" என்று தன்னிடமிருந்த கைக்குட்டையைக் கொடுத்து மிஸ் ம்ரியத்தைச் சமாதானப் படுத்திக்கொண்டிருந்தார் புதிய காவலர்.



## முதலாவது பிரமாண்ட ரெயில் கொள்ளை

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்



154

**பா.ராகவன்**

**சற்றே** நிதானத்துக்கு வந்த ஹமாஸ், அவர் சொல்வதில் உள்ள நியாயத்தை உணர்ந்து, தங்களது தலைவர் யாரென்பதை அறிவிப்பதை அத்துடன் நிறுத்திக்கொண்டது.

ஆனாலும் சீனியாரிடி அடிப்படையில் மெஹ்மூத் அல்ஸாஹர்தான் அடுத்த தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கவேண்டும் என்று சொன்னது மொஸாட். துணைத்தலைவராக இஸ்மாயில் ஹனியாவும் அவருக்கு அடுத்தபடியாக சயீது அஷசியாமும் இருப்பார்கள் என்றும் சொல்லி, வைத்த குறிக்காக இன்னும் வலை விரித்திருக்கிறார்கள்.

ஷேக் அகமது யாசினின் தலைமையில் ஹமாஸ் தனது சமூகப் பணி முகத்தைக் கிட்டத்தட்ட கழற்றிவைத்து விட்டு, முழுநேர குண்டுவெடிப்பு இயக்கமாக உருமாறத் தொடங்கிய அதே சமயத்தில், யசீர் அரபாத், இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் பி.எல்.ஓ.வுடன் பொதுமக்களும் கை கோக்கும் விதத்தில் ஒரு புதிய திட்டத்தைத் தயார்செய்து



கொண்டிருந்தார்.

கத்தியின்றி, இரத்தமின்றி. யுத்தம் செய்யும் திட்டம் ஏதும் அப்போது அவருக்கு இல்லை. மாறாக கத்திக்கு பதில் கல்லும் துப்பாக்கிக்குப் பதில் தீக்குச்சியும் ஆயுதமாகலாம் என்று முடிவு செய்தார். மேலோட்டமான பார்வையில் வெறும் மக்கள் எழுச்சி நீதிகேட்டு நெடும்பயணம் என்பது போலத்தான் தெரியும். எப்படியும் இஸ்ரேலிய இராணுவம் தாக்குவதற்கு வரும். பதில் தாக்குதலுக்குத் துப்பாக்கி எடுக்காமல் கற்களைக்கொண்டு தற்காப்பு ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம் என்று நினைத்தார்.

இது மக்கள் மத்தியில் இன்னமும் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுத் தரக்கூடும். மேலும், பாலஸ்தீன் விடுதலை என்பது ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் கரத்தில் மட்டும் இல்லை என்று அரபாத் நினைத்தார். இயக்கம் முன்னின்று போராடும். ஆனால், பொது மக்களின் பங்களிப்பு இருந்தால்தான் திட்டம் வெற்றியடையமுடியும் என்பது அவரது கருத்து.

இந்த எண்ணத்தின் விளைவாகப் பிறந்ததுதான் இண்டி∴பதா (Intifada). இந்த அரபுச் சொல்லுக்கு எழுச்சி, உலுக்கிப் பார்த்தல், பொங்கியெழுதல் என்று பலவிதமாகத் தமிழில் அர்த்தம் சொல்லலாம். இஸ்ரேல் அரசையும் இராணுவத்தையும் உலுக்குவதுதான் அரபாத்தின் நோக்கம். பி.எல்.ஓ. அதனைச் செய்யாமல், பொதுமக்களை முன்னிறுத்திச் செய்யலாம் என்கிற யோசனைதான் முக்கியமானது. உலகம் முழுவதும் 'இண்டி∴பதா, இண்டி∴பதா' என்று உச்சரிக்கும் விதத்தில் இந்த எழுச்சி மிகப்பெரிய வெற்றியை அவருக்குத் தேடித்தந்தது.

தோற்றத்தில் இது ஓர் அறப் போராட்டம்போல் இருந்ததால், அரபாத்தின் எழுச்சி ஊர்வலங்களில் நடைபெறும் கலவரங்களும் கண்ணீர்ப் புகைகுண்டு வீச்சுகளும் தீவைப்புச் சம்பவங்களும் சர்வதேச அரங்கில் இஸ்ரேலுக்குத்தான் அவப்பெயரைத் தேடித்தந்தன. உண்மையில் அரேபியர்களும் இந்த இண்டி∴பதாவில் ஏராளமான தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கலவரத்தை ஆரம்பித்து வைத்ததே அரேபியர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள் என்பது சமகால சரித்திரம் சுட்டிக்காட்டும் உண்மை.

அரபாத்தின் எண்ணத்தில் உதித்த இண்டி∴பதா, முதன் முதலில் செயலுக்கு வந்த ஆண்டு 1987. இதற்கு ஒரு வலுவான பின்னணியும் இருந்தது. அந்த வருடம் ஒக்டோபர் முதல் திகதி, காஸாவில் ஒரு சம்பவம் நடந்தது. இஸ்ரேலிய இராணுவம் அன்றைய தினம், பலஸ்தீனியன் இஸ்லாமியக் ஜிகாத் என்னும் அமைப்பைச் சேர்ந்த ஏழு போராளிகளைச் சுட்டுக்கொன்றது.

**(தொடரும்)**

---

புதிய தொடர் 04



# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அழிவு யுத்தத்துக்கும், வன்முறைகளுக்கும் முகங்கொடுத்த ஒரு இனத்தை ஆயுதங்களே அடக்கியும், ஆண்டும் வந்துள்ளன. அதற்கு மக்கள் பழகியும் விட்டிருந்தார்கள்.**

**இப்போது ஆயுதங்கள் விலகிவிட்டுள்ள நிலையில் கொள்ளைக் கோஷ்டிகளும், வன்முறைக் கும்பல்களும், ஊர்ச் சண்டியர்களும், வாள்வெட்டு வீரர்களும் அதிகரித்துள்ளனர். சமூகம் ஒரு கலாசார பிறழ்வை சந்தித்திருப்பதுபோல் இருக்கின்றது.**

**எவ்வாறான பாதை நமக்காக திறக்கப்படுகின்றதோ அதில் எவ்வாறு பயணிக்கவேண்டும் என்பதை நாமே தீர்மானிக்கவேண்டும். தென் ஆபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக் கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)**
**யாழ்ப்பாணம்**

“**இனி**மேலும் குனுவில் இருந்து பயனில்லை கிளம்பு மகனே” என்று அம்மா சொல்லி விட்டதும் மண்டேலா தன் பொருட்களை மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு அம்மாவைப் பின்தொடர்ந்து நடந்தான்.

தன் கிராமத்தை, தான் ஓடியாடி விளையாடிய புல்வெளியை திரும்பித் திரும்பி பார்த்தபடி கண்ணில் நீர் மல்க நடந்துசென்றான். என்ன பேசுவது என்று தெரியாமல் இருவரும் அமைதியாக நடந்துசென்றனர்.

மதியத்திற்குப் பின் மக்கீஸ்வனி எனும் கிராமத்தை சென்றடைந்தனர். அங்கு தெம்பு மக்களின் தலைமையகம் அரண்மனைபோல் காட்சியளித்தது.

அக்கட்டிடத்தின்முன் பலர் கூடி இருந்தனர். அவர்களுடன் மண்டேலாவும் தாயாரும் சென்று நின்றுகொண்டார்கள். சிறிது நேரத்தில் ஒரு மோட்டார் கார் (∴போர்ட் எ8) அந்த வீட்டுக்குள் நுழைந்தது. சூட் அணிந்த ஒரு மெலிந்த நபர் காரிலிருந்து இறங்கினார். அங்கு கூடியிருந்த அனைவரும் கைகூப்பி மரியாதை செய்தனர். மண்டேலாவோ யார் என்று புரியாமல் அம்மாவைப் பார்த்தான். அவனின் தலையை வருடியவாறு “மகனே இனி நீ இங்குதான் தங்க வேண்டும். காரிலிருந்து இறங்கிச் சென்றவர்தான் உன்னை வளர்க்கப் போகிறார். அவர் பெயர் ஜோங்கிந்தாபா” என்று கூறினார்.

ஜோங்கிந்தாபாதான் அப்போதைய தெம்பு இன அரசர். காட்லாவுக்கு ரொம்ப வேண்டியவர். இதற்கு முன் அரசராக இருந்த ஜோங்கிலிஸ்வி (ஜோங்கிந்தாபாவின் தந்தை) மரணமடைந்தபோது அந்த அரசருக்கு பல மனைவிகளும் நிறைய மகன்களும் இருந்ததால் அடுத்த பதவிக்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்று நிறைய சிக்கல்கள் இருந்தன. அந்த சந்தர்ப்பத்தில் அரசவை ஆலோசகராக இருந்த காட்லாதான் தீர்வு வழங்கினார். பல வாரிசுகள் இருந்தாலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர் ஜோங்கிந்தாபா ஒருவரே.

ஆதலால் அவரையே அரசராக்குவோம் என்று தீர்ப்பு வழங்க ஜோங்கிந்தாபாவை அரசராக்கினர். அன்றிலிருந்து அரசர் ஜோங்கிந்தாபா காட்லாவுக்கு நன்றிக்கடன்பட்டவராக இருந்தார். அதனால்தான் காட்லாவின் மரணச் செய்தி கேள்விப்பட்டதும்,



மண்டேலாவைத் தானே வளர்த்து பெரிய பதவியில் அமரவைப்பதாக கூறி மண்டேலாவின் அம்மாவுக்கு அழைப்புவிடுவித்தார்.

**(தொடரும்)**




# சர்ச்சையில் சிக்கியிருக்கும் அருங்காட்சியகம்

**"மார்க்க** அறிஞர்களைக் கொச்சைப்படுத்தாதே, சிலைகள் இணைவைத்தலுக்கு இட்டுச்செல்லும், முஸ்லிம்களின் மதஉரிமையை மதித்து நட, மக்களை பெரிய பாவத்தை நோக்கி வழி நடத்தாதே" உள்ளிட்ட இன்னும் பல கோஷங்கள் அடங்கிய பதாதைகளை காத்தான்குடியில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் தாங்கி இருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியில் சமீபத்தில் திறக்கப்பட்ட அருங்காட்சியகம் சர்ச்சையில் சிக்கி இருக்கின்றது. இலங்கையில் முஸ்லிம்களை மட்டும்கொண்ட வர்த்தகப் பிரதேசம் என்று பெயரெடுத்த இந்த நகரத்தில் 2015, ஏப்ரல், 15 ஆம் திகதி ஒரு அருங்காட்சியகம் பெருத்த எடுப்பில் திறந்துவைக்கப்பட்டது.

ஆனால் அந்த அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்ட ஒரு சில நாட்களுக்குள்ளாகவே பெரிய சர்ச்சையில் மாட்டியிருக்கின்றது. இது இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள முதலாவது இஸ்லாமிய அருங்காட்சியகம் என்று அதனை உருவாக்கியவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டாலும் இது இஸ்லாமிய வரையறைகளைத் தாண்டியுள்ளது என்ற வாதங்கள் முன்வைக்கப்படுவதினாலேயே புதிய சர்ச்சை சூடு பிடித்துள்ளது.

இலங்கை முஸ்லிம்களின் கலாசார மரபு, வழிபாடு, வர்த்தகம், உணவுப் பழக்கவழக்கங்கள் எனப் பல்வேறுபட்ட வரலாற்று சான்றுகளையும் கலாசார அடையாளங்களையும் பிரதிபலிக்கும் அம்சங்களைக் கொண்டதாக உருவங்களைத் தாங்கியநிலையில் இந்த நூதனசாலை அமைக்கப்பட்டுள்ளதே இப்பொழுது உருவெடுத்துள்ள புதிய பிரச்சினைக்குக் காரணமாகும்.

தேசிய மரபுரிமை அமைச்சின் உதவியுடன் காத்தான்குடி நகரசபையே இந்த அருங்காட்சியகத்தை அமைத்தது. இந்த அருங்காட்சியகத்தில் உருவச் காணப்படுவதாக பிரதேச ஜம்இய்யதுல் உலமா சபை இந்த விவகாரத்தை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கவனத்திற்குகொண்டு சென்றது.

இது தொடர்பான மார்க்கத் தீர்ப்பை (பத்வா) வழங்குமாறும் காத்தான்குடிப் பிரதேச ஜம்இய்யதுல் உலமா சபை கோரி நின்றது. ஆனால், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை இந்த விவகாரத்தை ஆறஅமர ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு முன்னதாகவே காத்தான்குடி நகரசபை இந்த அருங்காட்சியகத்தை அவசர அவசரமாக பொதுமக்களின் பார்வைக்குத் திறந்துவிட்டுள்ளார்கள் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

இதனால் சீற்றமடைந்த அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை இந்த விவகாரம் தொடர்பாக காத்தான்குடி நகரசபை தலைவருக்கு அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜம்இய்யாவின் பத்வா (தீர்ப்பு)க் குழுவினர் இந்த அருங்காட்சியகத்தை நேரில் வந்து பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாத நிலையில் 15.04.2015 அன்று நூதனசாலையை மக்கள் பார்வைக்குத் திறந்துவிட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் காத்தான்குடி நகரில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றிருப்பது வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் தருகின்றது என்பதை தங்களது கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம். பொதுவாக முஸ்லிம்கள் உருவச்சிலைகளை வணங்கவோ, அவற்றைக் கண்ணியப்படுத்தவோ அல்லது ஞாபகச் சின்னங்களாக வைத்திருக்கவோ இஸ்லாம் அனுமதித்து இருக்கவில்லை.

இது விடயத்தில் ஹதீஸ்கள் எனப்படுகின்ற வரலாற்று ஆதாரங்களில் மிகக் கடினமான எச்சரிக்கைகள் வந்துள்ளன என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பத்வா (தீர்ப்பு)க்



குழுவின் இணைப்பாளர் எம்.ஏ.எம். ஹாரிஸ் ரஷாதி இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

இந்த அருங்காட்சியகம் முன்னாள் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், மாவட்ட அரசாங்க அதிபர் சறோஜினி தேவி சார்ள்ஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்களால் திறந்துவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### நூதனசாலையிலுள்ள சிலைகளை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

காத்தான்குடியில் அமைக்கப்பட்டுள்ள பூர்வீக நூதனசாலையை இஸ்லாமிய வரையறைக்குட்பட்ட வகையில் மாற்றி அமைக்கக் கோரும் "மக்கள் அழுத்தப் போராட்டம்" கடந்த 2015.05.13ஆம் நாளன்று காலை காத்தான்குடி நகரசபை முன்பாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியால் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஏற்கெனவே ஒரு துண்டுப் பிரசுரத்தை மக்கள் பார்வைக்காக வெளியிட்டிருந்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

காத்தான்குடியில் அமைக்கப்பட்டுள்ள பூர்வீக நூதனசாலை இஸ்லாமிய வரையறைகளுக்கு விரோதமான வகையில் அமைக்கப்பட்டுள்ளமை பல்வேறு மட்டங்களில் விமர்சனங்களையும் விசனங்களையும் தோற்றுவித்துள்ளது. இதுதொடர்பான கண்டனங்களும் நாளுக்கு நாள் வலுப் பெற்றும் வருகின்றன.

இதுவிடயமாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா, தஃவா அமைப்புக்கள் என்பன, காத்தான்குடி அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள சிலைகள் அகற்றப்படவேண்டும் எனவும், இஸ்லாத்தில் உருவச்சிலைகளை வைத்திருப்பதற்கான அனுமதிவழங்கப்படவில்லை எனவும் மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த நூதனசாலையை அமைப்பதற்கு இடம் மற்றும் அனுமதி என்பனவற்றினை வழங்கிய காத்தான்குடி நகரசபை இது தொடர்பில் பாராமுகமாக செயற்படுவதனையிட்டு நாம் வேதனைப் படுகின்றோம்.

இது விடயமாக கடந்த 23.04.2015 அன்று இடம்பெற்ற நகரசபை அமர்வின் போது நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் (NFGG) நகர சபைப் பிரதிநிதிகளால் நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ள சிலைகளை அகற்றக்கோரும் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும் அந்தக் கூட்டத்தில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சமர்ப்பித்த பிரேரணையை ஏற்கமறுத்த நகரசபைத் தவிசாளர், எமது பிரதிநிதிகளின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக அடுத்த சபை அமர்வில் அதனைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாக உறுதியளித்திருந்தார்.

எனினும் அடுத்த அமர்வு தொடர்பாக நகர சபை உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலில் நாம் சமர்ப்பித்த பிரேரணை சேர்த்துக்கொள்ளப்படவில்லை. கடந்த 2015.05.15 ஆம் திகதியுடன் உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டும் விட்டன.

சிலைகளைப் பற்றி புனித அல்குர்ஆனிலும் இறைதூதரின் வாழ்க்கை வழிமுறை ஆதாரமான ஹதீஸிலும்பின் வருமாறு கூறப்பட்டுள்ளன. மேலும் சிலைகள் என்பவைகள் மனிதர்களை வழி கெடுக்கக் கூடியவைகள் தான் என்பதை அல்குர்ஆன் சான்று பகர்கிறது.

"என் இறைவனே! நிச்சயமாக சிலைகள் மக்களில் அநேகரை வழிகெடுத்தும் விட்டன. எனவே, எவர் என்னைப் பின்பற்றுகிறாரோ அவர் என்னைச் சேர்ந்தவராவார். எவர் எனக்கு மாறு செய்கிறாரோ அவர் என்னைச் சார்ந்தவர் இல்லை. என்றாலும் நிச்சயமாக நீ மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றாய்.(14:36)

ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். (5:90).


இஸ்லாத்தின் வழிகாட்டியான நபி(ஸல்) அவர்கள் (மக்காவுக்கு) வந்தபோது, கஅபாவில் சிலைகள் இருந்ததால் உள்ளே நுழைய மறுத்து அப்புறப்படுத்துமாறு கட்டளையிட்டார்கள்.

உடனே அவை அப்புறப்படுத்தப்பட்டன. அச்சிலைகளில் (குறி பார்ப்பதற்குரிய) அம்புகளைக் கையில் தாங்கியவாறு இறைதூதர் இப்ராஹீம், இறைதூதர் இஸ்மாயீல் ஆகியோரின் உருவங்களும் இருந்தன. இதைக்கண்ட நபி(ஸல்) அவர்கள், "அல்லாஹ் இ(தைச் செய்த)வர்களை அழிப்பானாக! அல்லாஹ்வின்மீது ஆணையாக! இவ்விரு (நபிமார்களு)ம் அம்புகள் மூலமாகக் குறி பார்ப்பவர்களாக ஒருபோதும் இருந்ததில்லை என்பதை இதைச் செய்தவர்கள் அறிந்தே வைத்திருக்கிறார்கள்" என்று கூறி விட்டுக் கஅபாவில் நுழைந்தார்கள். அதன் ஓரங்களில் (நின்று) தக்பீர் கூறினார்கள் அதில் தொழவில்லை. (1601)

இதிலிருந்து சிலைகள் முஸ்லிம் சமுதாயத்தினால் பேணிப் பாதுகாத்து வைக்கப்படவேண்டியவைகள் அல்ல என்பது நிரூபணமாகிறது.








ஏ.எச்.ஏ. ஹுஸைன்





# 02ஆம் உலகப் போர் 70 ஆண்டுகள்





## ஹிட்லரின் கடைசி நிமிடங்கள்

1945, ஏப்ரல், 30ஆம் திகதி இரவு 9 மணி. "இன்று மாலை 4 மணிக்கு இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியும், அவர் மனைவியும் எதிர்ப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என்று சுவீடன் நாட்டு ரேடியோ அறிவித்தது. ரேடியோச் செய்தியை ஹிட்லர் நேரடியாகக் கேட்டார். முசோலினியின் முடிவு, ஹிட்லருக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கியது. அன்றிரவு 12 மணி, பெர்லின் நகரம் முற்றிலுமாக ரஷ்யப் படைகள் வசமாகிவிட்டது என்றும், எந்த நேரத்திலும், சுரங்க மாளிகை தகர்க்கப்படலாம் என்றும், ஹிட்லருக்குத் தகவல் கிடைத்தது. ஹிட்லரின் முகம் இருண்டது. மௌனமாக எழுந்து, தன் தோழர்களுடன் கை குலுக்கினார்.

1945, ஏப்ரல் 25ஆம் திகதி பெர்லின் நகரை ரஷ்யப் படைகள் சூழ்ந்து கொண்டுவிட்டன. விமானங்கள் குண்டு மாரிபொழிந்து கொண்டு இருந்தன. எந்த நேரத்திலும் ரஷ்யப் படைகள், பெர்லின் நகருக்குள் புகுந்துவிடலாம் என்கிற நிலை. எதிரிகளிடம் யுத்தக் கைதியாகப் பிடிபட்டால் தன்நிலை என்னவாகும் என்பதை உணர்ந்தார் ஹிட்லர். எதிரிகளிடம் சிக்குவதற்குள் தற்கொலை செய்துகொள்வதே மேல் என்ற முடிவுக்கு வந்தார். தன் முடிவைக் காதலி ஈவா பிரவுனிடம் தெரிவித்தார். ஹிட்லரின் முடிவைக் கேட்டு, ஈவாபிரவுன் திடுக்கிடவில்லை. "வாழ்விலும் உங்களுடன் இருந்தேன். சாவிலும் உங்களுடன்தான் இருப்பேன். உங்களுடன் நானும் தற்கொலை செய்துகொள்வேன்" என்றாள்.

ஏப்ரல் 27ஆம் திகதி ஹிட்லரின் பிறந்த நாளையொட்டி பாதாள அறையில் விருந்து நடந்தது. ஹிட்லரின் உயிர் நண்பனான கோயபல்ஸ் மற்றும் இராணுவத் தளபதிகள் வந்திருந்தனர். ஹிட்லருக்கு பிறந்த நாள் வாழ்த்துப் பாடலை ஈவாபிரவுன் பாடினாள். மறுநாள், ஏப்ரல் 28ஆம் தேதி ஹிட்லர் ஈவாபிரவுன் திருமணம் நடந்தது. அன்று காலையிலேயே, தன் அறையை அலங்கரிக்குமாறு உதவியாளர்களுக்கு ஹிட்லர் உத்தரவிட்டார். அதன்படி அறை அலங்கரிக்கப்பட்டது.

சட்டப்படி திருமணப் பதிவு செய்ய நகரசபை அதிகாரி அழைக்கப்பட்டார். திருமணப் பதிவு பத்திரத்தில் ஹிட்லரும், ஈவாபிரவுனும் கையெழுத்திட்டனர். கோயபல்சும், மற்றொருவரும் சாட்சிகளாக கையெழுத்திட்டனர். பிறகு விருந்து நடந்தது. ஹிட்லரின் நண்பர்கள் மது அருந்தினார்கள். ஹிட்லர் தேனீர் அருந்தினார். தங்கள் வாழ்க்கை இன்னும் சில நாட்களில் முடியப்போகிறது என்பதை அறிந்திருந்த அவர்கள், கவலையை மறக்க ஆடிப்பாடினார்கள். விடிய விடிய கேளிக்கைகள் நடந்தன. காலை 6 மணிக்குத்தான் ஹிட்லரும், ஈவாவும் படுக்கச்சென்றனர்.

காலை 11 மணிக்கு, தன் உயிலை எழுதும்படி மனைவி ஈவாவிடம் கூறினார் ஹிட்லர். அவர் கூறக்கூற ஈவா எழுதிய உயில் வருமாறு: "வாழ்விலும், தாழ்விலும் என்னோடு இருந்து என் இன்பதுன்பங்களில் எல்லாம் பங்குகொண்ட ஈவா பிரவுனை என் வாழ்வின் கடைசிக் கட்டத்திலாவது மணந்துகொண்டு கௌரவிக்கவேண்டுமென்று முடிவுசெய்தேன். அதன்படி மணந்து கொண்டேன். நாங்கள் இறந்தபிறகு, எந்த ஜெர்மன் நாட்டு மண்ணுக்காகக் கடந்த 12 ஆண்டு காலமாகப் பாடுபட்டு வந்தேனோ, அந்த ஜெர்மன் மண்ணிலேயே என்னையும், ஈவாவையும் உடனே எரித்துவிடவேண்டும். இதுவே என் கடைசி ஆசை. என் சொத்துக்கள் எல்லாம் எனக்குப்பிறகு என் கட்சிக்கு சேரவேண்டும். கட்சி அழிந்துவிட்டால் நாட்டுக்குச் சேரவேண்டும்." இதுவே ஹிட்லரின் உயில்.

அன்று மாலை தன் தளபதிகள், அமைச்சர்கள், அந்தரங்க உதவியாளர்கள் கூட்டத்தை ஹிட்லர் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

"ஜெர்மனி நாட்டு மக்கள் எப்போதும் போராடிக் கொண்டிருக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கொஞ்சமும் கிடையாது. சமாதானத்தையே விரும்புகிறேன். போருக்குக் காரணம் நானல்ல. யூதர்கள்தான். ஜெர்மனி நாட்டு மக்களின் வீரத்திற்கும், தேசபக்திக்கும் இந்தப்போர் மிகச்சிறந்த எடுத்துக் காட்டு. இன்று இல்லாவிட்டாலும் நாளை ஜெர்மனி வெற்றிபெறும். இந்தப் போரில் நான் இறக்கநேர்ந்தால், மகிழ்ச்சியுடன் மரணத்தைத் தழுவுவேன். ஒருபோதும் எதிரிகளின் கையில் சிக்கி அவமானம் அடையமாட்டேன். இது உறுதி". இவ்வாறு ஹிட்லர் கூறினார்.

பின்னர், நாட்டுத் தலைவர் என்ற முறையில் மக்களுக்கு இறுதிச் சாசனம் ஒன்றை எழுதினார். அந்தச் சாசனம் வருமாறு: "முதல் உலகப்போரில் ஒரு சாதாரண போர் வீரனாக கலந்து கொண்டவன் நான். அது நடந்து 30 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஜெர்மனி மண்ணின்மீதும், மக்கள்மீதும் நான் கொண்ட பற்றும், பாசமும்தான் என்னை வழிநடத்தின. கடந்த 30 ஆண்டுகளாக என்சக்தி முழுவதையும் என் தாய்நாட்டின் மேன்மைக்காகச் செலவிட்டிருக்கிறேன். இந்தப் போருக்கு நானே மூலகாரணம் என்று யாரும் நினைக்கவேண்டாம். ஏனென்றால் போர்வெறி கூடாது. ஆயுதக் குறைப்புச் செய்யடும் என்று நானே வலியுறுத்தி இருக்கிறேன். முதல் உலகப் போருக்குப் பிறகு இப்படி இரண்டாவது உலகப்போர் மூளும் என்று நான் சற்றும் நினைக்கவில்லை. எப்படியோ போர் மூண்டுவிட்டது. இந்தப் போரினால் நம் நாடு சந்தித்த பயங்கர விளைவுகள், நாசமாக்கப்பட்ட பிரமாண்டமான மாளிகைகள், தரைமட்டமாக்கப்பட்ட கலைப்பம்சம் மிக்க நினைவுச் சின்னங்கள் யாவும் நம்மீது உலக நாடுகள் நடத்திய கோரத் தாக்குதலை நம்முடைய பிற்கால சந்ததியினருக்கு உணர்த்திக்கொண்டு இருக்கும். இந்தப் போருக்குக் காரணமானவர்களைப் பார்க்கும் போதெல்லாம் ஒவ்வொரு ஜெர்மன் இளைஞனுக்கும் உணர்ச்சியும், எழுச்சியும் ஏற்படும். இவ்வாறு இறுதிச்சாசனம் எழுதிக் கையெழுத்திட்டார் ஹிட்லர்.

பிறகு தன் அந்தரங்க உதவியாளரை அழைத்து, "நானும் ஈவாவும் ஒன்றாக இறந்துவிடப்போகிறோம். நாங்கள் இறந்த பின், எங்கள் உடல்களை ஒரு போர்வையில் சுருட்டி, பெற்றோல் ஊற்றி எரித்துச் சாம்பலாக்கிவிடுங்கள். எங்கள் அறையில் உள்ள கடிதங்கள், டைரிகள், என் உடைகள், என் பேனா, கண்ணாடி முதலிய பொருள்களை சேகரித்து, ஒன்றுவிடாமல் எரித்துவிடுங்கள்" என்று கூறிவிட்டு, மனைவியையும் அழைத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றார். அறைக்கதவு சாத்தப்பட்டது. வெகுநேரமாகியும் கதவு திறக்கப்படவில்லை.

ஹிட்லரும் ஈவாவும் என்ன ஆனார்கள் என்று வெளியே இருந்தவர்களுக்குத் தெரியவில்லை. வெளியே நீண்டநேரம் காத்திருந்த மந்திரிகளும், தளபதிகளும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றனர்.

### மனைவியுடன் ஹிட்லர் தற்கொலை

ஒரு சோபாவில், உட்கார்ந்த நிலையில் ஹிட்லரின் உயிரற்ற உடல். அவர் காலடியில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அதன் நுனியிலிருந்து புகை வந்து கொண்டிருந்ததால், அவர் சற்று நேரத்துக்கு முன்தான் தன்னைச் சுட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்று அனுமானிக்கமுடிந்தது. அவருடைய வலது காதுக்கு கீழ் அரை அங்குல அளவுக்கு துவாரம் விழுந்து, அதிலிருந்து இரத்தம் கொட்டிக்கொண்டு இருந்தது. ஹிட்லர், துப்பாக்கி முனையை வாய்க்குள் வைத்து சுட்டதால்தான், குண்டு காதுக்கு அருகே துளைத்துக் கொண்டு சென்றிருக்கவேண்டும் என்று தளபதிகள் கருதினார்கள்.

ஹிட்லரின் வலது கரம் ஒரு புகைப் படத்தை மார்போடு அணைத்தபடி இருந்தது. அந்தப் படம், ஹிட்லரின் தாயாரின் புகைப்படம். தாயின்மீது ஹிட்லர் கொண்டிருந்த பாசத்தை எண்ணி அவர் நண்பர்கள் கண்ணீர் சிந்தினர். ஹிட்லர் உடல் இருந்த சோபாவில் சாய்ந்தபடி பிணமாகியிருந்தாள் அவருடைய மனைவி ஈவா. வெள்ளைப் புள்ளிகளோடு கூடிய கருநீல 'மக்சி' உடை அணிந்திருந்தாள். அவள் உடல் நீலம் பாய்ந்திருந்தது.

**தொகுப்பு**
**வேணு கிருஸ்ணா**

எனவே அவள் சயனைட் விஷம் சாப்பிட்டிருக்கவேண்டும் என்பது புலனாகியது. ஹிட்லர் உடலையும், ஈவா உடலையும் உதவியாளர்கள் ஒரு கம்பளிப் போர்வையில் சுற்றினார்கள். பிறகு அந்த உடல்களை அந்த அறையிலிருந்து தலைமைச் செயலகத் தோட்டத்திற்கு தூக்கிக் கொண்டுபோனார்கள். அங்கே பெற்றோலையும், எரிவாயுவையும் கொண்டு இரு உடல்களையும் எரித்துச் சாம்பலாக்கினார்கள். சில மணிநேரம் கழித்து அங்குவந்த ரஷ்யப் படையினர் ஹிட்லரைக் காணாமல் திகைத்துப் போனார்கள். அவர் தற்கொலை செய்துகொண்டதும் பிணம் எரிக்கப்பட்டதும் பிறகுதான் தெரிந்தது. எனினும் ஹிட்லர் சாகவில்லை, தலைமறைவாக இருக்கிறார் என்று நீண்டகாலம் நம்பியவர்கள் ஏராளம்!

### 70ஆவது வெற்றிவிழாவை கொண்டாடும் ரஷ்யா

இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்றதன் 70ஆவது ஆண்டுவிழாவை கொண்டாடும் விதமாக ரஷ்யாவில் பிரமாண்ட இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. இதில் இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி உட்பட உலகின் முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனியின் நாஜிப்படையை வென்றதன் 70ஆம் ஆண்டு நினைவு தின பேரணி ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் கொண்டாடப்பட்டது. இதற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கலந்துகொண்ட பிரமாண்ட அணிவகுப்பு நடைபெற்றது. செஞ்சதுக்கத்தில் நடந்த இந்த அணிவகுப்பில் ராணுவ வீரர்களும், ரஷ்யாவின் புதுமையான இராணுவ தளபாடங்களும் இடம்பெற்றன. இந்த அணிவகுப்பில் ரஷ்ய படைகளுடன் சேர்ந்து முதல் முறையாக இந்தியா மற்றும் சீன படையினரும் கலந்துகொண்டனர். இதில் சில வீரர்கள் இரண்டாம் உலக போர் காலத்து சீருடைகள் அணிந்து அணிவகுப்பில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் சீன அதிபர் ஜி ஜின்பெங், இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, ஐ.நா பொதுச்செயலாளர் பான் கி மூன் மற்றும் தென்னாபிரிக்கா, கியூபா, வெனிசுலா, எகிப்து உட்பட 20க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டு அணிவகுப்பை பார்வையிட்டனர். அணிவகுப்பை தொடர்ந்து போர் விமானங்களின் சாகசங்களும் இடம்பெற்றன. இதனிடையே இந்த அணிவகுப்பு நிகழ்ச்சியை மேற்கத்திய நாட்டு தலைவர்கள் புறக்கணித்தனர்.

(22 ஆம் பக்கம் பார்க்க.)

**இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானின் ஹிரோஷிமா நகர்மீது அமெரிக்கா நடத்திய அணுகுண்டு தாக்குதலில் ஒன்றரை லட்சம் பேர் பலியாயினர். இரண்டாம் உலக போரின்போது, ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது 1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் 6ஆம் திகதி அமெரிக்க விமானத்தில் இருந்து அணுகுண்டுவீசப்பட்டது. இதில் அந்த நகரம் முற்றிலுமாக அழிந்தது. மூன்று நாட்களுக்கு பிறகு நாகசாகி நகரத்தின்மீது மீண்டும் ஒரு அணுகுண்டு வீசப்பட்டது. இந்த தாக்குதல்களில் 3 இலட்சத்து 70 ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தால் ஜப்பான் நிலைகுலைந்தது. அதன்பின் அமெரிக்காவிடம் சரண் அடைந்தது. இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.**



# அடுத்த பிரதமர் யார்?

**எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் நிமால் சிறிபால டீ சில்வா. இவர் இப்போது எதிர்க்கட்சி தலைவரா? என்று தெரியாத நிலையிலே அடுத்த பிரதமராகும் கனவுடன் இருந்தவர். இப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் பதவிக்கு முன்னாள் ஜனாதிபதியும் களமிறங்கப்போவதாக செய்திகள் அடிபடுகின்றன. மகிந்தவா? மைத்திரியா? எனும் நிலை மாறி இப்போது மகிந்தவா? நிமாலா? எனும் எதிர்பார்ப்பு மேலோங்கியும் வருகின்றது!**



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அடுத்த பிரதமர் யார்? எனும் கேள்வியே இலங்கைத் தீவில் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும்கூட பரபரப்பாகப் பேசப்பட்டுவரும் விடயமாக உள்ளது.

இப்போது பதவியிலே இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி கூட்டு இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடிக்கப் போகின்றது? இவ் ஆட்சி மீண்டும் மலருமா என்பதே இப்போதைய அரசியல் ஆய்வுக்கு உட்பட்ட விடயமாயுள்ளது.

பிரதமர் பதவியில் பலர் கண் வைத்துள்ள நிலையிலே 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தப்படி நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும், நிறைவேற்று ஜனாதிபதியிடமிருந்துவந்த சில அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு பாராளு மன்றுக்கு பதில் சொல்லக்கூடிய வகையிலான அதிகாரம் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வளவு காலமும் ஜனாதிபதியே உச்சநிலை அதிகாரங்களுடன் இருந்து வந்துள்ளார். புதிய அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமர் நிறைவேற்று அதிகார முள்ள ஒருவராக வலம் வரப்போகின்றார். இதன்காரணமாகவே பிரதமர் பதவிக்கு பலத்த போட்டி நிலவுகின்றது. இருந்தும் இம்முறைத் தேர்தலிலே மும்முனைப் போட்டி நிலவக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

ஒருவர்மீது இன்னொருவர் என்ற வகையிலே கழுத்தறுப்புக்கள், காட்டிக் கொடுப்புக்கள், கைது செய்தல் போன்ற பல விடயங்கள் இப்போதே வேகமாக நடந்தேறியும் வருகின்றது.

அரசியலிலே இந்த மாதிரியான விடயங்கள் சகஜம் என்றாலும் பழி வாங்கும் படலம் ஒன்று உருவாகி வருவதாகவே எண்ணக் கூடியதாயுள்ளது.

இந்த நிலையிலே 2015 சித்திரைக் கடைசியுடன் பாராளுமன்றின் ஆயுட்காலமும் நிறைவெய்தியுள்ளது. புதிய பாராளுமன்றின் தேர்தலானது ஆனி கடைசி என்று சொல்லப்பட்டு இது இப்போது ஆடிக் கடைசி என்று கூறப்பட்டுவருகின்றது. இருப்பினும் எப்போது நடைபெறும் என்று அரச தரப்பை தவிர்ந்த ஏனையோருக்கு தெரியவர வாய்ப்பே இல்லை. இருந்த போதிலும் பாராளுமன்றத் தேர்தல் களத்திலே குதிப்பதற்கு கட்சிகள் தயாராகி வருகின்றது.

வெல்லப்போவது யார்? எனும் ஊகங்கள் பலவாறு பேசப்பட்டாலும் பிரதமர் பதவிக்கு பலத்த போட்டியுடன்கூடிய சவால் நிறைந்த நிலையே காணப்படலாம் என்பதிலே ஐயமில்லை.

ஜனாதிபதியின் ஆட்சி முடிவுறு காலம் இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கின்ற நிலையிலே சோதிடர்களின் ஆலோசனை-யைக் கேட்டு அவசரப்பட்டு தேர்தல் ஒன்றினை நடாத்தி ஆட்சியினை இன்னொருவர் பிடித்துவிட்ட நிலையிலே முன்னாள் ஜனாதிபதி அதிகாரமற்ற ஒருவராக அரசியல் வானிலே வலம் வந்து கொண்டிருக்கின்றார்.

இவற்றிலே வேடிக்கை என்னவெனில் நாட்டிலே ஆட்சி மாற்றம் ஒன்று வேண்டும் என்பதற்காக பல கட்சிகள் ஒன்றுசேர்ந்து போட்டியிட்டு, புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால தெரிவாகியதும், ஐக்கிய தேசியக் கட்சி குறைந்தளவு உறுப்பினர் களுடன் பிரதமர் பதவியினையும் பெற்றுக் கொண்டது.

நூறு நாள் வேலைத்திட்டம் எனும் திட்டத்திற்காகவும், நாட்டின் நலன்கருதியும் தேசிய அரசு உருவானது! இருந்தும் இவற்றிலும் அங்கம்வகிப்பவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர்தான். இப்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்போவதாக எதிரணியினர் மிரட்டிவருகின்றனர்.

குறைந்த எண்ணிக்கையுடன் ஆட்சிப்பீடமேறியதுடன் நிறைவேற்று அதிகாரமிக்க முதலாவது பிரதமர் எனும் பெயரினையும் இப்போதைய பிரதமர் பெற்றுள்ள நிலையில், இது இன்னும் எவ்வளவு நாட்களுக்கு எனும் கருத்தும் நிலவுகின்றது.

அதிகாரம் கையிலே கிடைத்ததும் முன்னாள் அமைச்சர்கள், உயர்பதவியில் உள்ளவர்கள் கைதாவதும் விசாரணைக்கு அழைப்பதுமாக குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்பட்டுவருகின்றன.

இப்போதைய பாராளுமன்ற ஆட்சியில் உள்ளவர்கள் இவ்வாறு குற்றஞ்சாட்டி, கைதுசெய்யப்பட்டு வரும் நிலையிலே முன்னாள் ஜனாதிபதியும் வேறு பல அரசியல்வாதிகளும் இது ஒரு பழிவாங்கும் படலம் என்று கூறிவருகின்றனர்.

இவ்வாறு கைதுகள் தொடரும் பட்சத் திலே ஆதரவு கொடுத்துவரும் சுதந்திரக் கட்சியினரின் ஆதரவு இல்லாமல் போகவும் வழி பிறக்கலாம்.

ஜனாதிபதி ஒரு கட்சியிலும், பாராளுமன்றம் இன்னொரு கட்சியிடமும் இருப்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை யாகும். இரண்டு பதவிகளும் ஆட்சியும் ஒரே கட்சியிடம் இருந்தால், பிரச்சினை களற்ற ஒரு ஆட்சியினை நோக்கி நகரலாம் என்று மக்கள் எதிர்பார்க்கும் நிலையிலேதான் பாராளுமன்றத் தேர்தல் வரப்போகின்றது! இந்தவகையிலே பிரதமர் பதவியில் கண்வைத்து காத்திருப்பவர்கள் யார்? யார்? என்பதை உற்றுநோக்கினால் பலர் உள்ளனர் எனும் உண்மை வெளிவருகின்றது.

இருந்தும் இப்போது எதிரணியிலே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் நிமால் சிறிபால டீ சில்வா. இவர் இப்போது எதிர்க்கட்சி தலைவரா? என்று தெரியாத நிலையிலே அடுத்த பிரதமராகும் கனவுடன் இருந்தவர். இப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் பதவிக்கு முன்னாள் ஜனாதிபதியும் களமிறங்கப்போவதாக செய்திகள் அடிபடுகின்றன. மகிந்தவா?, மைத்திரியா? எனும் நிலை மாறி இப்போது மகிந்தவா? நிமாலா? எனும் எதிர்பார்ப்பு மேலோங்கியும் வருகின்றது! இருந்தும் மகிந்தாவின் பிரதமர் பதவிக்கான விண்ணப்பத்தை புதிய ஜனாதிபதி நிராகரித்துவிட்டதாகவும் செய்திகள் அடிபடுகின்றன.

ஒருவேளை பிரதமர் பதவிக்கு மகிந்த போட்டியிட சுதந்திரக் கட்சி தடை போடு மானால் புதிய அணி ஒன்றின் வாயிலாக மகிந்த போட்டியிடவும் வாய்ப்புக்கள் உள்ளன. இப்படி நடைபெறுமானால் சுதந்திரக் கட்சி பிளவுபடவும் வாய்ப்புக்கள் வரலாம்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது மகிந்த பிரதமராக வேண்டும் என்று பெரும்பான்மையின மக்கள் விரும்புவதாகவும் அவருக்கு ஆதரவு வேண்டி நடாத்தப்படும் கூட்டங்களுக்கு மக்கள் அலைமோதுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பிரதமர் பதவிக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும் போட்டியிடலாம் எனும் ஊகங்களும் வெளிவருகின்றன. இந்த ஊகம் உண்மையானால் சுதந்திரக் கட்சி சார்பிலே போட்டியிடப் போவது யார் என்பது மிக மிக முக்கியமான கேள்வியாகும்.

இந்த நிலையிலே அதிர்ஷ்டக்காற்று ஒன்று சுழன்று வீசியமையினால் பிரதமர் பதவியிலே வீற்றிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் பதவிக்கு போட்டியிட உள்ளார்.

கடந்த இருபதுக்கும் மேற்பட்ட தேர்தல்களிலே ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடைந்தே வந்துள்ளது. இருந்தும் இப்போதைய பிரதமர் எனும் வகையிலே மக்களின் ஆதரவுத்தளம் என்னவாக அமையலாம் என்பதுடன், ஜனாதிபதித் தேர்தலிலே யூ.என்.பி.யுடன் இணைந்து போட்டியிட்ட கட்சிகள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலை சந்திக்குமா? என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகும்.

ஏனெனில், ஆட்சி மாற்றம் வேண்டி ஒன்றுகூடிய கட்சிகள் இவர்களுடன இணைய முற்பட்டால் தொகுதிப் பங்கீடுகளில் பிரச்சினைகள் எளவும் வாய்ப்புக்கள் உள்ளன. இணைந்து போட்டியிட முன்வரும் கட்சிகள் கேட்கும் தொகுதிகளை வழங்காதுவிட்டால் அக்கட்சிகளின் ஆதரவு இல்லாமல் போகும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு தேசியக கட்சி எனும் வகையில் அக்கட்சி சகல மாவட்டங்களிலும் வேட்பாளர்கள் இருக்கின்றனர்.

ஏனைய கட்சிகளுக்கு தங்களின் இடங்களை விட்டுக்கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் முன் வருவார்களா? என்பதும் பிரச்சினைக் குரிய ஒன்றாகவே உள்ளது.

இந்த நிலையிலே ஜே.வி.பி. முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கட்சி என்பன தமது இருப்பிடங்களை தக்க வைத்துக்கொள்ள தனியாக போட்டியிடவே வாய்ப்புக்கள் உள்ளன. தனியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அறுதிப் பெரும்பான்மை பெறும் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியிலே பங்கெடுக்கவும் விரும்பலாம்.

இந்த நிலையிலே வடபகுதியைப் பொறுத்தமட்டிலே ஈழமக்கள் ஜனநாயக கட்சி இம்முறை தனித்து, சொந்தச் சின்னத்திலே போட்டியிடலாம் என்றும் செய்திகள் வெளியாகிவருகின்றது.

தமிழ் மக்களின் வாக்குறுதிகளை சூறையாடுவதிலே மட்டும் குறியாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை யூ.என்.பிக்கே தமது ஆதரவை வழங்கும் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.


சர்வதேசம் உன்னிப்பாக கவனித்து வருகின்றது என்று புழுகுமூட்டைகளை அவிட்டுவிடத் தொடங்கிவிட்டனர் கூட்டமைப்பினர்.

சர்வதேசம், தமிழ்த்தேசியம், என்றெல்லாம் சொல்லி வாக்குத்தேடி வெற்றியடையும் முயற்சியிலே களம் இறங்கியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியுடன் மட்டுமே கூட்டுச்சேரும் கூட்டமைப்பினர் சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றால் சேர்ந்துகொள்வார்களா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

எது எப்படி அமைந்தாலும் பெரும்பான்மை உள்ள ஒருவரே பிரதமராக வரமுடியும். அதுவும் பெரும்பான்மையின ஒருவராகவே இருக்கமுடியும்.




# மான்



துள்ளி ஓடும் புள்ளி மானின்
அழகைக் கண்டு ரசிக்கலாம் –
அதைத்
தள்ளி நின்று பார்த்து தினம்
மகிழ்ச்சி பொங்க துள்ளலாம்
மானின் இனம் ஒன்றுகூடி
வனத்தில் வசித்து வருகுது – தன்
மருளும் விழி பார்வை தன்னில்
ஆற்றின் நீரைப் பருகுது
நீண்ட கால்கள் குட்டை வாலு
மானின் அழகு கூடுது – தினம்
நெடிய தூரம் அலைந்து திரிந்து
தனது உணவைத் தேடுது
கிளைகள்போல தலையில் கொம்பு
காண மனம் தூண்டுமே – சிறு
குறையும் இன்றி மான் இனத்தை
நாமும் காக்க வேண்டுமே!


தாழிப்பனை

நீண்டகாலப் பூக்கள், சிலவகைப் பூக்கள் பல ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் பூக்கும். அவற்றில் சில...

| | |
|---|---|
| உலகில் மிகப்பெரிய பூ | -ராப்லிஷியா. |
| 7 ஆண்டுக்கு ஒரு முறை பூக்கும் பூ | -பிரம்மகமலப்பூ. |
| 12 ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் பூ | -குறிஞ்சிப்பூ. |
| 15 ஆண்டுக்கு ஒரு முறை பூக்கும் பூ | -லிம்பா. |
| 50 ஆண்டுக்கு ஒரு முறை பூக்கும் பூ | -கொக்டஸ். |
| 100 ஆண்டுக்கு ஒரு முறை பூக்கும் பூ | -தாழிப்பனை. |




# கணிதப் புதிர்

சிறுவன் ஒருவன் பத்திரிகை அலுவலகத்தில் வேலை பார்த்துவந்தான். அவன் 100 சந்தாதாரர்களைச் சேர்த்தால் அவனுக்கு போனஸ் உண்டு என உயரதிகாரி சொன்னார்.

அவனும் சந்தாதாரர்களைச் சேர்க்கத் தொடங்கினான். ஒவ்வொரு நாளும் முந்தைய நாளைவிட 3 சந்தாதாரர்களை அதிகமாகச் சேர்த்தான். எட்டாவது நாளன்று அவன் 100 சந்தாதாரர்களைச் சேர்த்து முடித்துவிட்டான். அப்படியானால் தினந்தோறும் அவன் எத்தனை சந்தாதாரர்களைச் சேர்த்திருப்பான் எனக் கணக்கிட்டுச் சொல்லுங்கள் பார்ப்போம்.

விடை: முதல் நாளில் 2, அடுத்த நாளில் 5, அடுத்து 8, 11, 14, 17, 20 என அதிகரித்து இறுதி நாளில் 23. அதன் கூட்டுத்தொகை:
2+5 +8 +11 +14+17+ 20+23 = 100

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உங்களைப் போலொரு அண்ணா படிப்பிலும், விடாமுயற்சியாலும் விஞ்ஞானியாக உயர்வதைக் கூறும் குட்டித் தொடர்கதை...



பரமண்ணை

# "விளையும் பயிரின் முளை!"

**சேகரனின்** சிந்தனைகளில் இப்பொழுதெல்லாம் சிறிய சிறிய மாற்றங்கள் தோன்றிக் கொண்டு இருந்தன.

அது அவனுக்கே விளங்கியும் இருந்தது!

"ஏன் அப்படி மாறுபடவேண்டும்" தன்னிடமே அவன் கேட்டுக்கொண்டான்.

அவனால் அந்தப் புதிருக்கு விடை கண்டுகொள்ள இயலவில்லை.

சேகரனுக்கு புத்தகங்கள் வாசிப்பது என்றால் கொள்ளை ஆசை! அதுவும் விஞ்ஞானம் சம்பந்தான புத்தகங்களெனின் அவனுக்கு உயிர்.

எழுதுவினைஞரான தந்தையார் சோமசுந்தரத்திடம் சொல்லிவிட்டு அப்புத்தகங்களை வரவழைத்து படித்து மகிழ்வான் அவன்.

சேகரனுக்கு எவ்வித விளையாட்டுக்களிலும், பொழுது போக்குகளிலும் பிடிப்பில்லை. விளையாடுவதில் அவனுக்குக் கிஞ்சித்தும் விருப்பம் கிடையாது.

அவனது பொழுதுபோக்கெல்லாம். விஞ்ஞான நூல்களைப் படிப்பதும். அவற்றால் சமுதாயத்திற்கு கிடைக்கும் நன்மைகளை உணர்ந்து வியந்து போவதுந்தான்.

சனிக்கிழமை ஆதலால் காலையிலே தகப்பனார் முதல் நாள் வாங்கி வந்து கொடுத்திருந்த விஞ்ஞானமும் வாழ்க்கையும் என்னும் நூலை படிக்கத் தொடங்கியவன் சற்று முன்பு தான் ஓய்ந்தான்.


அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்ததில் இருந்துதான். அவனுடைய



சிந்தனைகளிலும் அத்தகைய மாற்றம் தோன்றி இருந்தது. சேகரன் இதுவரை அதுபோன்ற நூற்றுக்கணக்கான நூல்களைப் படித்து முடித்தும் இருந்தான்.

(தொடரும்)

# சார்லஸ் டார்வின்



உயிரியல் துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய பரிணாம சித்தாந்தத்தைத் தந்தவர் சார்லஸ் டார்வின். பீகிள் என்ற கப்பலில் நெடும் பயணம் நடத்தி மேற்கொண்ட பல்வேறு ஆய்வுகளின் முடிவில் 1859இல் உயிரினங்கள் எவ்வாறு தோன்றின என்ற ஒரிஜின் ஓப் ஸ்பீசஸ் என்னும் புகழ் பெற்ற நூலை வெளியிட்டார் டார்வின்.

பன்னிரெண்டு வருடங்களுக்குப் பின்பு டிசன்ட் ஓப் மேன் என்ற நூலையும் எழுதினார். மதவாதிகளின் கருத்துக்களை தவறென விஞ்ஞானப்பூர்வமாக நிரூபித்த விஞ்ஞானி சார்லஸ் டார்வின் ஆவார். ஒவ்வொரு உயிரினமும் இந்த உலகத்தில் போராடித்தான் வாழவேண்டும். அப்பொழுதுதான் இந்த சமூகத்தில் இடம்பெற முடியும் எனக் கூறியவர் சார்லஸ் டார்வின்.

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 01.06.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1097**

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1095**


ஆர்.மாளவிகா,
பிரதான வீதி, கிருலப்பனை,

பரிசுக்குரியவர்: 1095

பாராட்டுக்குரியவர்கள்

01. ப.மதனப்பிரியா, உடப்பு, புத்தளம்.
02. ல.தர்சன், பிரதான வீதி, நுவரெலியா.
03. இ.நஸ்ரியா, கோப்பாய் கிழக்கு, கோப்பாய்.
04. டி.டொறின் மரீனா, கோவில் வீதி, மன்னார்.
05. ச.லக்கியா, ரெட்பானா, விசுவமடு.
06. எம்.பார்கவி, தென்னக்கும்புர, கண்டி.
07. என்.வர்சா, கச்சாய் றோட், கொழகாமம்.
08. எம்.எம்.இஷாரா, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.

# சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



# கண்டுபிடிப்புக்கு உதவும் கருவிகள்

▲ மின்சக்தியை சேமித்து, பின்னர் பயன்படுத்த உதவும் கருவி எது? - அக்யுமுலேட்டர்

▲ கதிரியக்க பொருட்கள் உள்ளனவா எனக் கண்டுபிடிக்க உதவும் கருவி எது? - அட்மாஸ்கோப்

▲ மின்னோட்டத்தின் வலிமையை அளக்க உதவும் மின்னளவி எது? - அம்மீட்டர்

▲ ஆகாய விமானம் பூமியிலிருந்து எவ்வளவு அடி உயரத்தில் பறக்கிறது என கண்டறிய உதவும் கருவி எது? - அல்டிமீட்டர்

▲ மின்தாங்கி கட்டிடங்கள் இடியினால் தாக்கப் படாமல் பாதுகாக்கப் பயன்படும் கருவி எது? - இடிதாங்கி

▲ செயற்கை வெப்பத்தால் முட்டைகளை பொரிக்கச் செய்யும் கருவி பக்ரீரியா கிருமிகளை வளர்ப்பதற்கும், வளர்ச்சிகுன்றிப் பிறந்த குழந்தைகளை பாதுகாக்கவும் பயன்படும் கருவி எது? - இன்குபேட்டர்

# உண்மைத் தொடர்

**அதிர் இடி 91**

**நாகரிக உலகம் எதனையெல்லாம் வெறுத்து ஒதுக்கு கிறதோ அதுவெல்லாம் உகண்டாவில் சர்வசாதாரணமாக நடந்து வருகின்றது. காட்டு மிராண்டியும், மனித மாமிசம் புசிப்பவனுமான ஒருவனது ஆட்சியில் இதைவிட வேறெதை எதிர்பார்க்கமுடியும்?**



# இடி அமீன்

ஆடைகள் முழுவதையும் களைந்துவிட்டு தலைக்கு மேலே கைகளை உயர்த்தியபடி நடக்க வேண்டும் என்றான் அதிகாரி.

தாதிகள் அழத் தொடங்கிவிட்டனர். சிலர் மன்றாடினார்கள்: கைகூப்பி நின்றார்கள்.

நீங்களாக கழற்றாவிட்டால் நாங்கள் உங்கள் ஆடைகளை களைவதோடு மட்டும் நிறுத்தமாட்டோம். என்ன உடம்பை மட்டும் காட்டிவிட்டுப் போக விரும்புகிறீர்களா அல்லது ..... என்று எக்காளமிட்டான் அதிகாரி.

வேறு வழியின்றி அவர்கள் ஆடைகளைக் களைந்தனர்.

அந்த மண்டபத்துக்குள் கைகளை உயர்த்தியபடி அவர்களை நடந்து செல்லவைத்து இராணு வத்தினர் இரசித்தனர்.

தங்களுக்கு அதில் யார் தேவை என்பதையும் தெரிவுசெய்து கொண்டனர்.

பின்னர் தாதிகள் முரண்டு பிடித்து மறுக்க மறுக்க ஒவ்வொருவராக கட்டடத்தின் மூலைகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

சில தாதிகள்மீது பலர் கண் வைத்ததால் அத்தாதிகள் பலரால் பாலியல் வல்லுறவுக்குள்ளானார்கள்.

வெறி கொண்டதுபோல அவர் களது அங்கங்களை கடித்தும், விராண்டியும் மிருகத்தனமாக உறவு கொண்டனர். சில தாதிகள் மயக்க மானார்கள், வேறு சிலர் தங்களை விட்டுவிடுமாறு கதறி அழுதார்கள்.

அந்த மண்டபம் முழுவதும் அழுகுரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன.

தாதிமார்களுடன் உறவுகொண்ட இராணுவத்தினரில் பலர் நிறைபோதையில் இருந்தனர்:

அதனால் அவர்கள் களைத்துப் போய் மூச்சுவாங்கி அப்படியே உருண்டு கிடந்தார்கள்.

அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட தாதிகள் பலர் இருளோடு இருளாக கட்டடத்தைவிட்டு வெளியேறினார்கள்.

முகாம் காவலரணைத் தாண்டியே அவர்கள் செல்லவேண்டியிருந்தது.

காவலரணுக்குள் இருந்தும் முனகல் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

இரண்டு, மூன்று இராணுவத்தினர் காவலரணில் வைத்தே தாதி ஒருவரை சதை வேட்டையாடிக் கொண்டு இருந்தனர்.

அவர்களது கவனமெல்லாம் அத்தாதியின் உடம்புமீதே இருந்ததால், முகாம் வாயிலில் காவல் இல்லாது இருந்தது. அதன் வழியே தாதிகள் பலர் தப்பிச் செல்ல வசதியாக இருந்தது.

வேறு சில தாதிகள் இருளில் அழுதபடி தங்கள் ஆடைகளைத் தேடிக் கொண்டிருந்தனர். சில துணிச்சலான தாதிகள் உருண்டு கிடந்த இராணுவ வீரர்களது உடை-களைக் களைந்து தாம் அணிந்து கொண்டு ஓடித் தப்பினார்கள்.

அறையில் பூட்டி வைத்திருந்த மாணவர்களை காலையில் அடித்து நொருக்கிவிட்டு இராணுவத்தினர் விடுதலை செய்தனர்.

அந்த மாணவர்கள் ஊடாக இரவு நடந்த கொடுமை உகண்டா எங்கும் பரவியது.

அமீனின் படைகளிடம் இருந்த பயத்தையும் மீறி மக்கள் கொதித்தனர். ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

வெளிநாட்டு செய்திகளிலும் அக் காட்டுமிராண்டித்தனம் வெளியானது.

நாகரிக உலகம் எதனையெல்லாம் வெறுத்து ஒதுக்குகிறதோ அது வெல்லாம் உகண்டாவில் சர்வசாதாரண மாக நடந்துவருகின்றது. காட்டு மிராண்டியும், மனித மாமிசம் புசிப்ப வனுமான ஒருவனது ஆட்சியில் இதைவிட வேறெதை எதிர்பார்க்க முடியும்? என்று சர்வதேச செய்திகளில் கண்டனங்கள் வீசப்பட்டன.

அதனால் அமீன் அரண்டுபோனான்.

தாதிமார்கள் சிலர் குடித்துவிட்டு கும்மாளமிட்டனர். மாணவர்களுடன் உடலுறவு கொண்டனர். அவர் களையே இராணுவத்தினர் கைது செய்தனர். தமது ஒழுக்கக்கேடு வெளியே தெரியப்போகிறது என்று பயந்து மாணவர்களும் தாதிகளுமே கட்டுக்கதைகளை அவிழ்த்து விட்டுள்ளனர்.

இராணுவத்தினர்மீது பழிபோடுகின்றனர், கதையையே மாற்றுகின்றனர் என்று உகண்டா வானொலி அறிவித்தது.

இந்த அறிவித்தலை அடுத்து மக்ரெரே பல்கலைக்கழக மாணவர் கள் சிலர் கைதுசெய்யப்பட்டனர். தாதிகள் சிலரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கையால் மாணவர் கள் பின்வாங்குவார்கள் என்று மீன் நினைத்தான்.

ஆனால் மாணவர்கள் மட்டுமன்றி தாதிகளும் போராட்டத்தில் குதித்தனர். வேறு வழியின்றி அமீன் ஒரு நாடகம் ஆடினான்.

மாணவர்களிடமும் தாதியர்களிடமும் நான் மன்னிப்புக் கோருகிறேன். நடைபெற்ற சம்பவங்கள் பற்றி தவறான தகவலை வெளியிட்ட வானொலி நிலைய அதிகாரியை பணிநீக்கம் செய்திருக்கிறேன். இப்படியான அதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கை கள்தான் நாடு சீர்கெடுவதற்கு காரணமாக உள்ளன.

அரச பொது ஆய்வு நிறுவனத்தில் நடைபெற்ற முறைகேடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும், நீதி விசாரணை நடத்தவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கைதான மாணவர்களும், தாதிகளும் விடுதலை செய்யப்படுகின்றனர்.

அமீனின் இந்த அறிவிப்பும், அவன் இறங்கி வந்திருப்பதும் வெறும் நாடகமே என்பது மாணவர்களுக்கு தெரிந்து இருந்தது.

மாணவர்களின் தலைவர்கள் நான்கு பேர் இரவோடு இரவாக கைது செய்யப்பட்டு அமீனின் முன்னால் நிறுத்தப்பட்டனர்.

அமீன் அறிவித்தல் வெளியாவதற்கு முதல் நாளன்று இரவுதான் இக் கைதுகள் நடந்தன.

அமீன் நேரில்கண்டதும் மாணவர் களது துணிச்சல் காணாமல் போனது.

இளம் வயது சூடான இரத்தம். ஏதாவது செய்யத் துடிக்கும்தான். நான் நினைத்தால் அந்தத் துடிப்பே நின்றுபோகுமே! என்னப்பா செய்வீர்கள் உங்களை கோழிக்காலை முறிப்பது போல முறித்துப் போட என்னால் முடியும் என்ன? முடியுமா?, முடியாதா என்று கேட்டபோதே மாணவர்கள் தலைவர்களுக்கு வியர்த்துப்போனது.

(தொடரும்..)

---

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 626

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | | 24 |
| 25 | 26 | | 28 | 29 | |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 624 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம | 2 ர | 3 பி | 4 ய | 5 ல் | 6 பு |
| 7 ன | 8 ம் | 9 கா | ■ | 11 த | 12 ல |
| 13 மொ | ■ | 15 ப் | 16 அ | 17 ப | 18 ம் |
| 19 த் | ■ | 21 த | 22 ப் | 23 ரி | 24 பு |
| 25 த | 26 லை | 27 டு | 28 வி | ■ | 30 வ |
| 31 து | ■ | 33 ல் | 34 பா | ■ | 36 து |

**மேலிருந்து கீழ்**

01. மிகை; அளவின்மை; எல்லையின்மை.
02. ஞாயிறு என்றால் பானு. ஞாயிறு வாரம் என்பது? (குழம்பியுள்ளது)
03. படை வீரர்; அஞ்சா நெஞ்சினர் (குழம்பியுள்ளது)
05. ஒரு இராகம்.
06. இவர் இலங்கையில் நாடக, திரைப்பட, வானொலி துறைகளில் வித்தகராகத் திகழ்ந்தவர். (குழம்பியுள்ளது)
16. நெடுங்கணக்கில் முதல் உயிர்மெய் எழுத்து.
28. சொல்லறிபுள்.
29. தாண்ட.

**இடமிருந்து வலம்**

01. உன் வாழ்க்கையில் இருந்து பாடம் கற்றால் நீ ............
07. எம்மில் உள்ள தாழ்வு மனப்பான்மையால் ஏற்படுவது. (குழம்பியுள்ளது)
11. ஆசை ; நீர்விடாய். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.
13. சங்க காலத்தில் இருந்த பண்டிதைகள். (குழம்பியுள்ளது)
19. அரைகல் ; மாமி. (திரும்பியுள்ளது)
25. ஒரு பாரியநோய். கடைசி எழுத்து விடுபட்டு (திரும்பியுள்ளது)
28. உணவு தயாரிக்க பயன்படும் மா வகை ஒன்று.
31. விதவை முதலியோரு டைய சீவனத்துக்கென்று கொடுக்கும் பொருள். (திரும்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 01.06.2015 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 626
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.624 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.எம்.மெஸ்ரூன்,
தென்னக்கும்புர, கண்டி.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
02. மா.சாவித்திரி, புளியங்குளம், வவுனியா.
03. என்.மரியமதனி, பிரதான வீதி, பதுளை.
04. ய.ஜெயதாஸ், பூநகரி, கிளிநொச்சி.
05. எம்.இர்பான், ஆலங்கேணி, கிண்ணியா.
06. ம.சாந்தரூபன், அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
07. நி.கந்தசாமி, இணுவில், யாழ்ப்பாணம்.
08. சி.யசோதரன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
09. த.டனுசிகா, உடப்பு, புத்தளம்.
10. மு.மாதங்கி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



இனிமே இப்படித்தான்



சொக்கனுக்குப் பூங்கொடி

அரண...
திரி...

தமிழகத்தில்
குவிக்கின்றன. ச...
முன்னணி நடிகர்...
சக்கை போடுகிற...
இதையடுத்து
ஆர்வம் காட்டுகி...
பேய் படத்தை ...
படமும் வசூலை...
ஹன்சிகா, ஆ...
இணைந்து நடித்...
பாகத்தை எடுக்...
உள்ளார். இந்த
ஆகியுள்ளார். பே...
முதல்முறையாக
நடிக்க ஹன்சிகா
இது குறித்து
உள்ளார். மீண்...
உங்களுக்கும்
4ஆவது முறையா...

# எல்லாரும் சிக்ஸ் பேக் நமக்கு சிங்கிள் பேக் தான்

## வடிவேல் பேட்டி

வடிவேல் கதாநாயகனாக நடித்திருக்கும் 4-வது படம், 'எலி'. இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக சதா நடித்திருக்கிறார். யுவராஜ் தயாளன் டைரக்டு செய்திருக்கிறார். இந்த படத்தின் அறிமுக நிகழ்ச்சி சென்னை வட பழனியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் வடிவேல் கலந்துகொண்டு நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது...

கேள்வி:- இந்த படத்தில் உங்கள் கதாபாத்திரம் பற்றி சொல்லுங்கள்?

பதில்:- படத்தில் நான் எலியாக நடிக்கிறேன். சதாமீது ஒரு தலைக்காதல் கொண்டவனாக வருகிறேன். கதாநாயகிகளுடன் நம்மால் அப்படித்தானே நடிக்க முடியும்?

கேள்வி:- நகைச்சுவை நடிகர்களுக்கு ஜோடியாக நடிக்க கதாநாயகிகள் தயங்குகிறார்களாமே?

பதில்:- கேள்வியே அசிங்கமாக இருக்கிறது. கதாநாயகிகளை அழைப்பது கல்யாணம் பண்ணி பிள்ளை குட்டி பெற்று குடும்பம் நடத்த அல்ல. கதைக்கு தேவைப்படுவதால் தான் கதாநாயகி களை அழைக் கிறோம். நடிக்கமாட்டேன் என்று சொன்னால், வேறொரு கதாநாயகியை அழைப்பார்கள்.

கேள்வி:- 'எலி'யும், 'புலி'யும் ஒரே திகதியில் மோதுமா?

பதில்:- நீங்களே முடிச்சுபோட்டு ஒரு வழி செய்து விடுவீர்கள் போல... கதாநாயகர்கள் எல்லாம் 'சிக்ஸ்-பேக்'குடன் நடிக்கிறார்கள். நமக்கு 'சிங்கிள் பேக்' தான். நான் அர்னால்டு அல்ல. எனக்கு என்ன முடியுமோ, அதைத்தான் நான் செய்கிறேன். யாருக்கும் நான் போட்டியல்ல. இனிமேல் மற்ற கதாநாயகர்களின் படங்களில் இணைந்து நடிக்க முடிவு செய்து இருக்கிறேன்.



புரியாத ஆனந்தம் புதிதாக ஆரம்பம்

# ஹீரோக்கள் பாடகராயிட்டு வர்றாங்க அதனாலதான் நான் ஹீரோவாயிட்டேன்

## பாடகர் கிரிஷின் அதிரடி பதில்

தமிழ் சினிமாவில் ஹீரோக்கள் எல்லாம் தற்போது பாடகர்களாக மாறி வருகின்றனர். இந்நிலையில், பாடகர் ஒருவர் தற்போது ஹீரோவாக மாறியிருக்கிறார். வேட்டையாடு விளையாடு படத்தில் 'மஞ்சள் வெயில் மாலையிலே', 'உன்னாலே உன்னாலே' படத்தில் 'ஜூன் போன ஜூலைக் காற்றே' உள்ளிட்ட பல பாடல்களை பாடியவர் பாடகர் கிரிஷ்.

இவர் நடிகை சங்கீதாவின் கணவரும்கூட. தமிழ் சினிமாவில் எண்ணற்ற பாடல்கள் பாடியுள்ளார். இவரது மனைவி நடிகை என்பதாலோ என்னவோ, இவருக்கும் நடிப்பு ஆசை துளிர் விட்டிருக்கிறது.

அதன்படி, தற்போது 'புரியாத ஆனந்தம் புதிதாக ஆரம்பம்' என்ற படத்தில் ஹீரோவாக நடித்து முடித்துள்ளார். இந்த படத்தில் இவருக்கு ஜோடியாக சிருஷ்டி டாங்கே நடித்துள்ளார். தம்பி செய்யது இப்ராஹிம் என்பவர் இப்படத்தை இயக்கியிருக்கிறார்.

பாடகராக வலம் வந்த கிரிஷ், திடீரென ஹீரோ பிரவேசம் எடுத்ததற்கான காரணத்தை அவரே விளக்கும் போது, ஹீரோவெல் லாம் பாடகர்கள் ஆகிட்டு வர்றாங்க. அதனால, நான் ஹீரோ ஆயிட்டேன் இதில் என்ன இருக்கிறது? என்று கூறி யுள்ளார்.





## அர்ஜுன் இயக்கத்தில் மகள் ஐஸ்வர்யா

அர்ஜுன் மகள் ஐஸ்வர்யா, 'பட்டத்து யானை' படத்தில் கதாநாயகியாக அறிமுகம் ஆனார். அதன் பிறகு அவர் எந்த படத்திலும் நடிக்கவில்லை. அடுத்த படம் எப்போது? என்ற கேள்விக்கு:- "ஒரு இந்தி படத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்தது. வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். நல்ல கதையம்சம் உள்ள படம் வந்தால் நடிக்கலாம். இல்லையென்றால் வேறு வேலையில் கவனம் செலுத்தலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கிறேன். அப்பா டைரக்‌ஷனில், ஒரு படம் நடிக்கிறேன். அதில், 'கதக்' நடனம் ஆடுகிற மாதிரி வேடம். அதற்காக, 'கதக்' கற்றுக் கொள்கிறேன். நல்லா ஆடலைன்னா அப்பா திட்டுவார்.

## நடிகை திரிஷா ...

"வருண்மணியனுடன், திருமணம் நின்றுபோனது ஏன்?" என்பது...
அளித்திருக்கிறார்.

நடிகை திரிஷாவுக்கும், பட அதிபரும், தொழிலதிபருமான ...
நிச்சயிக்கப்பட்டு இருந்தது. கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திக...

திருமணத்தையொட்டி, திரிஷாவும், வருண்மணியனும் சேர்...
ஓட்டலில் விருந்து கொடுத்தார்கள்.

இந்த நிலையில், திரிஷா - வருண்மணியன் திருமணம் தி...
தொடர்ந்து நடிப்பதை வருண்மணியன் குடும்பத்தினர் விரும்பவி...
கூறப்பட்டது.

என் திருமணம் நின்றுபோனது உண்மைதான். அதற்கான ...
விதமான யூகங்களை வெளியிட்டுவருகிறார்கள். அவை அனைத்...

நான் தொடர்ந்து நடிப்பதுதான் திருமணம் முறிவுக்கான ...
தவறானது. திருமணம் நின்றுபோனதற்கான காரணகாரியங்கள் ...

நான் இப்போது 'சிங்கிள்' ஆக இருக்கிறேன். சந்தோசமாக...
திரிஷா கூறினார். இதே தகவலை நடிகை த்ரிஷா தனது டுவிட்...
இருக்கிறார்.



## அரண்மனை –2 படத்தில் திரிஷா – ஹன்சிகா

தமிழகத்தில் பேய் படங்கள் நன்றாக ஓடி வசூல் குவிக்கின்றன. சமீபத்தில் ரிலீசான காஞ்சனா-2 படம் முன்னணி நடிகர்கள் படங்களின் வசூலை முறியடித்து சக்கை போடுகிறது.

இதையடுத்து பேய் படங்கள் எடுக்க இயக்குனர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். ஏற்கனவே அரண்மனை, என்ற பேய் படத்தை சுந்தர்.சி. இயக்கி வெளியிட்டார். அந்த படமும் வசூலை அள்ளியது. அதில் லட்சுமி ராய், ஹன்சிகா, ஆண்டரியா ஆகிய மூன்று நாயகி கள் இணைந்து நடித்திருந்தனர். தற்போது அதன் இரண்டாம் பாகத்தை எடுக்கும் முயற்சியில் சுந்தர்.சி. ஈடுபட்டு உள்ளார். இந்த படத்தில் நடிக்க திரிஷா ஒப்பந்தம் ஆகியுள்ளார். பேய் படத்தில் திரிஷா நடிப்பது இதுவே முதல்முறையாக நடிக்கிறார். தற்போது இந்த படத்தில் நடிக்க ஹன்சிகாவும் ஒப்பந்தமாகி உள்ளார்.

இது குறித்து ஹன்சிகா தனது டுவிட்டரில் குறிப்பிட்டு உள்ளார். மீண்டும் அரண்மணை திரும்பி உள்ளது. உங்களுக்கும் எனக்கும் பிடித்த சுந்தர்.சியுடன் 4ஆவது முறையாக கை கோர்க்கிறேன் என்று குறிப்பிட்டு உள்ளார்.





## மீண்டும் காதல் வலையில் நயன்தாரா?

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகையாக திகழ்ந்துவருபவர் நடிகை நயன்தாரா. இவருக்கும் தற்போது இளம் இயக்குநர் ஒருவருக்கும் காதல் ஏற்பட்டதாக சினிமா வட்டாரங்கள் கூறுகின்றன.

நயன்தாரா, ஏற்கனவே இரண்டு முறை காதலில் தோல்வி அடைந்தார். முதலாவதாக சிம்புடன் காதல் வயப்பட்டார். இருவரும் நெருங்கிப்பழகினார்கள். காதலை வெளிப்படையாகவும் அறிவித்தனர். ஆனால் திடீரென இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்டார்கள். அதனை தொடர்ந்து பிரபுதேவா, நயன்தாரா ஆகிய இருவரும் காதல் ஜோடிகளாக வலம்வந்தனர். பின்பு அந்தக் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் நயன்.

சிம்புவை வைத்து போடா போடி படத்தை இயக்கியவர் விக்னேஷ் சிவன். இவர் தற்போது விஜய்சேதுபதி, நயன்தாரா நடிக்கும் நானும் ரவுடிதான் என்ற படத்தை இயக்கி வருகிறார். இந்த படத்தில் நடிக்கும்போது நயன்தாராவுக்கும், இயக்குநர் விக்னேஷ் சிவனுக்கும் இடையே நெருக்கம் அதிகமாகிவிட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இதனால் இருவரும் காதலிப்பதாகவும் கூறப்படுகிறது. நயன்தாரா சமீபத்தில் தன் புதிய காதலருக்கு விலை உயர்ந்த சொகுசு கார் ஒன்றை வாங்கிக்கொடுத்துள்ளதாக சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல, சமீபத்தில் இரகசியமாக விக்னேஷ் சிவன் உடன் மாலைத்தீவுக்கு ஜாலிட்ரிப் சென்று வந்திருக்கிறார் நயன்தாரா.

காரணம் நயன்தாராவை போலவே விக்னேஷ் சிவனும் கேரளாவை சேர்ந்த மலையாளி ஆவார். அந்த நம்பிக்கையின் காரணமாகவோ, என்னவோ தன்னுடைய பூர்வீக கிராமத்துக்கு விக்னேஷ் சிவனை அழைத்துச்சென்றுள்ளார் நயன்தாரா. அங்கு தன் குடும்பத்தினருக்கு அவரை அறிமுகம் செய்துவைத்ததோடு, அங்குள்ள சேர்ச்சில் சிறப்பு பூஜையும் செய்துவந்திருக்கிறார். கூடிய விரைவில் ஒரு நல்ல செய்தி வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



### திருமணம் நின்றுபோனது ஏன்?

## திரிஷா விளக்கம்

ணம் நின்றுபோனது ஏன்?" என்பதுபற்றி நடிகை திரிஷா விளக்கம்

அதிபரும், தொழிலதிபருமான வருண்மணியனுக்கும் திருமணம்
ந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி நிச்சயதார்த்தம் நடந்தது.
ஷாவும், வருண்மணியனும் சேர்ந்து நண்பர்களுக்கு நட்சத்திர
கள்.
- வருண்மணியன் திருமணம் திடீரென்று நின்றுபோனது. திரிஷா
ணியன் குடும்பத்தினர் விரும்பவில்லை என்று அதற்கு காரணம்

னது உண்மைதான். அதற்கான காரணம் பற்றி பலரும் பல
ட்டுவருகிறார்கள். அவை அனைத்தும் தவறான யூகங்கள்.
தான் திருமணம் முறிவுக்கான காரணம் என்று கூறுவது
பானதற்கான காரணகாரியங்கள் பற்றி ஆராயவேண்டாம்.
ஆக இருக்கிறேன். சந்தோசமாக இருக்கிறேன். இவ்வாறு
ல நடிகை த்ரிஷா தனது டுவிட்டர் பக்கத்திலும் வெளியிட்டு



# தேன் கிண்ணம்

## வாழ்ந்து காட்டுவேன்



மரம் கொத்தி பறவையாய்
மனம் கொத்தி
ஊண் தின்னுகிறது
உன் நினைவுகள்.


உடல் மெலிந்து சாறு பிழிந்து
சக்கையாய் நான்

உள்ளத்தில்
உன் நினைவுகளின்
ரணத்தால் வழியும்
இரத்தத்தில் கூட
மீளவும்
உன் நினைவுகளே!

பணம் ஒன்றே பெரிதென்று
பகட்டான வாழ்வை நோக்கி - நீ
பறந்து சென்றுவிட்டாய்
என்
அன்பு, பாசம், காதல்
எல்லாவற்றையும்
தூக்கி யெறிந்து விட்டு
துரோகத்தை பரிசளித்த
சுந்தரியே!
இது கேள்.
இன்று
உன் நினைவுகளின்
தாக்கத்தால் - நான்
வீழ்ந்து கிடக்கலாம்
ஆனாலும்
உன் நினைவுகளின்
சுடரில்
வீழ்ந்து மடிவதற்கு
நான் ஒன்றும்
விட்டில் பூச்சியல்ல.

தன் சாம்பலிலிருந்து
உயிர்த்தெழும்
'பீனிக்ஸ்' பறவையாய்
என் தோல்வியிலிருந்து
எழுந்து வந்து
உன் முன்னால் - மிக
உயர்வாய்
வாழ்ந்து காட்டுவேன்.

விஜய கண்ணன்,
யாழ்ப்பாணம்.



## என் அம்மா...

நிமிடம் ஒவ்வொன்றும்
நினைவுபடுத்திக்கொள்கிறேன்-என்
அம்மா
அன்பில் என் மகனே...
பாசம் காட்டுகையில் செல்லமாய்
ஒரு சிணுங்கல் என்னுள்ளே...
புரிந்துகொண்டாய்...
பசிதீர உன் உதிரம் எந்நாவில்
அருவியில் நீராய்... அட்சய
பாத்திரமாய்... பசிதீர்த்திடவே...
பாலும் அமுதாகிற்று...
தினமும்...
மழலை மொழியுடனே
பிள்ளையின் பிழைகளும்
உன் விரல் தவறா தழுவிட்டு
நடந்திட்டபோதும்...
மகிழ்ந்து குலவிடுவாய்
மற்றவர் முன்பு உன் மகனின்
மகத்துவத்தை...
கனவுகளோடு நடந்திடும்போதும்
நிழலிற்கும் குடைபிடித்திடுவாய்
ஆண்டு ஒன்று முதல் இன்றுவரை...
மறுஜென்மமும் உன்கருவில்
நான் வேண்டாம்... வேண்டும்
இந்த ஒரு ஜென்மம் மட்டும்
எந்நாளும்
இறந்திடாத உயிராவோம்...
அம்மா...
நான் மட்டும் உன் பிள்ளையாய்...

பாண்டிருப்பு
கல்முனை பிரேம்
யாழ்ப்பாணத்திலிருந்து

## அவள் சுவடிகள்

அடிக்கடி
சுத்தம் செய்யப்படும்
என் மனவறைகளில்
அவள் ஞாபகங்கள்
மட்டும்
எத்தனை ஆண்டுகள்
ஆன பின்பும்
அப்படியே
இருக்கிறது...

ஜெ. சிந்து,
வேலணை -02



## விழி



அன்பே!
உனை பார்த்ததும்
மனசுக்குள் ஒரு சத்தம்
சில நாட்கள் நீ என்
அருகில் இருந்த
போதும்
புரியவில்லை - எனக்கு
சத்தத்தின் அர்த்தம்
பிரிந்ததும் உன் முகம்
காண ஏங்குகிறேன்...
பாசத்தால்
பரிதவிக்கிறேன்..
உன் முகவரியை
தேடுகிறேன்...
இதுதான் காதலா???

யோ.யாழினி, பரந்தன்.

## கருவறை

சிறகுகள் வேண்டுமே
பஞ்சாய்ப் பறப்பதற்கு
தென்றல் வீசி வரனுமே
காற்றிடையே மிதப்பதற்கு
கானக்குயில்கள் இசைத்திடனுமே
நானும் சேர்ந்து பாட்டிசைக்க
வண்டுகள் ரீங்காரமிட
நானும் இணைந்து தாளமிட
ஓர் தேசம் வேண்டும்
புத்தம் புதியதோர் பூமி வேண்டும்!
தாயின் கருவறைக் குழந்தை
யாசிக்கின்றது!



யாழ். கௌசி

# இது பெருவிருட்சம்



யமனி

**யாமினி துலாஞ்சலி** மத்திய மாகாணத்தில் உள்ள அம்பகமுவ மத்திய கல்லூரியில் கல்விபயிலும் 16 வயது மாணவி. தற்போது இலங்கையின் சகல விளையாட்டு வீர வீராங்கனைகளாலும் ஆச்சரியத்துடன் பார்க்கப்படுபவர். காரணம் கட்டாரில் நடைபெற்ற முதலாவது ஆசிய இளையோர் தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் 400 மீற்றர், தடை தாண்டல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று இலங்கையைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

இலங்கை சார்பில் கலந்துகொண்ட குழுவில் ஒரேயொரு பெண் இவர் மட்டும்தான். இவர் சாதனை நேரமாக 1 நிமிடம் 1.27 செக்கன்களில் தடைதாண்டி தங்கம் வென்றுள்ளார். இவரது சொந்த ஊர் உடபுலத்கமுவ எனும் பின்தங்கிய சிறு கிராமம். இவரது தந்தை அன்றாடம் உழைப்பவர். தாயார் நோய்வாய்ப்பட்டவர். ஒரு சகோதரன் உயர்தரம் முடித்து விட்டு தொழில் ஏதுமின்றி இருக்கிறார். மேலும் நகர்ப்புற வீரர்களுக்குக் கிடைக்கும் வரப்பிரசாதம் எதுவும் இந்த மாணவிக்கு இல்லை.

ஆனால் இவற்றையெல்லாம் தூர எறிந்துவிட்டு தன்னை அறியாமலே சாதனை புரிந்துள்ளார். இவரது இந்தச் சாதனைக்கு இவர் இரண்டு பேரைச் சுட்டுகிறார். ஒன்று, முன்னாள் தடகள வீரர் சுகத் திலகரட்ண, மற்றும் ஹட்டன் வலய விளையாட்டுத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் அனுர பண்டார. துலாஞ்சலியை இந்த உச்சத்துக் கொண்டு சென்ற இந்த இருவரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். இவர்கள் கூறும்போது, இந்தப் பிள்ளை மிகுந்த திறமைகொண்டவர். அரச அனுசரணை இவருக்குக் கிடைக்குமாயின் இன்னும் உயரத்துக்கு இவர் செல்வார் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இதேவேளை கொலம்பியா நாட்டில் யூலை மாதத்தில் நடைபெறவுள்ள IAAF இளையோர் தடகளப் போட்டிகளில் கலந்துகொள்ள இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த வேளையில் எல்லோரும் துலாஞ்சலிமீது தம்பார்வையைத் திருப்பவேண்டும். அரசு மற்றும் தனியார் இந்தச் சின்னப் பெண் தனது துறையில் சிகரத்தை எட்ட உதவி புரிந்திடல் வேண்டும். அது நடைபெறும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.



# நல்ல நோக்கம்

**கிரிக்கெட்** ஆட்டத்தின்போது வேகப் பந்தொன்று அவுஸ்திரேலிய வீரர் பில்ஹியூசின் பிடரியில் தாக்கியதில் அவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கடந்த நவம்பர் மாதத்தில் நடைபெற்றிருந்தது. தற்போது அந்த இழப்புத் தொடர்பான விசாரணைக்கென்று சுதந்திரமான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக சட்டத்தரணி வேிட் கேட்டன் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது முக்கிய நோக்கம் அவுஸ்திரேலியா நடாத்தும் கிரிக்கெட் போட்டிகளில் வீரர்களின் பாதுகாப்புத் தொடர்பான பரிந்துரைகளை மேற்கொள்வது என்று கூறப்பட்டுள்ளது.

அதோடு ஆட்டங்களில் பாவிக்கும் தலைக் கவசங்களின் பாதுகாப்பு, அதன் வடிவமைப்பு மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பாகவும் மிக அக்கறையுடன் பரிந்துரைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. குறித்த சட்டத்தரணி இதுபற்றிப் பேசும்போது, இந்தச் சம்பவம் நடைபெற்றபோது இது ஒரு தற்செயல் நிகழ்வுதான் என்று கருத்துத் தெரிவித்திருந்தேன். ஆனால் தற்செயல் நிகழ்வுகள் அதிகமாக நடைபெறுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

இந்த விசாரணை யாரையும் குறிவைத்து மேற்கொள்ளப்படுவதல்ல. இனி இவ்வாறான துயர சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்பதை மனதிற் கொண்டே மேற்கொள்வதாகும் என்றும் கூறியுள்ளார். திட்டமிடப்படாது பூரணமாக தற்செயலாக நிகழ்ந்து போன ஒரு துயர நிகழ்வுதான் என்றாலும், அதில் இருந்து நிறையப் பாடம் கற்றுக்கொண்டு, இனிமேலும் இப்படி நடைபெற்றுவிடக்கூடாதே என்று எதிர்காலப் பாதுகாப்புக் கருதி இவ்வளவு அவதானமாகச் செயற்படும் அவுஸ்திரேலியாவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

# நல்ல தீர்ப்பு



**உப்பைத்** தின்றவன் தண்ணீர குடிப்பான் என்பது அமெரிக்க 2012 ஒலிம்பிக் 4X100 மீற்றர் அஞ்சலோட்டக் குழு பொறுத்து உண்மையாகிவிட்டது. இதில் துயரமென்னவென்றால் ஒருவர் செய்த தவறுக்கு இன்னும் ஐந்துபேர் சேர்ந்து தண்டனை அனுபவிக்கப்போகிறார்கள்.

மேற்படி அஞ்சலோட்டக் குழு 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தது. இந்த அணியின் ஒரு வீரர் டைசன்கே. இவர் தற்போது ஊக்கமருந்துப் பாவனையில் சிக்கி தவறு செய்தவர் என்று நிரூபிக்கப்பட்டுள்ளதால் இவர் அஞ்சலோட்டத்தில் பெற்ற வெள்ளிப் பதக்கம் திருப்பப் பெறப்படவுள்ளது.

ஆனால் IOC மிகக் கடுமையாக இவரது மட்டுமன்றி அஞ்சலோட்ட அணியில் இருந்த டிரெல் கிமொன்ஸ், ஜஸ்ரின் கெட்லின், றயான் பெய்லி, ஜெப்ரி டெம்பஸ், டார்விஸ் பெட்டன் ஆகியோரது பதக்கங்களையும் பறிக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்க ஒலிம்பிக் சங்கம், உலக ஒலிம்பிக் சங்கத்தின் இந்த முடிவை ஏற்றுக்கொண்டு, தூய்மையின் விளையாட்டுக்கு ஆதரவு தெரிவிப்போம் என்று அறிவித்துள்ளது. மேற்படி 4x100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் தங்கம் வென்ற அணி உசேன் போல்ட் உள்ளிட்ட ஜமெய்க்கா அணி. இதேவேளை வெண்கலப் பதக்கத்தை டிரினிடாட்டுபாகோ அணி வென்றிருந்தது. நான்காவது இடத்தை பிரான்ஸ் அணி பெற்றிருந்தது. புதிய முடிவின்படி ஜமெய்க்கா தங்கம், டிரினிடாட் டுபாகோ வெள்ளி, பிரான்ஸ் வெண்கலம் என்றவகையில் பதக்கங்கள் அமையும்.

**மீண்டும்** கிரிக்கெட் வீரர் கெவின் பீற்றர்ஸன் பேசுபொருளாகி உள்ளார். கெவின் பீற்றர்சன் இங்கிலாந்து தேசிய அணியில் ஏன்தான் இல்லை என்று யோசிப்பது போலவே, கிரிக்கெட் துறை சார்ந்த பலரும் யோகிக்கிறார்கள். தேசிய அணியில் இடம்பிடிக்கவேண்டும் என்பதற்காக பணம்கொட்டும் ஐ.பி.எல் போட்டிகளைத் தவிர்த்துக்கொண்டவர். இவர் அதுமட்டுமன்றி சர்ரே கவுண்ரி அணிக்காக பிரமாதமாகவும் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கிறார். அதிலும் உச்சமாக முச்சதம் அடித்துவிட்டு நிற்கிறார்.



- ஜோசப் கிருஷ்ணா -





முன்னதாக, இவருடன் இணைந்து விளையாடும் குமார் சங்கக்காரவும் கெவின் பீற்றர்சனும் இங்கிலாந்து அணியின் தவிர்க்கப்பட முடியாத வீரர். இவருக்கு இங்கிலாந்து அணியில் இடம் கொடுக்கவேண்டும் என்ற கருத்துப்பட தன் எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தார். இப்பொழுது அடுத்துவரும் ஆஷஸ் தொடர் தொடர்பாக ஏற்பாடுகளை செய்துவரும் அவுஸ்திரேலியாவும் இங்கிலாந்து அணியில் ஏன் கெவின் பீற்றர்சன் இல்லை என்பது புரியாமல் தலையைப் பிய்த்துக் கொள்கிறது. அவுஸ்ரேலிய வேகப் பந்துவீச்சாளர் றயான் ஹரிஸ் கருத்துக் கூறும்போது, ஆஷஸ் தொடரில் எமக்கு எதிராக கெவின் பீற்றர்சன் விளையாடமாட்டார் என்று என்னால் நம்பமுடியவில்லை என்று கூறியிருக்கிறார்.

தற்போதைய இங்கிலாந்து கிரிக்கெட் பணிப்பாளரும் முன்னாள் அணித் தலைவருமான அண்ட்ரூஸ்ரோவுக்கும், கெவின் பீட்டர்ஸனுக்கும் இடையில் நீண்டகாலமாகவே சுமூகமான உறவு இல்லை.

தற்போது கெவின் பீற்றர்ஸன் உள்வாங்கப்படுவதற்கு இந்தக் காரணம் செல்வாக்குச் செலுத்துகிறதோ தெரியவில்லை என்று சில கிரிக்கெட் வீரர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளார்கள். என்னதான் கெவின் அணியில் இல்லை என்று அண்ட்ரூஸ்ரோஸ் சொன்னாலும், நாங்கள் ஐந்து டெஸ்ட் போட்டிகளையும் விளையாடி முடிக்கும்வரை இங்கிலாந்து அணியில் கெவின் இல்லை என்பதை நம்பமாட்டேன் என்கிறார் றயான் ஹரிஸ். கெவின் பீற்றர்ஸன் பற்றிய விடயங்கள் இப்போது மிக முக்கியத்துவம் கொடுத்து விலாவாரியாக ஆராயப்படுகின்றன. இந்த நிமிடத்தில் கிரிக்கெட் உலகை ஐ.பி.எல் ஆக்கிரமித்து இருந்தாலும், அதே கரிசனையுடன் கெவின் பீற்றர்ஸன் பற்றியும் கிரிக்கெட் உலகம் கவனத்தில் கொள்கிறது. கெவின் சர்வதேசக் கிரிக்கெட்டில் அவ்வளவு மதிப்பு சர்ரேக்காக 355 ஓட்டங்கள் ஆட்டமிழக்காமல் எடுத்தார் கெவின். ஆனால் இவரை ஆட்டமிழக்கப் பண்ண அண்ட்ரூஸ்ரோஸ் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்

**கெவின் பீற்றர்சன்**

1980 இல் தென்னாபிரிக்காவில் பிறந்தவர். இங்கிலாந்தின் பிரபல்யமான கிரிக்கெட் வீரர். வலது கைத்துடுப்பாட்ட வீரர் வலது கை சுழல் பந்துவீச்சாளர்.

**டெஸ்ட் அறிமுகம் : 2005**
**எதிர் அவுஸ்திரேலியா**
**மொத்த டெஸ்ட் ஓட்டங்கள் : 8181**
**அதிகூடிய ஓட்டம் : 227**
**சதங்கள் : 23**
**அரைச்சதங்கள் : 35**



# தனித்தவர் அல்ல




பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.



# பெண்களுக்கு ஏற்ற உடற்பயிற்சிகள்

பெண்கள் மேற்கொள்ளத் தகுந்த உடற்பயிற்சிகளை நான்கு வகைப்படுத்தலாம். அவை.

1) ஏரோபிக்ஸ் வகை உடற்பயிற்சி.

2) ஆனோ ரோபிக் உடற்பயிற்சி.

3) யோகாசன பயிற்சிகள்.

4) ஸ்கிப்பிங் பயிற்சி

இந்த உடற்பயிற்சிகளை எந்த வயது பெண்ணும் செய்யலாம். உடல் உறுதியுடனும், ஆரோக்கியத்துடனும் இருக்க இவற்றை செய்யலாம்.

சில பெண்களுக்கு கைகள் மெலிதாக இருக்கும். உடம்பு நன்றாக இருந்து கைகள் குச்சி மாதிரி இருந்தால், அவர்கள் ஒரு கையால் மிகமிக எளிதாக தூக்கக்கூடிய ரூபிடாய் என்கிற சின்ன பாரத்தை கையில் கீழிலிருந்து மார்புவரை தூக்கவேண்டும். தினமும் கையை மாற்றி தூக்கி, 10 நிமிடம் தொடர்ந்து செய்துவரவேண்டும். காலை சாதாரணமாக வைத்து நின்றுகொண்டு, கையை மட்டும் மேலே தூக்கி, கீழே இறக்கவேண்டும். இதை போன்று 10 நிமிடம் தொடர்ந்து செய்துவரவேண்டும்.

இடுப்புக்கொடி போன்று இருப்பது அழகல்ல. உறுதியுடனும், ஓரளவு சதை பிடிப்புடனும் இருப்பதுதான் அழகும், ஆரோக்கியமும் ஆகும். இப்படி அழகான வனப்பான இடுப்பை பெற ஏரோபிக்ஸில் கிவ்னாட் என்கிற பயிற்சியினை தொடர்ந்து பெண்கள் செய்து வந்தால் பயன்பெறலாம்.

பெண்கள் தினமும் ஏதாவது ஒருவேளையில் சாதாரணமாக நின்றுகொண்டு கையை இடதும் வலதுமாக சிலுவை குறிபோல விரித்து மடக்கி குறைந்தது இருபது நிமிடம் செய்துவந்தால் தோள்பட்டை அழகாகலாம். இத்துடன் இவர்கள் உடம்பை வளைத்து நெளித்து செய்யும் ஏரோபிக்ஸ் உடற்பயிற்சியையும் மேற்கொள்ளலாம்.

குச்சியான பாதம் பெற்றவர்கள் ஏரோபிக்ஸ் பயிற்சியுடன், கால்களை அகலமாக விரித்து மறுபடியும் ஒன்றுசேர்க்கும் பயிற்சியினையும். நின்றுகொண்டே ஓடும் டிரெல் மில் பயிற்சியினையும். மெல்லிய நடைப்பயிற்சி அல்லது ஓடுவதை மேற்கொண்டால் நாளடைவில் கால்கள் உறுதிபெறும்.

# பெண்கள் விரும்பும் பிளவுஸ் டிசைன்ஸ்




ஒல்லியானவர்கள் ஹை கொலர் நெக் அல்லது பின்புறம் க்ளோஸாக வந்து முன்புறம் பாட் நெக் அல்லது யு-நெக் மாதிரி தைத்துக்கொண்டால் பொருத்தம். பாதி கொலர் நெக் என்றால் முன்பக்கம் யு, ப வடிவில் தைத்துக்கொள்ளலாம். ரொம்ப லோ நெக் வேண்டாம். எலும்பு துருத்திக்கொண்டு, மேலும் உங்களை ஒல்லியாகக் காட்டும். கை மட்டும் ஒல்லியாக இருப்பவர்கள் கஃப் ஸ்லீவ், பட்டர்ஃப்ளை ஸ்லீவ் வைத்துத் தைத்துக்கொள்ளலாம். கை சற்று குண்டாகக் காண்பிக்கும். கழுத்தின்முன் அல்லது பின்புறம் டிசைன் வைத்த பிளவுஸ் தைத்துக்கொள்ளலாம்.

சற்று சதைப்பிடிப்பு இருப்பவர்களுக்கு லோ நெக் அழகாக இருக்கும். பிளவுஸ் முழுக்கை, முக்கால் கை, நடுத்தர கை எல்லாமே உங்களுக்கு கச்சிதமாக பொருந்தும். ஸ்லீவ் லெஸ், ஷோர்ட் ஸ்லீவ், மெகா ஸ்லீவ் ஓகே. ஷோர்ட் ஸ்லீவ் சற்று லூசாக தையுங்கள். குச்சி போல கை உள்ளவர்கள் ஷோர்ட் ஸ்லீவ் அணியவேண்டாம்.

அகல ஜரிகை, ரெட்டை பேட்டு ஜரிகை ஆகியவற்றை நீங்கள் அணிந்துகொள்ளும் உடைக்கேற்ப தைத்துக்கொள்ளலாம்.

ப்ளெய்ன் பிளவுஸுக்கு கையில் மட்டும் லேஸ் வைத்து தையுங்கள். பிளவுஸின் உயரம் உங்கள் புடைவையின் உயரத்திலிருந்து 4 இன்ச் வரை இருக்கலாம். டிசைன் பிளவுஸில் ஜரிகை, ஜம்கி, மணி போன்றவை வைத்து தைத்தால் மேலும் அழகூட்டும். சற்றே புடைவையை இறக்கிக் கட்டினாலும் அழகாகவே இருக்கும்.

# வட்டிலப்பம்



**தேவையான பொருட்கள்:**

கஞ்சிக்கரிசி (அல்லது) பச்சரிசி - 1/2, கிலோ சீனி - 600 கிராம், முட்டை - 2, தேங்காய் - 2, உப்பு - 1 சிட்டிகை, ஏலக்காய் - 4, சீரகம் - 1/2 தேக்கரண்டி.

**செய்முறை:** கஞ்சிக்கரிசி (அ) பச்சரிசியை ஊறவைத்து நைசாக நன்றாக அரைத்துக் கொள்ளவும். தேங்காயைத் துருவி, துருவலை மிக்ஸி அல்லது கிரைண்டரில் நன்றாக அரைத்து பால் எடுத்து வைத்துக்கொள்ளவும். முட்டையையும் மிக்ஸியில் அடித்துக் கொள்ளவும். அரைத்த மாவில் தேங்காய்ப் பால், முட்டை, சீனி, ஏலக்காய், சீரகம் ஆகியுவற்றுடன் உப்பையும் சேர்த்து கலக்கவும். மாவு மிகவும் கெட்டியான நிலையில் இல்லாமல் கலக்கி, அந்த மாவை வடிகட்டவும்.

பின்பு அந்த வடி கட்டப்பட்ட மாவை வட்டவடிவமான எவர்சில்வர் அல்லது அலுமினிய பாத்திரத்தில் ஊற்றி குக்கரில் வைத்து ஏழு விசில் வரும்வரை வேகவிடவும். ஏழு விசில் வந்ததும் அடுப்பை அணைத்துவிடவும். குக்கரில் இருந்து வட்டிலை வெளியில் எடுத்து அதன்மீது இருக்கும் நீரை வடித்துவிட்டு ஆறவைத்து பின்பு வெட்டிப் பரிமாறவும்.

குறிப்பு : கஞ்சிககரிசியைப் பயன்படுத்துவது நல்லது. பச்சரிசியைப் பயன்படுத்துவதாக இருந்தால் சூடு நீரில் ஊறவைக்கவும்.

# பாரதியும் பெண்ணியமும்



"நாட்டை ஆட்சி செய்ய மன்னன் இருந்தாலும் ஒரு வீட்டை ஆட்சிசெய்ய ஒரு பெண்தான் வேண்டும் என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மை."


பெண்ணின் பெருமையை உயர்த்தும் நாடே இந்த மண்ணுலகில் உயர்ந்துள்ளது. தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய கால கட்டத்தில் பெண்கள் பல்வேறு துறைகளில் ஆணுக்கு சமமாகவும், ஆண்களைவிட அதிகமாகவும் முன்னேறி வருகின்றனர். பெண்களின் பெருமையை பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிந்துகொள்ளலாம்.

### காப்பிய நாயகிகள்

சங்க காலம் தழுவிய காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகியவற்றில் உள்ள பெண் பாத்திரங்களின் வரலாறுகள் பெண்ணியத்திற்கு பெருமைதேடி தந்துள்ளன. சிலம்பில் கண்ணகி, மாதவி, கவுந்தியடிகள், தேவந்தி, போன்றவர்களின் வரலாறுகள் பல பண்புகளை உயர்த்தி நிற்கின்றன. கண்ணகி தெய்வமாகியது பெண்மைக்கே உயர்வு தருவது மாதவி, மணிமேகலையின் துறவு மேன்மை போன்றவற்றை மறக்கமுடியாது.

### பெண்பாற் புலவர்கள்

சங்க காலத்திலேயே பெண்கள் கல்வியில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். தலைமைப் பண்பு மிக்கவர்களாக சரித்திர சாதனை புரிந்துள்ளனர். ஔவையார், காவற்பெண்டு, பாரிமகளிர், குறமகள் இளவெயினி, வெண்ணிக்குயத்தியார், நன்முல்லையார், வெண்பூதியார், காக்கைபாடினியார், நச்செள்ளையார் போன்றவர்களும் இன்னும் பலரும் காட்டப்படுகிறார்கள். மன்னர்களுடன் இப்புலவர்களின் தொடர்பு, அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தது, தூதுபோன காட்சிகளும் உண்டு. ஆதி சங்கருடன் வாதம் செய்த பெண் பற்றியும் வரலாறு உண்டு.



### இலக்கியத்தில் பெண்ணின் பெருமை

பக்தியை பேசும் இலக்கியத்தில் பெரிய புராணம் முதன்மையானது. 28 பெண்களைப் பற்றி குறிப்பிடுகின்றது. இருபத்தியாருவர் நாயன்மாரது மனைவியர், தாயார் நால்வர், மகள்மார் இருவர் உடன்பிறப்பு ஒருவர், காரைக்காலம்மை, இசைஞானியார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூவரும் நாயன்மார்களுக்கு இணையான பேறு பெற்றனர். சிவனுக்காக பிள்ளைக்கறி சமைத்த, சிறுத்தொண்டர் மனைவியை 'மனையறத்தின் வேராகி' என்று சேக்கிழார் புகழ்ந்துள்ளார். புராணக் கதைகள் கற்பனை என்று சாதித்து வாதிப்பவரும் உண்டு.

### பாரதியும் பெண்ணியமும்

பெண்ணின் பெருமையை உலகிற்கு பறைசாற்றியதில் பாரதிக்கு பெரும் பங்குண்டு. பாண்டிச்சேரியில் தனித்திருந்த பாரதியார், தேநீர் தயாரித்து அருந்த தடுமாறிய நிலையில் செல்லம்மாளை உணர்ந்தார். பெண்ணின் விடுதலைக்காக பாடினார். வேதநாயகம் பிள்ளை தகுண சுந்தரியில் குழந்தை மணத்தை கண்டித்தார். பெண் கல்வி வளர்ந்தது. சமுதாயம் உயர்ந்தது. தொழில் பகுதி உயர்ந்தது. மகளிரும் தொழில்வாய்ப்பை பெற்றனர். மாதவையா, கல்கி போன்றவர்களைத் தொடர்ந்துபின் வந்தவர்களும் பெண்களின் பெருமைபேசினர். மகளிருக்கென சிறந்த ஊடகங்கள் வெளிவரலாயின.

எழுத்தாளர்கள், இசையரசிகள், சொற்பொழிவாளர்கள், அரசியல் தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள் எனப் பல்வேறு துறைகளிலும் கொடிகட்டிப் பறப்பது நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமையே. பெண்களால் எதையும் சாதிக்கமுடியும் என்று நினைத்து சாதிப்பதோடு அன்றாடம் கிடைத்த ஊடகங்கள் அனைத்தின் மூலமும் போதித்து பெண்ணுரிமையை பேணிக்காக்க அயராது முயலவேண்டும். நாட்டை ஆட்சிசெய்ய மன்னன் இருந்தாலும் ஒரு வீட்டை ஆட்சி செய்ய ஒரு பெண்தான் வேண்டும் என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மை.

---

**250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :-471

**கேள்வி:** சங்க காலத்தின் காப்பிய நாயகிகள் யாவர்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 01 .05. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 471
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 469 இற்கான விடை :-
அன்னா அற்கின்ஸ்

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
என். ஷர்மி,
பிரதான வீதி, நம்புக்கனை

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

471

பெயர் : ..........

முகவரி : ..........

தே.அ. அட்டை இல : ..........

விடை : ..........

கையொப்பம் : ..........



## உண்மையாக நடப்பானுகளோ இவனுகள்?


மொக்கன் கேட்கிறான்



மொக்கனுக்கு இப்ப கேள்விப்படுகிறதெல்லாம் கவலையான விசயமாத்தான் இருக்கு. இப்ப கொஞ்சக் காலத்திற்கு முந்திப் பிரான்சில பிரான்சிஸ் தம்பி மோசம் போனார். அந்தக் கவலை ஆறிக்கொண்டு வரேக்க இன்னொரு முன்னணிப் போராளியும் முடிஞ்சுபோனார் எண்டு அறிஞ்சன். ஒரு கவலையாற இன்னொரு கவலைவருகுது. அரவிந்தன் பொடியனும் முடிஞ்சு போனானாம் எண்டு கேள்விப்பட்ட உடனே மொக்கி அழத்தொடங்கிட்டாள்.

மொக்கனுக்கு என்ன கவலை எண்டால் எந்த மக்களுக்காய் எல்லா சுகத்தையும் துறந்து கஸ்டப்பட்டு இயங்கின பொடியள் எல்லாம் இந்த மக்களின்ர விடிவைக் காணாமலே ஒவ்வொருத்தராய் சாகிறாங்கள் எண்டுதான். அவங்கட ஆன்மாவும் சாந்தி அடையாது.

ஆனால் இதுகளப் பற்றி எல்லாம் ஒரு கவலையும் இல்லாமல் இப்பவே எலக்சனுக்காக கூடத்தாடத் தொடங்கிட்டினம். எனக்குப் பழைய கதை ஞாபகத்திற்கு வருகுது. இந்தியாவின்ர விடுதலைக்காக தன்னையே அறப்பணிச்ச வ.உ.சிதம்பரப்பிள்ளை சாகேக்கிள்ள இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைச்சிட்டதோ எண்டு கேட்டாராம். ஒரு பெரிய சட்டத்தரணி வெள்ளைக்காரன்ர கொடுமையால மறியலுக்குள்ள மாட்டுக்காக நுகத்தடியில செக்கை இழுத்தவர். இத்தனை கொடுமைக்கெல்லாம் ஆளாகியும் அவர் விடுதலையை மறக்கேல்ல. இறுதிமூச்சிலகூட இதை எண்ணி எண்ணி ஏக்கத்தோடயே செத்துப்போனார். பிரான்சில முதலில மயிலிட்டி புஸ்பராசன், பிறகு குருநகர் பிரான்சிஸ், இப்ப கி.பி. அரவிந்தன் எண்டு வரிசையில வாழ்நாள் இலட்சியம் நிறைவேறக் காணாமலே கண்ணை மூடிட்டாங்கள். இவங்களுக்கு எல்லாம் நாங்கள் செய்யக்கூடிய ஆத்மசாந்தி என்னெண்டால் எங்கட மக்களுக்கு விரைவில் ஒரு விடிவை பெற்றுக் குடுக்குறதுதான். அதுக்காகத்தான் உண்மையான இலட்சியப்பற்று உள்ளவங்கள் ஒண்டா நிண்டு உழைக்கவேணும் எண்டு இந்த மொக்கனும் மொக்கியும் கேக்கினம்.



பெண் போராளி பிரேமாவதி

மொக்கனுக்கும் உள்ளுக்குள்ள ஒரு பயம். வயசும் வந்திட்டுது. இந்த பொடியங்களைப் போல நானும் இந்த சந்தோசத்த காணாமல் போடுவனோ? இதுகளெல்லாம் பற்றி எங்கட தலைவர்மார் ஆர் ஒரால் நினைக்கினம்.

அமெரிக்கா கெரியும் வந்துபோட்டாராம். எங்கன்ர சம்பந்தர் ஐயா, சுமந்திரன் ஐயாமார் எல்லாம் அவருக்கு எல்லாத்தையும் வடிவா எடுத்துச்சொன்னவையாம். இனி என்ன நாளைக்கு எல்லாம் வந்துசேர்ந்திடும் எண்ட எண்ணத்தில சனம் இருக்க வேண்டியதுதான். மே தினத்தை சாட்டி எல்லாரும் எலெக்சன் வேலையை தொடங்கிட்டனம்.

பொன்னம்பலம் ஐயான்ர பேரனும் பருத்தித்துறை முனையில கூட்டம் வைச்சவராம். சனம் பெருசா போகேல்லையாம். இப்ப இந்த மே தினத்தை ஆர் ஆர் கொண்டாடிற எண்டு ஒரு கட்டு மட்டும் இல்லை ஒரு மதிப்பும் இல்லை. கண்டவன், நிண்டவன், வந்தவன், போனவன் எல்லாம் கொண்டாடுறாங்களாம்.

எங்கன்ர மண்ணில போராட்டம் நடக்குது. சாமான் சட்டுக்கெல்லாம் தடை. எல்லாம் பெரிய தட்டுப்பாடு. அன்றாட சாப்பாட்டுக்கே எங்கட சனம் அல்லாடுப்படுகுது. இந்த நேரத்திலதான் எங்கட தமிழ்த் தேசிய முன்னணி தலைவர் எண்டு முன்னுக்கு வந்து படம் காட்டிற கஜேந்திரகுமாரும் தேப்பனும் கொழும்பில ஓர் கார் கண்காட்சி ஒண்டு நடத்தினவே. அதில 17 பென்ஸ்காரை காட்சிக்கு வைச்சவே. தான் சனத்தின்ர வாட்டத்தைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாத கோடீஸ்வர பெருமக்கள் இவைதான் இண்டைக்கு ஏழைகள் பாழைகளின்ர மே தினத்தை கொண்டாடுகினமாம்.

இப்ப ஏன் இதெல்லாத்தையும் கொண்டாடுகினம் எண்டு எங்களுக்கு நல்லா விளங்கும். இந்த வேசங்களை எல்லாம் நாங்கள் இனிமேலும் நம்புறத்துக்கு ஏமாளிகள் இல்லை. எங்கட தலைவர்மார் இனிமேலும் எங்களுக்கு தலைவர்மாரா இருக்கவும்கூடாது. இருக்கவும் முடியாது. இதுக்கு நாங்கள் செய்யவேண்டிய வேலை என்னெண்டால் செத்துக்கெட்டுப் போக மிஞ்சி இருக்கிற பழைய போராளிப் பொடியங்கள் எல்லாம் சின்னச் சின்ன பிரச்சினைகளை மறந்து ஒண்டா நிண்டு எங்கட மக்களுக்கு இவை உரிமையை வெண்டு குடுக்கவேண்டியதுதான். இதுக்க முன்னுக்கு நிக்கவேண்டிய ஆள் இஞ்ச வேற ஆருமில்ல.

எங்கட டக்கிளஸ் தம்பி மட்டும்தான். மாணவர் பேரவை காலம் தொடக்கம் ஈரோஸ் வழியா இளமைக்காலத்திலேயே பொதுமக்களோட பொதுமகனாக போராளிகளோடு போராளியாக மக்கள் விடுதலை இராணுவத் தளபதியா எல்லாம் நிண்டு விடுதலைக்காகப் போராடின பெருமை எங்கட டக்கிளஸ் தம்பிக்கு மட்டும்தான் இருக்குது. உலகெல்லாம் சிதறி இருக்கிற மக்களுக்காக உழைச்ச உண்மையான போராளிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இஞ்ச இருக்கிற ஒண்டு இரண்டு உண்மையானவங்களையும் இணைச்சுதான் விசயத்தை வெண்டெடுக்கவேணும். இதை டக்கிளஸ் தம்பி செய்யிறதுக்கு ஓம் படுவாரோ என்று மொக்கன் கேட்கிறான்?

இப்ப தெற்கில சில பழைய சிங்களப் போராளிகள் 1971ஆம் ஆண்டு கதிர்காமத்தில நிர்வாணமாக்கி வீதி வழிய இழுத்துச்செண்டு சுடப்பட்டுச் செத்த மக்கள் விடுதலை முன்னணிப் பெண் போராளி பிரேமாவதி மனம்பேரியை நினைவுகூருகிறார்கள். இது நடந்து கிட்டத்தட்ட 25 வருசத்தில எங்களின்ர பெண் போராளி சோபாவும் காரைநகர் கடற்படைத் தளத்தில உயிர்த்தியாகம் செய்தவள். இவள்தான் உயிர்த்தியாகம் செய்த முதல் பெண் போராளி. இந்த உண்மை வரலாற்றை மூடிமறைச்சு மன்னாரில சண்டையில செத்துப் போன மாலதிதான் வீரமரணம் அடைஞ்ச முதல் பெண் போராளி எண்டு சனங்களுக்குக் கதைவிட்டினமாம் கதை.

இண்டைக்கு அந்தப் பொய்க்கதைகள் எல்லாம் எங்கபோச்சு? சொன்னவையும் மண்ணோடு மண்ணாய் போச்சினம். உண்மையை ஒருகாலமும் ஒருத்தரும் ஒளிக்கேலாது. எவ்வளவு ஆழத்தில புதைச்சாலும் அது திரும்பவும் எழும்பிவந்து நிமிர்ந்து நிக்கும் இது எல்லாத்தையும் ஏன் இந்த மொக்கன் சொல்லுறான் எண்டால் எந்த விண்ணனும் உண்மையை காலத்துக்கு மறைக்கேலாது. உண்மைவெல்லும் என்பது திண்ணம். இனியாவது பொய்களுக்கு பக்கபலமா நிண்டு தங்களைக் காப்பாத்திக்கொண்ட, உயர்த்திக்கொண்ட தலைவர்மாரும் பேப்பர்காரன்களும் உண்மையாக நடப்பானுகளோ?? பாட்டொண்டு காதில கேட்குது. இதுவும் சுந்தராம்பாளின்ர பாட்டுத்தான். "வாழ்க்கை என்னும் ஓடம் வழங்குகின்ற பாடம் மானிடர் மனதினிலே மறக்கவொண்ணா வேதம்..."

**மொக்கன் இப்பவும் கேட்கிறான், இனியும் கேட்பான்.**

## ப்ளூரூத் ஸ்பீக்கர்கள்



தகவல் தொழில்நுட்ப துணைப்பொருட்கள், ஒலி - ஒளி மற்றும் கண்காணிப்பு பொருள்களை தயாரித்துவரும் ஜீப்ரோனிக்ஸ் நிறுவனம், ராக்கர் மற்றும் ஈடன் என்னும் இரண்டு புதுவகை ஸ்பீக்கர்களை தற்போது சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த ஸ்பீக்கர்களின் சிறப்பம்சம் அதில் இருக்கும் ப்ளூரூத் வசதி. இதனால் எந்தவொரு மொபைல் தொலை பேசி, டேப்லட் அல்லது மடிக்கணினியிலிருந்து இணைப்பு வயர்கள் இல்லாமலே பயன்படுத்தலாம். ஸ்பீக்கர்கள் பேட்டரியில் இயங்குகின்றன. மேலும் USB பென்டிரைவ் வசதி, SD/MMC கார்ட் வசதி, FM ரேடியோ, ஒக்ஸ் 3.5mm இன்புட் மற்றும் ரிமோட் கென்ட்ரோல் ஆகிய பலவகை சிறப்பம்சங்கள் உள்ளடங்கலாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## செவ்வாய் கிரகத்தில் ஒட்சிசனா?

செவ்வாய் கிரகத்தில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவரும் நாசா நிறுவனம் நுண்ணுயிர்களைக் கொண்டு ஒட்சிசன் உருவாக்கும் புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது.




இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியாவைச் சேர்ந்த டெக்ஷாட் என்ற நிறுவனத்துடன் இணைந்து செவ்வாய் கிரகத்தில் ஒட்சிசன் தயாரிக்கும் ஆராய்ச்சியை மேற்கொள்ள உள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி சிலிண்டர்களில் ஒட்சிசன் எடுத்துச்செல்வதற்கு பதிலாக நுண்ணுயிர்களைக் கொண்டுசென்று செவ்வாய் கிரகத்திலேயே ஒட்சிசன் உருவாக்கப்படும் என்று டெக்ஷாட் நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி பூஜின் போலந்த் தெரிவித்துள்ளார்.

செவ்வாய் கிரகத்தில் உள்ள மணலில் நுண்ணுயிர்களைக் கொண்டு சோதனைசெய்து, மனிதர்கள் உயிர்வாழ்வதற்கான சூழல் அமைப்பை உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். 2030ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்துக்கு விண்வெளி வீரர்களை அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் செவ்வாய்க் கிரகத்துக்கு செல்லும் விண்வெளி வீரர்கள் சிலிண்டர்களில் ஒட்சிசனை அடைத்து எடுத்துச் செல்லவேண்டியதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பேஸ்புக்கில் ஊடக நிறுவனங்களின் செய்திகளை வெளியிடும் வசதி

பிரபல ஊடக நிறுவனங்களின் செய்திகள் மற்றும் கட்டுரைகளை செய்தி ஊட்டம் (நியூஸ் ஃபீட்) பகுதியில் நேரடியாக வெளியிடக்கூடிய வகையிலான புதிய திட்டத்தை பேஸ்புக் நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது.




செய்திகள் மற்றும் கட்டுரைகளை தற்போது வழக்கத்திலுள்ள ஸ்மார்ட் போன்களில் பதிவிறக்கம் செய்வதற்கு குறைந்தபட்சம் 8 வினாடிகள் ஆகிறது. இதனால் ஏற்படும் சிரமத்தை குறைக்கும் பொருட்டு விரைவு செய்தி கட்டுரைகள் என்றபெயரில் புதிய சேவையை அறிமுகபடுத்தியுள்ளதாக பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி நியூயோர்க் டைம்ஸ், என்பிசி, அட்லாண்டிக், தி கார்டியன், பிபிசி நியூஸ் போன்ற பிரபல செய்தி நிறுவனங்களின் செய்தி கட்டுரைகள் நேரடியாக பேஸ்புக் செய்தி ஊட்டம் பகுதியில் வெளியிடப்படும். இதற்காக 9 முக்கிய செய்தி நிறுவனங்களும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இதன்மூலம் ஊடக சுதந்திரம் அதிகரிப்பதுடன், விரைவாகவும், எளிதாகவும் பேஸ்புக் பயனாளர்களுக்கு செய்திகளைக் கொண்டு சேர்க்கமுடியும் என பேஸ்புக் நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# புங்குடுதீவு மாணவி கொலை நடந்தது என்ன?



**தங்கச்சியை** காணவில்லை எனபது முதல்நாள் மாலைதான் தெரிந்தது. எல்லா இடமும் தேடினோம். கிடைக்கவில்லை. பொலிசாரிடம் முறையிட்டோம்.

அவர்கள் பொறுப்பில்லாமல் பதிலளித்தார்கள். மறுநாள் காலையில் தேடிக் கொண்டு சென்றபோது, அந்த வீட்டு வளவுக்குள் ஒரு சப்பாத்தைக் கண்டேன். எனக்கு அழுகை பீறிட்டு வந்தது. உடனே உள்நுழைந்தேன். அங்கு தங்கச்சி அலங்கோலமான நிலையில் சடலமாகக் கண்டேன். கால்கள் கட்டப் பட்டு, கைகள் தலையின் பின்னால் பாடசாலை கழுத்துப்பட்டியினால் இறுகக் கட்டப்பட்டிருந்தன. ஆடைகள் கிழித்து அகற்றப்பட்டிருந்தன. இதை பார்த்ததும் அந்த இடத்திலேயே நான் மயக்கமுற்று வீழ்ந்துவிட்டேன். அதன்பின்னர் எனக்கு என்ன நடந்ததென்று தெரியாது. தொடர்ந்து நான் யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலையில்தான் கண்விழித்துப் பார்த்தேன். இது புங்குடுதீவு மாணவி வித்தியாவின் சகோதரன் கூறியவை.

இப்பொழுது அனைவரது வாய்களும் புங்குடுதீவை பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றன. சமூக ஊடகங்கள் எல்லாம் அது பற்றியே கொந்தளிக்கின்றன.

கனவுகளுடன் வளர்ந்த இந்த இளம் மொட்டை சீரழித்து கொன்றதை எந்தவிதத்திலும் மன்னிக்கமுடியாது என்பதும், இதனை செய்தது நம்மவர்கள் தானென்பதுமே கொந்தளிப்பின் பிரதான காரணங்கள். புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சி.வித்தியா (வயது 18) என்ற உயர்தர வகுப்பு மாணவி கடந்த வியாழக்கிழமை (14.06.2015) கொடூரமாக காமகர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டிருந்தார்.

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்பவர் சி.வித்தியா. கடந்த புதன்கிழமை(13) அன்று காலை 7.30 மணியளவில் வீட்டில் இருந்து பாடசாலைக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை. மாலையாகியும் அவர் வீடு திரும்பாத நிலையில், பெற்றோர் பாடசாலைக்குச் சென்று விசாரித்துள்ளனர். ஆனால், மாணவி அன்று பாடசாலைக்கு வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பதற்றமடைந்த பெற்றோர் அவரைத் தேடத் தொடங்கியுள்ளனர். இரவு 10 மணிவரை தேடியும் மாணவி தொடர்பாக எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

இதனால் மேலும் பதற்றமடைந்த பெற்றோர் ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்து உள்ளனர். மக்களை பாதுகாக்கவேண்டிய பொலிசாரிடம் ஓடிச்சென்ற அந்த குடும்பத்திற்கு முதலாவது அதிர்ச்சி காவல்நிலையத்தில் காத்திருந்தது. அங்கு கடமையிலிருந்த ஒரு அதிகாரி, "உங்கட மகள் யாரையாது லவ் பண்ணி ஓடிப் போயிருப்பாள்" எனப் பொறுப்பற்ற விதத்தில் கூறியிருக்கிறார். இந்த வார்த்தைகள், மாணவியின் தாயாரின் மனதில் எவ்வ[ளவு] காயத்தை ஏற்படுத்தியது என்பது, மா[ண]வியின் மரணச்சடங்கில் வெளிப்பட்டது. [அ]வர் அந்த வார்த்தைகளை திரும்ப திரும்ப கூறி அரற்றியபடி இருந்தார். பொலிசா[ரி]ன் பொறுப்பற்ற பதிலுடன், அந்த குடும்பத்[துக்]கு அன்றிரவு தூக்கமில்லாத இரவாகவே கழிந்தது.

அடுத்த நாள் வியாழக்கிழமை கா[லை]யும் ஊர்மக்களும் உறவினர்களும் சே[ர்]ந்து தேடத்தொடங்கினர். மாணவி வழமை[யாக] பாடசாலைக்கு செல்லும் ஆலடி வீதியூ[டா]க அவர் செல்லவில்லை என்பது பின்னர் தெரியவர, அதனையடுத்து வீட்டிலிருந்[து] பாடசாலைக்குச் செல்லும் பாதைகள் அனைத்திலும் ஊர்மக்கள் தேடுதல் நடத்தினர். பிரதான வீதியிலுள்ள ஆல[டி]ச் சந்தியிலிருந்து செல்லும் சிறுவீதியொன்[றி]ன் (கண்ணகி அம்மன் கோயில் பகுதி) சு[மா]ர் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பாழடைந்த வீட்டின் பின்புறமாக உள்ள பற்றைக்குள் இருந்து மாணவியின் சட[லம்] கண்டுபிடிக்கப்பட்டது.

உறவினர்கள், ஊர்மக்கள் ஒன்றுதிர[ண்]டு சென்று பார்த்தபோ[து] மாணவியின் இரு கைகளும் தலைக் [கு] மேலாகச் சேர்த்து கட்டப்பட்ட நிலை[யி]லும் கால்கள் அல[ரி] மரச் செடியில் இழு[த்]து கட்டப்பட்ட நிலையில் இருந்தது. இதனை பார்த்த மாத்திரத்திலேயே, [அ]வர் பாலியல் வன்கொடுமையின் [பி]ன்னர் கொல்லப்பட்டார் என்பது புரிந்தது. இ[த]வே, அங்கு கூடியிருந்தவர்கள் [ம]த்தியில் கொதிப்பான நிலையை ஏற்படுத்[தி]யது. மக்கள் கொந்தளிக்கத் தொ[ட]ங்கினார்கள்.

உடனடியாக வி[டய]ம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. [ச]ம்பவ இடத்திற்கு விரைந்த ஊர்காவ[ற்]றுறைப் பொலிஸார், சடலத்தை மீட்டது[ட]ன் விசாரணைகளையும் நடத்தினர். மாணவி[யி]ன் சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் [அ]வரது புத்தகப்பை உள்ளிட்ட பொருட்[க]ள் சிதறுண்டு காணப்பட்டன. சம்[ப]வ இடத்திற்கு வந்த நீதிவான் ஆரம்ப [வி]சாரணைகளின் பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தர[விட்]டார். அதனைய[டு]த்து சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மாணவியின் சடலத்தை அண்மித்திருந்த பகுதியில் பொருட்களும் அணிந்து சென்றிருந்த ஆடைகளும் பொலிஸாரால் சான்றுப் பொருட்களாக எடுத்துச் செல்லப் பட்டன. யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மாணவியின் மரணம் தொடர்பாக தெரிவிக்கையில், மாணவி மிகமோசமாக, ஒன்றுக்கு மேற்பட்டோரின் கூட்டு வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், அவரது வாய்க்குள் துணி அடைக்கப்பட்டிருந்ததாகவும் அதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறலும் தலையில் அடிபட்டதனால் மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவுமே அவரது இறப்புக்கு காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலதிக பரிசோதனைகளுக்காக மாணவியின் உடற்பாகங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மாணவியின் தாயார் கூறுகையில், மகளின் வாயிலிருந்து இரத்தம் வெளியேறி இருந்ததாக பார்த்தவர்கள் கூறினார்கள். எனது பிள்ளை யாருடனும் நெருங்கிப் பழகமாட்டாள். எவருடனும் கதைப்பதுமில்லை. மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவள். வீட்டிலிருந்து புறப்பட்டு நேராகப் பாடசாலைக்கு சென்றுவிடுவார். அதே போன்று பாடசாலை விட்டு நேராக வீட்டுக்கு வந்துவிடுவார் எனக் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தின் பாரதூரத்தன்மையும், உணர்வுபூர்வத்தன்மையும் கருத்தில் கொண்டு விசேட அணிகள் களமிறக்கப் பட்டதாக, வடபிராந்திய பொலிஸ்மா அதிபர் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பொலிசாரின் தீவிர விசாரணையில் குற்றவாளிகள் அடையாளம் காணப் பட்டனர். ஒரு காமுகனை தெருவில் வைத்து மடக்கி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். அவனை தலை கீழாக கட்டி தொங்கவிட்டு உரித்தெடுத்ததில், உள்ளதனைத்தையும் கக்கி விட்டான்.

தமது கூட்டாளியை பொலிசார் மடக்கியதை எப்படியோ மோப்பம் பிடித்த மற்ற இரண்டு காமுகர்களும் பிரதேசத்திலிருந்து தப்பிச் செல்ல முயன்றனர். எனினும், இதற்குள் அவர்களை பொலிஸ் உளவாளிகள் கண்காணிப்பு வலையமைப்பிற்குள் கொண்டு வந்துவிட்டனர். அவர்கள் எந்த பேரூந்தில் எத்தனை மணிக்கு ஏறினார்கள் என்ற விபரங்கள் விலாவாரியாக கிடைக்க, புங்குடுதீவில் பேரூந்தை வழிமறித்த பொலிசார் அவர்களை மடக்கினார்கள். அவர்களையும் உரித்தெடுத்ததில் உள்ளதை ஒப்புக்கொண்டு விட்டனர்.

ஆனால் ஒரு விடயம் மட்டுமே நெருடலாக உள்ளது. குடும்ப முன்பகையை தீர்க்கவே இதனை செய்ததாக காமுகர்கள் கூறியதாக பொலிசார் நீதிமன்றில் அறிக்கை யிட்டுள்ளனர். எனினும், இதனை மாணவியின் உறவினர்கள் மறுக்கிறார்கள். இரண்டு குடும்பத்திற்கும் எந்த தொடர்புமே கிடையாதென்றும், எப்படி முன்பகை வரலாமென்றும் கேட்கிறார்கள். அதிகளவான தண்டனையிலிருந்து தப்பிக்க காமுகர்கள் விடும் கதையா இதுவென்பதை நன்றாக ஆராயவேண்டும். அதேபோல, இரண்டு குடும்பங்களும் உறவுமுறையானவை என்ற பொலிசாரின் கூற்றையும் மாணவியின் உறவினர்கள் மறுக்கிறார்கள். இதுவும் ஆராயப்பட வேண்டியது. மாணவியின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் வியாழக்கிழமை இரவு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்பின்னர் சடலம் புங்குடுதீவிற்கு கொண்டு வரப்பட்டு அவரின் பாடசாலையின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு பாடசாலை மாணவர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் தமது அஞ்சலிகளை செலுத்தினர்.

அதன்பின்னர் மாணவியின் உடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. இந்த கொலை மாணவர்கள் மத்தியில் பரவலான கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் எனப் பரவலாக போராட்டங்களில் ஈடுபட்டனர். பெண்கள் உரிமை, பெண்களை சகமனிதர்களாக ஏற்கும் பக்குவம் தொடர்பான பரவலான பிரக்ஞையை இந்த சம்பவத்தை அடிப்படையாக வைத்து வளர்த்தெடுக்க வேண்டியது பாடசாலைகளின் கடமை. வெறும் போராட்டங்களுடன் நின்று விடுவதால் பலனில்லை. மறுநாள் பத்திரிகைகளில் படம் வருவது மாத்திரமே அதன் பிரதிபலனாக இருக்கும்.

**நன்றி: இணையம்**







# ஆஸ்துமாவுக்கு ஆகாதவர்கள் யார்?

**குளிர்** காலத்திலும் மழைக் காலத்திலும் கடுமையைக் காட்டும் ஆஸ்துமா, வயது வித்தியாசமின்றி யாருக்கு வேண்டுமானாலும் வரலாம்.

நுரையீரலில் உள்ள மூச்சுக் குழல் தசைகள் சுருங்குவதாலும், மூச்சுக்குழலில் உள்ள உள் சவ்வு வீங்குவதாலும் மூச்சு செல்லும் பாதை சுருங்கக்கூடும். அந்தச் சவ்விலிருந்து நீர் சுரப்பதால் மூச்சுப் பாதை மேலும் அடைபட்டு, மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படுகிறது. அதுதான் ஆஸ்துமா.

### எப்படி வரும்?

ஒருவருக்கு அலேர்ஜி எனப்படும் ஒவ்வாமை இருக்கிறதென்றால், அந்த ஒவ்வாமை தொடர்ந்து துண்டப்படும்போது ஆஸ்துமா வந்துவிடலாம். உணவு, தூசி, புகை, தொழிற்சாலை மாசுபாடு, மருந்துகள் என ஒவ்வாமையைத் தூண்டும் காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

அடிக்கடி சளி பிடிப்பது, அடுக்குத் தும்மல், மூக்கு ஒழுகுதல், மூக்கடைப்பு, வறட்டு இருமல் போன்ற பிரச்சினைகள் தொடர்ந்தால் கண்டுகொள்ளாமல் விட்டுவிடக் கூடாது. முறையாகச் சிகிச்சை எடுக்காவிட்டால், ஆஸ்துமாவர வாய்ப்பு உள்ளது.

### கட்டுப்படுத்துதல்

ஆஸ்துமாவை முழுமையாகக் குணப்படுத்த முடியாது. ஆனால், கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியும். ஆஸ்துமா நோய் உள்ளவர்கள், புழங்கக்கூடிய இடங்கள் சுத்தமாக இருக்க வேண்டும்.

தூசு, குப்பை, அழுகிய உணவுப் பொருட்கள் போன்றவை அருகே இருக்கக்கூடாது. வீட்டில் ஒட்டடை சேராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

அழுக்கான உடைகள், படுக்கைகள், தலையணைகளைப் பயன்படுத்தக்கூடாது. அழுக்குகளில் கண்ணுக்குத் தெரியாத பூச்சிகள் உருவாகும். அவை ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஆகாது.

குளிரூட்டப்பட்ட அறைகளைத் தவிர்ப்பது நல்லது. குளிர்ச்சியான காற்றும் ஆகாது. சுழல் விசிறிக்கு மிக அருகே படுக்கக்கூடாது.

வாசனை திரவியங்கள், ஊதுவத்திகள், கொசுவிரட்டிகள், சாம்பிராணி புகை, கற்பூரம், அடுப்பு புகை ஆகியவை ஆஸ்துமா நோயாளிகளுக்கு எதிரிகள். ஆஸ்துமா உள்ளவர்கள் வீட்டில் வளர்ப்புப் பிராணிகள் வளர்ப்பதைத் தவிர்க்க வேண்டும். அவற்றின் உரோமம், துர்நாற்றம், கழிவு ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஆகாது.

### செய்யக் கூடாதது

ஆஸ்துமா நோயாளிகள் புகை பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும். புகைபிடிப்பவர்கள் அருகேயும் இருக்கக்கூடாது.

வீட்டைச் சுத்தப்படுத்துதல், ஒட்டடை அடித்தல், கழிவறைகளில் ஆசிட் பயன்படுத்துதல், வண்ணம் பூசுதல், அதிக நறுமணப் பூக்கள் அருகே புழங்குவது போன்றவற்றைச் செய்யக் கூடாது. வெளியில் வாகனங்களில் செல்லும்போது முகமூடி அணியவேண்டும்.

சில தொழிற்சாலைகளும்கூட ஆஸ்துமாவுக்குக் காரணமாகின்றன. இரசாயனத் தொழிற்சாலைகள், பஞ்சு மில், அரிசி மில், மா மில், சீமெந்து தொழிற்சாலை, நூற்பாலைக் கழிவுகளில் இருந்து வெளிப்படும் புகையும் தூசும் ஆஸ்துமாவுக்கு ஆகாது. இந்த இடங்களில் பணிபுரிவதைத் தவிர்ப்பது மிகவும் நல்லது.


தயிர், சர்பத், ரோஸ் மில்க், லஸ்ஸி, குளிர்பானங்கள், குளிர்ந்த தண்ணீர் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். இளஞ்சூடான தண்ணீரைப் பருகுவது மிகவும் நல்லது.

### ஏற்ற உணவு

சில உணவுப் பொருட்கள் ஆஸ்துமா நோயாளிகளுக்கு நல்லது என மருத்துவ ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. குறிப்பாக விற்றமின் சி அதிகம் உள்ள உணவுப் பொருட்கள். ஒரேஞ்சு, எலுமிச்சை, சிவப்பு மிளகு ஆகியவற்றில் விற்றமின் சி அதிகம் உள்ளது. இவை ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்த உதவுகின்றன. அப்பிளும்கூட ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்த உதவுவதாகக் கூறுகின்றன ஆய்வுகள்.

தினமும் காலையில் மூச்சுப் பயிற்சி செய்வது மிகவும் நல்லது. பலூனை ஊதிப் பார்க்கலாம். காற்றுத் தலையணைக்குள் காற்றை ஊத முயற்சிக்கலாம். சிறுவர்கள் ஊதி விளையாடும் சோப்புக் குமிழ் ஊதுகுழலைக்கூட இதற்குப் பயன்படுத்தலாம்.

# நீரிழிவு நோயைத் தடுக்கும் முட்டை



மனிதர்களை தாக்கும் முக்கிய நோய்களில் நீரிழிவும் ஒன்று. இந்த நோய் தற்போது சாதாரணமாகி விட்டது. அதில் டைப் 2 நீரிழிவு நோய் ஒருவரது வாழ்க்கை முறை பழக்கவழக்கங்களான உடற்பயிற்சி, சத்துணவு போன்றவைகளால் ஏற்படுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. அதேநேரத்தில் அதிகளவு கொழுப்பு சத்துகளால் உடலில் குளுக்கோஸ் குறைபாடு ஏற்பட்டு அதன்மூலம் இந்நோய் ஏற்படுவதாகவும் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தற்போது முட்டை சாப்பிட்டால் டைப்-2 நீரிழிவு நோய் தாக்கம் குறையும் என புதிய ஆய்வு தெரிவிக்கிறது. முட்டையில் உள்ள கொழுப்பு சத்து உடலில் சுரக்கும் குளுக்கோஸ் அளவை சரிசமப்படுத்தி சீரமைத்து நீரிழிவு நோய் வராமல் தடுக்கிறது. கிழக்கு பின்லாந்து பல்கலைக்கழகத்தின் இருதய நோய் தடுப்பு பிரிவை சேர்ந்த நிபுணர்கள் 432 பேரிடம் ஆய்வு நடத்தினார்கள். அதில் வாரத்துக்கு ஒரு முட்டை சாப்பிடுபவர்களைவிட வாரத்துக்கு 4 முட்டை சாப்பிடுபவர்களுக்கு டைப்-2 நீரிழிவு நோய் தாக்குதல் குறைவாக இருந்தது.

அதன்மூலம் முட்டை சாப்பிட்டால் நீரிழிவு நோய் தாக்கம் குறையும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
நாளிதழ்

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்தும்

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

புலமைப் பரிசில் மற்றும் 3 ஆம் 4 ஆம் தர மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் தினமும் விடைகளுடன் வெளியாகின்றன!

புது அம்சங்கள்...
புது மாற்றம்...
புதுப் பொலிவு...
புதுச் சுவை...
புது விலை...





மே 21 – 27, 2015

# என் முதல் காதல் கதை

**என்** முதல் காதல் இல்லை என் முதல் ஈர்ப்பு எப்படி சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை. ஆனால் அதுதான் என் மனதில் அடித்த முதல் அலை.

அப்போது நான் எட்டாம் வகுப்பு படித்துகொண்டிருந்தேன். பட்டாம்பூச்சியாய் பள்ளிசெல்வது அப்புறம் சாயுங்காலம் ஆனால் வந்து அம்மாவின் கூட்டில் பிள்ளைபூச்சியாய் மாறி செல்லம் கொஞ்சும் அம்மா பிள்ளையாகத்தான் இருந்தேன் நான்.

என்றும்போல பள்ளியிலிருந்து சரியாக இரண்டரைக்கு வீடு திரும்பிய நான் வழக்கம்போல நாள்முழுதும் நடந்த கதைகளை வாய்மூடாமல் சொல்ல ஆரம்பித்தேன். அம்மாவிடம் இடையிடையே அம்மா தந்த டீயை சுவைத்தபடி. எங்கள் கதைகள் முடிந்ததும் அம்மா என் கையில் திணித்த மிக்சர் டப்பாவோடு அன்றைய பத்திரிகையை எடுத்துக்கொண்டு என் வீட்டு திண்ணையில் சாய்ந்து படிக்க ஆரம்பித்தேன்.

திடீரென ஒரு பறவையின் சத்தம் ஆனால் வழக்கம்போல கீச் கீச் இல்லை சுரேஷ் சுரேஷ் என்றது. அப்போது சத்தியமாக எனக்கு தெரியாது. அது அவன் பேரென்றும் அதையே நான் பைத்தியமாய் அசைபோட்டு கொண்டிருக்கப் போகிறேன் என்றும். ஆச்சரியமும் அதிசயமுமாக நான் எட்டிப் பார்த்தபோது என் கண்ணில் பட்டது ஒரு அழகிய பச்சைக்கிளியும் அதன் அருகில் புன்னகை பூத்துக்கொண்டிருந்த அவன் முகமும். அதன்பின் பத்திரிகையில் எந்த எழுத்தும் என் மனதில் பதியவில்லை.

அம்மாவிடம் கிளியைப் பற்றி சொன்னபோது ஆமா எதிர்வீட்டுக்கு புதுசா குடி வந்திருக்காங்க என்று சாதாரணமாய் சொல்லிவிட்டு நகர்ந்தாள். அப்புறம் பக்கத்துக்கு வீட்டு அக்காவிடம் டியூஷன் படிக்க செல்ல பையை எடுத்தேன். அப்புறம் இரவு உணவு என எல்லாம் அதுவரை இயல்பாய் நடந்தது நான் என் தலையணையில் தலைசாயும்வரை.

கண்ணை மூடினால் வந்து ஒட்டிக் கொள்ளும் தூக்கம் அன்று என்னை திக்குமுக்காடத்தான் செய்தது. என் போர்வைக்குள் வந்து பதிந்து கொண்டது அன்று சாயங்காலம் பார்த்த முகம். எவ்வளவோ துரத்த முயன்று பார்த்தேன். அது ஏனோ என் இதயத்தோடு ஒட்டிக்கொண்டது. இது என்ன உணர்வு ஏன் இப்படி என்று புரியாமல் எப்படியோ போராடி தூங்கிப் போனேன்.

காலையில் அம்மாவிடம் சொல்லத் தோன்றியும் சொல்லாமல் இட்லியோடு சேர்த்து சொல்ல நினைத்ததையும் விழுங்கினேன். முதல் முறையாக அம்மாவிடம் எதோ சொல்ல யோசிக்கிறேன். சே என்னாச்சு என்று உள்ளுக்குள் உளறியபடி அம்மாவுக்கு கையசைத்து விடை பெற்றேன்.

தோழியிடம் மதிய சாப்பாட்டின் போது விஷயத்தை சொன்னபோது சிரித்தாள். கூடவே ரொம்ப சினிமாலாம் பாக்காத டி என்று வேற சொல்லி வைத்தாள். அவளிடம் ஏன் சொன்னேன் என்று யோசித்தேன். ஆனால் அம்மாவிடம் சொல்வதைவிட இதை அவளிடம் சொல்ல வெகு இலகுவாய் இருந்தது.

அந்த சாயங்காலத்தின் வரவை ஏனோ என்னை அறியாமலே அதிகமாய் எதிர்பார்க்க தொடங்கினேன். பத்திரிகையோடு நான் திண்ணை சென்றபோது எங்கள் வீட்டு முல்லையின் வாசம் அன்று அதிகமானது போல் தோன்றியது. வீட்டுமுன் நின்ற கொய்யா மரம் அதீத அழகுடன் தென்பட்டது. மெல்ல எட்டி பார்த்தேன். கிளியையும் காணவில்லை கூடவே அவனையும்தான்.

என்னை ரொம்ப ஏமாற்றாமல் கொஞ்சநேரத்திலே வந்துசேர்ந்தான் கிளியோடும் குட்டி செடியோடும். ஏதோ பூச்செடிபோல தெரிந்தது. வெகுநேரமாய் மண்ணை கிளறினான். அப்புறம் செடி நட்டான். வீட்டுக்குள் சென்றவன் ஏதோ விதைகள் கொண்டு வந்து தூவினான்.

அதன்பின் ஒவ்வொரு நாள் சாயங்காலம் அவனின் குட்டி செடிகளுக்கு தண்ணி ஊற்றி பராமரிப்பது அவனுக்கு வாடிக்கையானது. அந்த குட்டி செடிகளையும் அதைவிட அதிகமாக அதன் சொந்தக்காரனையும் ரசிக்க ஆரம்பித்தேன் நான். அந்த செடிகளோடு சேர்ந்து எனக்குள்ளும் ஏதோ வளர ஆரம்பித்தது... ஆம் அவன் மேலான ஈர்ப்போ, நேசமோ, ஏதோ ஒன்று எனக்குள் வேர்விட்டு வெகு அழகாய் வளர ஆரம்பித்தது...

அந்த விழிகள் எதேச்சையாக என்னை எப்போதாவது நோக்கியதுண்டு. அதை கண்டதும் உடனே தாழ்ந்து விடும் என் விழிகள். இப்படியான சுகமான கண்ணாமூச்சிகளோடு கடந்தது ஒவ்வொரு மாலைப்பொழுதும். அப்போதெல்லாம் சாயங்காலம் ஆனாலே சொல்லாமலே வந்து ஒட்டிக்கொள்ளும் ஒரு இனம்புரியாத அதீத சந்தோசம். பறந்துகொண்டே தினமும் அமர்ந்து இருப்பேன் அந்த குட்டி திண்ணையிலே.

என்றாவது, ஏதாவது அவனோடு பேசவேண்டும் எனக் காத்திருந்தேன். அதற்கான வாய்ப்பும் வந்தது ஒரு நாள். அப்பா சுத்தியல் வேண்டும் என எதிர்வீட்டில் கேட்கச் சொன்னார். அன்ரி அன்ரி என்று அழைத்தபடியே எங்க வீடு சுவரோடு நின்ற எனக்கு என்னமா என்ற பதிலோடு வந்தது அவன் அம்மா. சுத்தியல் இருக்கா அனரி என்றேன். ஆ இதோ வரேம்மா என்றவள் கைவேலையாக இருந்ததால் சுரேஷ் எனக் குரல் கொடுத்தாள்

ஓரிரு நிமிடத்தில் சுத்தியலோடு என்னருகில் அவன். படபடவென அடித்த இதயத்தை வெகு சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு தேங்க்ஸ் என்று மெல்லமாய் சொல்லிவிட்டு சுத்தியலோடு நகர்ந்தேன். தேங்க்ஸ் சுரேஷ் என்று சொல்லவேண்டும் என்றுதான் நினைத்தேன். ஏனோ அவன் பேரை சொல்லமுடியாமல் விழுங்கினேன்.

அப்புறம் ஒரு ஆறு மாதம் இருக்கும்.

வெயில் காலத்தில் என் இதயத்தில் புயல் அடிக்கும் என்று தெரியாமலே அன்றைய கோலத்தை வரைந்து கொண்டிருந்தேன். வெளியே சடசடவென பாத்திரம் உருட்டும் சத்தம். எதிர்வீட்டு கட்டில் நாற்காலி எல்லாம் தோட்டம் பக்கம் வந்திருந்தது. என்ன இது என நினைத்தபடி அம்மாவிடம் சென்றேன் கோலத்தை முடித்த கையோடு.

அம்மா சொன்னாள் ஆமாடி அவங்க வீடு மாறுறாங்க. ஓனர் கோடை விடுமுறையை கழிக்க இரண்டு மாதம் குடும்பத்தோடு இங்கு வராங்களாம். பாவம் அந்த அம்மாவுக்கு இந்த வீட்டை காலி பண்ண மனசே இல்லை என்று சொன்னாள். அந்த பச்சை கிளி சத்தம் கேட்காது இனி என்று சோகமாய் சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

அம்மா பச்சைக்கிளியை மட்டுமா பார்க்கமுடியாது. இனி அவனை என்று விக்கித்து நின்ற நான் அம்மாவின் தோளில் சாய்ந்து உரக்க அழவேண்டும் போல் தோன்றியதை அடக்கிவிட்டு குளியலறையில் சென்று அழுது முடித்து அதை மறைக்க முகத்தையும் கழுவி வந்தேன். காலை சாப்பாடு சுத்தமாய் இறங்கவில்லை. ஏண்டி என்ற அம்மாவிடம் வயிறு வலிக்குது அதான் என்று சமாளித்து விட்டு நான் விட்டதை வெறித்து பார்த்துக்கொண்டிருந்தேன்.



**— எஸ் —**

அப்புறம் ஐயோ இனி அவனை பார்ப்பேனோ?, இல்லையோ என்ற பயத்தில் வீட்டின் முன்னறையின் ஜன்னலோடு ஐக்கியமானேன். குட்டிபோட்ட பூனையை போல தான் அன்று முழுவதும் நடந்து கொண்டிருந்தேன். அங்கு எல்லாம் வண்டியில் ஏற்றியதுபோல தெரியவே என்னை அறியாமலே திண்ணையை நோக்கி நடக்க ஆரம்பித்தது என் கால்கள். உட்கார மனமற்று கொய்யாப் பழங்கள் பறிக்கும் பாவனையில் நின்றுகொண்டிருந்தேன்.

அவன் தோட்டத்தின் பக்கமாய் வந்து தன் செடிகளை பாவமாய் பார்த்தபடி அங்கிருந்த இரு ரோஜா தொட்டிகளை மட்டும் எடுத்துக் கொண்டான். அப்போது என்னை ஒரு பார்வை பார்த்தான். அதுதான் கடைசிப் பார்வை. அவன் விழிகள் என்னிடம் என்ன சொன்னதோ. ஆனால் ஆழமாய் பார்த்தது. அதில் சின்னதாய் ஒரு வலி தெரிந்தது. அறியாப்பிள்ளையாய் வந்த விழி நீரை மறைத்தபடி நான் நின்று கொண்டிருந்தேன்.

நாட்கள் நகர ஆரம்பித்தது. சில நேரம் அவனை பார்க்க முடியவில்லை என வாடிப்போவேன். சிலநேரம் அந்த கடைசி பார்வையில் கலந்திருந்த அன்பை நினைத்து என்னை ஆற்றிக்கொள்வேன் என்றாவது ஒருவேளை அவனை காண்பேன் எண்டு வேறு நம்பிக் கொண்டிருந்தேன்.

அப்புறம் அந்த வீட்டில் எத்தனையோ மாற்றங்கள். புது மனிதர்கள். புது நாய்க்குட்டி. புதுச்செடிகள். புது வண்ணச் சுவர் என எத்தனையோ மாறிக் கொண்டிருந்தது. ஆனால் எனக்கு மட்டும் அது அவன் வீடு போலவும் எதிரில் அவன் தோட்டத்து பூக்கள் இருப்பதுபோன்ற பிரமையும் களைய வெகுகாலம் எடுத்தது. மாற்றங்களும் காலமும் அழிக்க முடியவில்லை அந்த நினைவுகளை. அவன் பெயரும் அந்த அழகிய முகமும் அந்த கடைசிப் பார்வையும் என் இதயத்தின் ஒரு ஓரத்தில் அந்த ஒளிந்துகொண்டன.

அன்றைய வலி இன்று இல்லை ஆனால் அந்த நினைவுதரும் சுகம் இன்றும் அன்றுபோல தான். இப்போது அந்த பெயரை எங்காவது கேட்டால் என் இதழ்கள் இதயம் எல்லாம் பூக்கும். நான் மீண்டும் அந்த எட்டாம் வகுப்பு மாணவியை போல தான் ஆகிப்போவேன். தவறாமல் திரும்பிப் பார்க்கும் என் விழிகள் அது என் சுரேஷாக ஒரு வேளை இருக்ககூடுமோ என்ற குட்டி நம்பிக்கையோடும் நேசத்தோடும்.

# திருப்பிக் கட்ட முடியுமா?



பதினோராம் நூற்றாண்டில் தமிழ், சமஸ்கிருத, பல்லவ, திராவிட கலாச் சாரங்களுடன் தொடர்புடைய மன்னர் களால் கட்டப்பட்ட இந்தக் கோவில்களை விடப் பழமைவாய்ந்த கோவில்களான திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில், மயிலை கபாலி கோவில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில், சிதம்பரம் நடராஜர் கோவில் போன்றவை இன்னும் வழிபாட்டு இடங்களாக உயிர்ப்புடன் இருக்கின்றன.

ஆனால் கம்போடியாவின் அங்கோர் வாட் கோவில்கள் சிவன், விஷ்ணு கோவில்களாகத் தொடங்கி பௌத்த கோவில்களாக மாறி சில நூறு வருடங் களிலேயே சிதிலமடைந்து, சிற்பங்கள் மேலை நாட்டினரால் கொள்ளையடிக்கப் பட்டு, பின்தொடர்ந்து நடந்த பல்வேறு யுத்தங்களால் கவனிப்பாரற்று மேலும் பாழாகின. சுமார் இருபது முப்பது வருடங்களாகத்தான் இந்தக் கோவில்கள் இந்தியா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளின் நிதி உதவியுடன் யுனெஸ்கோ வழிகாட்டுதலில் மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

அடர்ந்த மரச்சோலைகளின் நடுவே இருக்கும் அகழிகளும் கோட்டைச் சுவர்களுமாக இருக்கும் இந்தக் கோவில் இடிபாடுகளில் கம்போடிய சமூகத்தின் ஒரு காலத்தைய வளமும், செழிப்பும், கலைத்திறனும் பளிச்சிடுவதைப் போலவே, கோவில் வளாகத்திலும், வெளியே சியாம் ரீப் நகரின் ஒவ்வொரு சந்திலும் மூலையிலும் கடைத்தெருவிலும் கம்போடியாவின் இன்றைய கொடூரமான ஏழ்மை முகத்தில் அறைகிறது.

ஆஸ்திரேலியா முதல் கனடா வரையி லான சுற்றுலா பயணிகள் இடிந்த இந்து அல்லது பௌத்த கோவில்களைக் காண வரவில்லையென்றால் இந்த நகரம் முழுக்க செத்துப்போய்விடும்.

உள்ளூரில் எதற்கும் கம்போடிய ரியாலை யாரும் விரும்புவதில்லை. அமெரிக்க டொலர் மட்டுமே பெரிதும் புழங்குகிறது. ஒரு டொலருக்கு நான்காயிரம் ரியால்! கம்போடியாவில் எந்த பெரும் தொழில் உற்பத்தியும் இல்லை. ஓடும் எல்லா கார்களும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. நகரத்தில் பஸ் வசதியே கிடையாது. மொப்பெடுக்குப் பின்னால் டிராக்டர் டிரெய்லர் போல சீட் வைத்த இணைப்பைக் கட்டிக் கொண்டு டுக்டுக் எனப்படும் ஆட்டோக்கள் மட்டுமே ஓடுகின்றன. 90 சதவிகித மக்கள் விவசாயத்தை நம்பியே இருக்கிறார்கள். எல்லாரும் டூரிஸ்ட்டுகளை நம்பி இருக்கிறார்கள்.

> எந்த நவீன உபகரணமும் இல்லாமல், வெறும் குச்சிகளை வைத்துக் கொண்டு வெடி இருக்கும் இடத்தைக் கண்டறிந்து அகற்றும் திறமை உடையவர் ரே. உலகம் முழுவதும் கண்ணிவெடி அகற்றலில் ஈடுபடும் அமைப்புகள் அவருக்கு இதற்கான நவீனப் பயிற்சி கொடுத்து தொடர்ந்து அவரைப் பயன்படுத்துகின்றன. ரேவை சி.என்.என் டிவி 2010இன் தலைசிறந்த மனிதராக அறிவித்தது. அவர் வாழ்க்கை இப்போது ஒரு படமாக்கப்பட்டு வருகிறது.



கடும் வெயிலில் கோவில் இடிபாடு-களை பல கிலோமீற்றர் நடந்து நடந்து சுற்றிப் பார்த்தபோது அவை என்னைக் கவர்ந்ததைவிட, அதிகமாக என் கவனத்தை ஈர்த்தது வேறொன்றுதான். கோவில் வளாகத்துக்குள் பல்வேறு கம்போடிய இசைக்கருவிகளை உட்கார்ந்து இசைத்தபடி, டூரிஸ்ட்டுகளிடம் மௌனமாக பிச்சை கேட்டுக்கொண்டு இருந்த குழு ஒன்றைப் பார்த்தேன். அன்றிரவு நகரத்துக்குள் டூரிஸ்ட்டுகள் அதிகம் புழங்கும் பப் ஸ்ட்ரீட், நைட் மார்க்கெட் பகுதியில் நடுத்தெருவில் இதேபோன்ற இன்னொரு குழுவைப் பார்த்தேன்.

இந்த இசைக்குழுக்களில் இருப்போர் பலரும் கம்போடியாவில் சுமார் 30 வருடங்கள் அமெரிக்க, ரஷ்ய, சீன ஆயுத உதவியுடன் வெவ்வேறு இயக்கங்கள் நடத்திய யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் எல்லாரையும் பாதித்தது யுத்தத்தின் ஒரே அம்சம்தான். பூமிக்கடியில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள். சண்டையிடும் எதிரெதிர் அணிகள் இன்னொரு அணி தம்மை நெருங்கவிடாமல் தடுக்க மாறி மாறி நிலமெங்கும் கண்ணிவெடிகளைப் புதைத்திருக்கின்றன. சண்டை முடிந்தாலும், கண்ணிவெடிகளை அகற்றும் வேலை முடியவில்லை.

எங்கெல்லாம் கண்ணிவெடி புதைக்கப் பட்டிருக்கிறது என்று கண்டுபிடிப்பது சுலபமல்ல. அரசாங்கத்தின் இராணுவங்கள் கண்ணிவெடியைப் புதைக்கும்போதே அதைப் பற்றிய வரைபடம் தயாரித்துக் கொள்ளவேண்டும். கெரில்லா அமைப்பு களும் வரைபடம் வைத்திருப்பதுண்டு. ஆனால் பெரும்பாலான சமயங்களில் இரு தரப்பினரின் பாசறைகளும் தளவாடங்களும் அழிக்கப்படும்போது இந்த வரைபடங்களும் அழிந்துவிடும். ராணுவத்தின் வரைபடத்தின் பிரதி வேறு நகரில் தலைமையகத்தில் இருக்கும் வாய்ப்பு உண்டு. போராளி அமைப்புகள் அழியும்போது எல்லா தகவல்களும் சேர்ந்தே அழியும் வாய்ப்பே அதிகம்.

இந்தக் கண்ணிவெடிகள் எங்கெங்கே இருக்கின்றன என்று தெரியாமல் காலை வைத்து உறுப்புகளை இழந்து நடைப் பிணங்களாக வாழ்வோர் நிலை மிக பரிதாபகரமானது. கம்போடியாவில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இப்படி கை, கால் இழந்தவர்கள் உள்ளனர். அவர் களில் சிலர்தான் பாட்டு பாடி டூரிஸ்ட்டு களிடம் பிச்சை எடுத்துக் கொண்டிருக் கின்றனர்.

கம்போடியாவில் கண்ணிவெடியில் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்கள்தான். சுமார் 2 ஆயிரத் துக்கும் மேற்பட்ட கிராமங்கள் கண்ணி வெடியால் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கே காட்டில் சுள்ளி பொறுக்கச் செல்பவர்களும், வியட்நாம் யுத்தத்தின்போதும் உள்ளூர் யுத்தத்தின்போதும் போடப்பட்ட குண்டு களின் உலோகக் கவசங்களைப் பொறுக்கிக் கொண்டு வந்து விற்றுப் பிழைக்கச் செல்வோரும் கண்ணிவெடியாலும் இன்னும் வெடிக்காமல் இருக்கும் சில க்ளஸ்ட்டர் குண்டுகளாலும் உயிரையும் உறுப்புகளையும் இழக்கிறார்கள்.

பெருமளவில் கம்போடியாவில் கண்ணி வெடிகளும் குண்டுகளும் வயல்களிலிருந்து நிலங்களிலிருந்து கடந்த பத்தாண்டுகளில் அகற்றப்பட்டாலும் இன்னும் சுமார் 60 இலட்சம் கண்ணிவெடிகள் இருப்பதாக மதிப்பிட்டிருக்கிறார்கள். கண்ணிவெடியை அகற்றுவது எளிதானதும் மலிவானதும் அல்ல. ஒரு கண்ணிவெடியைப் புதைக்க ஆகும் செலவு வெறும் மூன்று டொலர்தான். அகற்றுவதற்கு ஒரு வெடிக்கு சுமார் 1200 டொலர் செலவு ஆகிறது.

வருடந்தோறும் சுமார் மூன்று கோடி டொலர் கண்ணிவெடி அகற்ற மட்டும் உலக நாடுகளின் நன்கொடைமூலம் செலவிடப்படுகிறது. இதே நிதி உதவி நீடித்தால், மொத்த கண்ணிவெடிகளையும் அகற்றி முடிக்க 15 முதல் 20 வருடம் ஆகும் என்கிறார்கள். அதுவரை அந்த நிலங்களில் விவசாயம் செய்யமுடியாது.

கம்போடியாவில் கண்ணிவெடி வைத்தவரே கண்ணிவெடிக்கு எதிராக இயக்கம் நடத்தி செயற்பட்டு வருகிறார். அவர் பெயர் அக்கி ரா. ஆறு வயதில் அவர் பெற்றோர் கெமர் ரௌஜ் எனப்படும் இடதுசாரி தீவிரவாதப் போராளி அமைப் பால் கொல்லப்பட்டனர். அவரை அமைப்பே எடுத்து வளர்த்தது. பத்து வயதிலேயே அந்த அமைப்பின் போர் வீரராக்கப்பட்டார் ரே. பின்னர் 16 வயதில் எதிரிகளான வியட்நாம் இராணுவத்தால் சிறைபிடிக்கப்பட்டதும், அந்த இராணுவத் தின் படை வீரராக்கப்பட்டார். இப்படி குழந்தை சிப்பாயாக இருந்தது முதல் யுத்தம் முடியும்வரை ரே தானே ஆயிரக்கணக்கான கண்ணிவெடிகளைப் புதைத்திருக்கிறார். தொண்ணூறுகளின் இறுதியில் யுத்தம் ஓய்ந்ததும், ரே கண்ணி வெடிகளுக்கு எதிரானவராகவும் யுத்த எதிர்ப்பாளராகவும் மாறி இதுவரை 50 ஆயிரம் கண்ணிவெடிகளை தானே அகற்றியிருக்கிறார்.

தானே எந்த நவீன உபகரணமும் இல்லாமல், வெறும் குச்சிகளை வைத்துக் கொண்டு வெடி இருக்கும் இடத்தைக் கண்டறிந்து அகற்றும் திறமை உடையவர் ரே. உலகம் முழுவதும் கண்ணிவெடி அகற்றலில் ஈடுபடும் அமைப்புகள் அவருக்கு இதற்கான நவீனப் பயிற்சி கொடுத்து தொடர்ந்து அவரைப் பயன்படுத்துகின்றன. ரேவை சி.என்.என் டிவி 2010இன் தலைசிறந்த மனிதராக அறிவித்தது. அவர் வாழ்க்கை இப்போது ஒரு படமாக்கப்பட்டுவருகிறது.

அக்கி ரே கண்ணிவெடி ஆபத்து பற்றி விளக்குவதற்கென்றே ஒரு தனி மியூசியத்தை சியாம் ரீப் நகரில் வைத் துள்ளார். அங்கே சென்று சுற்றிப் பார்த்தேன். அதில் சொல்லும் தகவல்கள் எல்லாம் பெரும் கவலை அளிக்கின்றன.

உலகம் முழுவதும் கண்ணிவெடிகளை இனி வைக்கக்கூடாது, முழுக்க நீக்கிவிட வேண்டும் என்று ஐ.நா மூலம் கனடா ஒட்டாவா நகரில் ஒப்பந்தம் 1997இல் போடப்பட்டது. இதை ஏற்றுக்கொண்டு 167 நாடுகள் கையெழுத்திட்டன. இவை தம்மிடம் உள்ள கண்ணிவெடிகளை எல்லாம் அழித்துவிட ஒப்புக்கொண்டன. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, பல்வேறு ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா, இன்னும் பல சிறு நாடுகள் இவை.

கையெழுத்து போட மறுக்கும் நாடுகள் பட்டியல்: அமெரிக்கா, சீனா, ரஷ்யா, கியூபா, இஸ்ரேல், ஐக்கிய அரபு நாடு, பாகிஸ்தான், இந்தியா! இன்னும் கண்ணிவெடிகள் தயாரித்து விற்கும் மிகச்சில நாடுகளில் ஒன்று இந்தியா!

இடிந்த அங்கோர் வாட் கோவில்களை திரும்பக் கட்டிவிடமுடியும். ஆனால் சிதைந்த வாழ்க்கைகளை கம்போடியரானாலும், வியட்நாமியரானாலும் ஒருபோதும் நம்மால் திருப்பிக்கட்டவே முடியாது.






"குழி பறிப்பவர்களை
கூட வைத்திருக்கிறீர்!
தவறான வழி நடப்போரை
உறவென பிடித்திருக்கிறீர்!"

பலரும் சொன்னார்கள் – நாக்கு
உலரும்வரை சொன்னார்கள்!
மன்னன் தன் எண்ணத்தில்
கொண்டானில்லை!
அரச சபையில் ஒரு
அபலை தோன்றினாள்!

"குறை என்ன கூறு!" என்றான்
கோவிந்தன் களனியின்
களையெடுப்பது உம் தொழில்!

"கடமை மறந்துவிட்டீர்
கயவர்கள் நிறைந்துவிட்டார்!"
அவள் குமுறினாள்.

"சுற்றி வளைக்காதே சோதரி!"
குற்றம் விளக்கு மன்னன்
பணித்தான். நங்கையர் வீதியில்
நடமாட முடியவில்லை.
அவள் சொன்னதும்
மன்னன் சிவந்தான்
காரணம் யார் கூறு சோதரி
அவர்களை தோரணமாய்
தொங்கவிடுகிறேன்!"

அவள் நெருப்பைக் கொட்டினாள்
குற்றம் புரிந்தவர்கள்
தங்கள் சுற்றத்தில்
இருக்கிறார்கள்!"

சபையில் மயான
அமைதி! யார் என்று
பார் சோதரி, அடையாளம் காட்டு
உடைவாளால் சீவுகிறேன்!"

அவள் சுட்டுவிரல் சுள்ளென்று
நீண்டது! அதோ! அவன்தான்
நங்கையர் வாழ்வை
பங்கம் செய்யும் பாவி.

மன்னனின் உற்ற நண்பன்மீது
பெண்ணிவள் குற்றம் சாட்டி
விட்டாள் இவள் கதி என்னாகும்?

சபையோர் கலங்கினர்
மன்னன் புன்னகை மாறாது
நண்பனை நோக்கினான்!

உன் பதில் என்ன?
உடன் கூறு என்றான்.
நண்பன் எழுந்தான்
யாவும் பொய்
இவள் பேய் என்பதே மெய்
என்று சீறினான்.

பேய் என்றாய் பெண்ணை
உன் தாயும் பெண்!
பெண்ணால் முடியாதது
எதுமில்லை மூட்டி மோதி
புயலாக்காதீர்!"
கூறிய மன்னன் ஓங்கி
உரைக்கான் நண்பனேயாயினும்
தண்டனை உண்டு!

பண்டிதர்கள் பல நூல்
பயின்றவர்கள்
ஆனால்
பண்பாளர்களல்ல
பழக உகந்தவர்களுமல்ல
அப்படித்தானே? என்று
கேட்டான் மன்னன்!"

ஆம் மன்னா நச்சுப்
பாம்புகள்!
என்றான் ஒற்றர் தலைவன்
மறுநொடியே உயர்ந்தது
மன்னன் குரல் அவர்கள்
இருவரையும் இழுத்து
சிறையில் இடுங்கள்!"

நண்பர்களுக்கே
தண்டனை
கொடுத்த மன்னன் மனது
என்ன பாடுபடும்
சபையோர் சோகித்தனர்.

தீயோரின் நட்பு தீதல்ல!
தீக்கவையே! மன்னன்
விளக்கம்
சபைக்கு புரியவில்லை
பட்டும் கூட பாடக்
கற்கவில்லையோ?
என்று நினைக்கனர்.

மன்னன் விளக்கினான்
தீயோர் நண்பரானால்
அவர்களை இழக்கையில்
துயரம் நேராது
இன்பம்தான் நேரும்.

நல்லோர் நண்பரானால்
இழக்கும் நிலை வந்தால்
இதயமே வெடித்துவிடும்!

அதனால் தான் சொன்னேன்!
தீயோர் நட்பு இன்பம்
"அவர்களை பெற்றால்
என்ன தொலைத்தால்
என்ன?"

"உறின் நட்டு அறின் ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்" அதிகாரம் :82 - குறள் :812




**புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலைக்கு காரணமானவர்களுக்கு தூக்குத் தண்டனைதான் கொடுக்க வேண்டுமல்லவா சிந்தியா?**

அ.யானு, யாழ்ப்பாணம்.

நீங்கள் அப்படிச் சொல்கின்றீர்கள். சிலர் தலையை வெட்டும் ஐ.எஸ். தீவிரவாதிகளைப் போல் இவர்களுக்கு கொடூரமான தண்டனை கொடுக்க வேண்டும் என்கின்றார்கள். சிலர் குற்றவாளிகளை பொலிஸார் சினிமாக்களில் செய்வதைப்போல் என்கௌண்டர் அதாவது சுட்டுக்கொல்ல வேண்டும் என்கின்றார்கள். சிலரோ அவர்களின் ஆண் உறுப்புக்களை அரபு நாடுகளில் செய்வதைப்போல் பொதுமக்கள் முன்னிலையில் வைத்து வெட்டிவிட வேண்டும் என்கின்றார்கள்.

சிலரோ புலிகள் இயக்கம் இருந்து இருந்தால் இவர்களுக்கு மின்கம்பத்தில் கட்டி மரண தண்டனை கொடுத்திருப்பார்கள் என்கின்றார்கள். எல்லோரும் கூறுவது மரண தண்டனையைத்தான் என்று புரிகின்றது. என்னிடம் ஒரு சிறிய கேள்வி மட்டுமே உள்ளது. அதாவது இனிமேல் இப்படி ஒரு சம்பவம் நடக்காது, நடக்க விடமாட்டோம், என்ற உத்தரவாதத்தையும், சத்தியத்தையும் யாரால் தரமுடியும். அப்படித் தரமுடியும் என்று ஒருவராவது கூறினால் அவரிடம் இவர்களுக்கான தண்டனையைப் பற்றி கேட்டு அதை நிறைவேற்ற வேண்டும். அவர் என்ன விதமான தண்டனையை. பரிந்துரைப்பார்?,

தமிழ் மக்கள் மறக்கவே கூடாத பல சம்பவங்களை மறந்துவிட்டார்கள். அதேபோல் இதையும் விரைவில் மறந்துவிடுவார்கள். நாளை இன்னொரு சம்பவம் நம்மை வெட்கித் தலைகுனிய வைக்கும். இவற்றை தடுக்க நாம் அனைவரினதும் கூட்டு தீர்மானம் ஒன்று தேவை. அதைச் செய்ய அந்தப் பூனைக்கு மணியை யார்? கட்டுவது. வழமைபோல் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று நாம் தொடர்ந்தும் பார்வையாளர்கள்தானா?

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.?**

ப.மகிழவன், முல்லைத்தீவு.

அஞ்சலி செலுத்துவது நல்ல விடயம் தான். ஆனால் அகால மரணமான நம் உறவுகளின் ஆத்மசாந்திக்காக மகா யாகம் ஒன்றை அங்கே நடத்த வேண்டும். உறவுகள் உரிய கிரியைகளை செய்யவேண்டும். அதற்கு ஒரு ஏற்பாட்டை செய்யவேண்டும். அஞ்சலி நிகழ்வை அனைத்து தமிழ் மக்களும் பொதுவான ஒரு தினத்தில் அனைத்து இடங்களிலும் செய்யவேண்டும். அதை விடுத்து அரசியல் கூட்டங்களைப்போல் அஞ்சலி செலுத்துவது ஒப்புக்குச் சப்பாகவே இருந்தது.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**நாடாளுமன்றம் எப்போது கலைக்கப்படும்?**

எம்.தாஹிர், வாகரை.

ஒரு காலத்தில் அரசியலில் ஆருடம் கூறிய ஜாம்பவான்களே! இந்தக் கேள்விக்கு இந்தத் திகதியில்தான் நாடாளுமன்றத்தைக் கலைப்பார்கள் என்று சொல்ல முடியாமல் திணறுகின்றனர். ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும்கூட நாடாளுமன்றத்தை கலைத்துவிடவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுவிட்டதாகவே தெரிகின்றது.

ஆனால், அதை எப்போது செய்வது என்பதை அவர்களால் முடிவு செய்ய முடியவில்லை. அனேகமாக இன்னும் நாற்பத்தி ஐந்து நாட்களுக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும் என்று வாஸ்து சாத்திரம் கூறுகின்றது.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**தோட்டப் பெண்கள் தோட்டத் துரையின் அனுமதியின்றி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்களாக செல்ல முடியாதாமே. அது சரிதானா?**

த.சௌமியா, ஹட்டன்.

பொதுவாகவே பணிப்பெண்களாக நமது பெண்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அனுபவக்கும் துன்பங்கள், கொடுமைகள் சொல்லில் அடங்காது. இவற்றைப் பாரக்கும்போது பெண்கள் அப்படி வேலைகளுக்காக போகாமல் இருப்பதே நல்லது. ஆனால் இவர்களின் வாழ்வியலில் சரியான மாற்றத்தையும், பொருளாதார உயர்வையும் செய்யாமல் அடிமைகள்போல் இருக்கப் பணிப்பதும், அவர்கள் மரணம்வரை தேயிலைச் செடிகளுக்குள்ளேயே வாழ்க்கையை தொலைக்கவேண்டும் என்றும் நினைப்பது கண்டிக்கப்பட வேண்டியது. இதையெல்லாம் அங்குள்ள அரசியல் தலைமைகள் கண்டு கொள்வதில்லையே. ஒருவேளை அவர்கள் இங்கேயே தேயிலைச் செடிகளுக்குள் வேலை செய்தால் இன்னும் அதிகமாக சந்தாப் பணம் கிடைக்கும் என்பதற்காக அடக்கி வாசிக்கின்றார்களோ தெரியவில்லையே.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 2 ஆம் உலகப் போர்...

உக்ரேன் கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யா ஆயுத உதவிகளை செய்து வருவதாலே இந்த புறக்கணிப்பு இருந்ததாக கூறப்படுகிறது. அணிவகுப்பை தொடர்ந்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் தலைமையில் பொதுமக்கள் கலந்துகொண்ட பிரமாண்ட பேரணி நடைபெற்றது. நாட்டுப்பற்றை போற்றும்விதமாக நடத்தப்பட்ட இந்த பேரணியில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். அவர்கள் இரண்டாம் உலகப்போரில் உயிரிழந்த வீரர்களின் படங்களை ஏந்தியபடி பேரணியில் சென்றனர்.

இந்த நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்த வீரர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்த 70ஆவது ஆண்டு. 2015 மே 9ஆம் திகதி, இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்த 70ஆவது ஆண்டு. 1945ஆம் ஆண்டு மே 8ஆம் திகதிதான் ஜெர்மன் தலைநகர் பெர்லினில் உள்ள ஜெர்மன் நாடாளுமன்றத்தில் சோவியத் செங்கொடி ஏற்றப்பட்டது. நாஜிக்களின் பாசிச படைகள் இறுதித்தோல்வியை தழுவின.

கொடூரமான நாஜி-பாசிச சக்திகளின் பிரதிநிதியாக இருந்த ஹிட்லர் 1945 ஏப்ரல் 30ஆம் திகதி தனது பதுங்கு குழியில் தற்கொலை செய்துகொண்டான். தனது கனவுகள் சிதைந்துபோனதையும், குறிக்கோள்கள் தன் கண்ணெதிரே தோற்றுப்போனதையும் தாங்கிக் கொள்ளமுடியாமல் தனது உயிரை மாய்த்துக்கொண்டான், ஹிட்லர்.

1939ஆம் ஆண்டு செப்டம்பர் 1 அன்று தொடங்கிய இரண்டாம் உலகப் போர் 6 ஆண்டுகள் நீடித்தது. அதில் 61 நாடுகளின் 170 கோடி மக்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இது அன்றைய உலக மக்கள் தொகையில் 80வீதம் ஆகும். இந்தப் போரில் 7 கோடி மக்கள் கொல்லப்பட்டனர், அவர்களில் 40 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் சோவியத் குடிமக்கள். சோவியத் யூனியனின் 1,710 நகரங்கள், 70,000-க்கும் மேற்பட்ட கிராமங்கள், 32,000-த்துக்கும் அதிகமான தொழிற்சாலைகள், 65,000 கிலோமீற்றர் நீளமான ரயில்வே பாதை ஜெர்மன் படைகளால் அழிக்கப்பட்டன. மனித வரலாற்றிலேயே எந்த ஒரு நாடும் எந்தவொரு போரிலும் சந்தித்திராத இந்த பேரிழப்பின் பொருளாதார மதிப்பு 2,600 பில்லியன் ரூபிள்.

*உலகெங்கிலும் உள்ள மக்கள், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் மக்கள் பாசிசத்தை தோற்கடிப்பதில் சோவியத் இராணுவம் ஆற்றிய தீர்மானகரமான பங்களிப்பை நினைவு கூர்கின்றனர். சோவியத் இராணுவம் 11.3 கோடி மக்கள் தொகை கொண்ட 11 நாடுகளை நாஜிகளின் பிடியில் இருந்து விடுவித்தது. மேலும், பாசிசத்துக்கு எதிராக சோவியத் யூனியன் ஈட்டிய வெற்றி, உலகெங்கிலும் காலனிய ஆட்சியில் அடிமைப்படுத்தப்பட்டிருந்த மூன்றாம் உலக நாடுகளில், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை வீரியமடையச் செய்தது.

இன்றும் உலகெங்கிலும் பாசிச சக்திகளுக்கு எதிரான உழைக்கும் மக்களின் போராட்டத்துக்கு நாஜிகளை முறியடித்த சோவியத் மக்களின் போராட்டம் முன்னுதாரணமாகவும், வழிகாட்டுவதாகவும் உள்ளது.

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் ஹிரோஷிமா நகர்மீது அமெரிக்கா நடத்திய அணுகுண்டு தாக்குதலில் ஒன்றரை இலட்சம் பேர் பலியாயினர். இரண்டாம் உலக போரின் போது, ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி அமெரிக்க விமானத்திலிருந்து அணுகுண்டு வீசப்பட்டது. இதில் அந்த நகரம் முற்றிலுமாக அழிந்தது. மூன்று நாட்களுக்கு பிறகு நாகசாகி நகரத்தின் மீது மீண்டும் ஒரு அணுகுண்டு வீசப்பட்டது. இந்த தாக்குதல்களில் 3 இலட்சத்து 70 ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தால் ஜப்பான் நிலைகுலைந்தது. அதன்பின் அமெரிக்காவிடம் சரண் அடைந்தது. இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

எனினும் அணுகுண்டு தாக்குதலுக்கு பிறகு கதிர்வீச்சில் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் இறந்தனர். பலர் ஊனமடைந்தனர். அந்த பாதிப்பு இன்னும் தொடர்கிறது.

# காதிலை பூதந்தசாமி

வணக்கமுங்கோ! கொழும்பில கொஞ்சக்காலமாக வீழ்ச்சி கண்டிருந்த தொடர்மாடிக் குடியிருப்பு வியாபாரம் திரும்பவும் ஜோராக நடக்குதுங்கோ. இரண்டு அறைவீடுகளே இப்போது கோடியைத் தாண்டிப் போகுதுங்கோ.

அப்பார்ட்மெண்ட் கட்டிவிக்கிறவையும் வெள்ளவத்தைக்குள்ள காணி தேடிக் கொண்டு திரியினமுங்கோ. யுத்தம் முடிந்து கொழும்பில இருந்த சனம் வெளிக்கிட்டு போய் வளவுகளையும், வீடுகளையும் பார்த்து திருத்தத் தொடங்கிச்சினமுங்கோ.

யாழ்ப்பாணத்தில சனம் மண் பற்று கொஞ்சம் அதிகம்தானுங்கோ. எப்புடி எண்டு தெரியுமோ, பின் வளவுக்கு பாதைவிடுவதற்காக ஒரு அடி நிலத்தை விட்டுக் கொடுக்கமாட்டினம். பின் வீதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஒரு போஸ்ட்டை நடுவதற்கு தன்னுடைய வேலிக்குள்ள அரை அடி இடம் கொடுக்கமாட்டினம். அவ்வளவு மண் பற்றுங்கோ.

அப்புடியானவை மீண்டும் ஊருக்குத் திரும்பி, வீடு கட்டிச்சினமோ இல்லையோ தெரியாதுங்கோ. ஆனால் வேலிகளை மட்டும் நூல் பிடிச்சு அடைச்சுக் கொண்டிச்சினமுங்கோ.

அதுமட்டுமில்லையுங்கோ, யுத்த நேரத்தில நாங்கள் வீட்டைவிட்டு ஓடினாப்பிறகு யார் வந்து மாங்காய் பொறுக்கினது, யார் வந்து தேங்காய் பிடுங்கினது, கிணற்றில கப்பியில ஒரு காது அருந்த வாளி இருந்தது அதையும் காணயில்லை. எண்டு அக்கம் பக்கத்தில குடியிருக்கிறவையிட்ட கேட்டுத் தொல்லை கொடுப்பினமுங்கோ.

அது மட்டுமில்லையுங்கோ தோட்டத்தில முன்னம் பச்சமிளகாய் நல்லா வந்தது. இப்போது அவ்வளவாக காய் வருகுதில்லை, வேலியில சுத்திவர முள்ளு முறுக்கை நட்டனாங்கள். யாரோ தொலைவார் வெட்டிக்கொண்டு போயிருக்கினம். எண்ட வெறுப்பை ஏத்துவினமுங்கோ.

சனம் யாழ்ப்பாணத்துக்கு திரும்பிப் போக ஆரம்பித்தபோது கொழும்பில வீடுகளின் விலைகள் வீழ்ச்சிகண்டிருந்தது. வாடகை வீடுகளுக்கான தொகை நல்லாக் குறைஞ்சு போயிருந்ததுங்கோ.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில இருந்து மறுபடியும் என்ன நடந்ததோ தெரியல்லையுங்கோ, சனம் மறுபடியும் கொழும்பில வீடு வாங்கிறதில ஆர்வம் காட்டினமுங்கோ.

தலைநாரில தளபாடங்களோடை வாடகைக்கு வீடு எடுக்கிறதே கஸ்ட முங்கோ, அப்புடி இருந்தாலும் ஐம்பது அறுபதில தொடங்கி, ஒரு இலட்சம் ஒண்டரை எண்டு போகுதுங்கோ.

தளபாடம் இல்லாமல் வீடெண்டா லுங்கோ, முப்பது, முப்பத்தஞ்சு எண்டு போகுதுங்கோ. அதுவும் சரியான தட்டுப்பாடுங்கோ. அதுமட்டுமில்லை யுங்கோ, சனம் மூண்டு வேளைச் சாப்பாட்டில, ஒரு வேளையாவது கடையில தானுங்கோ சாப்பிடினமுங்கோ.

உங்களுக்குத் தெரியும்தானே, வெள்ளவத்தையில காலி வீதியில ஒரு விலை, ஒழுங்கைகளில ஒரு விலை, கொஞ்சம் தொலைவில எண்டால் ஒரு விலை எண்டு பொருட்களின்ர விலை தூக்கலாகத்தானுங்கோ இருக்கும். ஆனாலும் டொலர்களிலையும், பவுன்ஸ் களிலையும், யூரோக்களிலையும் மாற்றிச் செலவு செய்யிற எங்கட சனத்துக்கு அதுவும் பிரச்சனை இல்லையுங்கோ.

எனக்கு என்ன சந்தேகமெண்டாலுங்கோ, யாழ்ப்பாணத்திலை வீடு இருந்தாலும் கொழும்பிலையும் ஒரு வீடு இருக்கட்டும் என்று வெளிநாடுகளில இருக்கிற பிள்ளைகள் தாய், தக்பபனை பயம் காட்டினமோ. ஒருவேளை தலைவர் உயிரோடுதான் இருக்கிறார். அவர் விரைவில போராட்டத்தை ஆரம்பிப்பார் என்று புலம்பெயர் அமைப்புக்கள் சொல்லிறதைக் கேட்டு எங்கட சனம் ரொம்பவும் பயந்துபோய் இருக்கினமோ எண்டுதான் எனக்கு சந்தேகமாய் இருக்குதுங்கோ.

யாழ்ப்பாணத்தில சும்மா ஊருக்குள்ள இருந்த சுண்ணாம்புகளையெல்லாம் வாக்குப் போட்டு அரசியல்வாதிகளாக்கி விட்ட சனத்திட்ட அந்த ரெண்டெழுத்து கிரகங்கள் தேசியம் இருக்குதோ? தன்மானம் இருக்குதோ எண்டு கேள்வி கேட்டுக் கொண்டு ஊருக்குள்ள திரியுது களே. அதுகள் ஒருநாள் இல்லாட்டிலும் ஒரு நாள் யாழ்ப்பாணத்தை குழப்பி குடி எழுப்பிப் போடுவாங்கள் எண்டு சனம் முன்யோசனையாக திங் பண்ணுதுளோ தெரியல்லையுங்கோ.

என்னவாக இருக்குமெண்டு உங் களுக்கு ஏதாச்சும் புரியுதோ? சனம் இனிமேல் எதையும் நம்புற நிலைமையில இல்லையுங்கோ. இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன? எண்ட முடிவிலதானுங்கோ இருக்கினம்போலை தெரியுதுங்கோ.


வெள்ளிக்கிழமையில மட்டும் புகை யிரதமும், பஸ்வண்டிகளும் யாழ்ப் பாணத்துக்கு சீட் முன்பதிவு செய்ய முடிவதில்லையுங்கோ. அதிலையும் அரசியல்வாதிகள் தங்களுடைய அல்லைக்கை, நொல்லைக் கைகளோடை புகையிரதத்தில இருக்கை முன்பதிவு செய்து போகிறதை பார்க்கேக்க எனக்கு அவையே முன்னம் சொன்ன கதைகள் ஞாபகத்துக்கு வருகுதுங்கோ.

என்ன கதை எண்டுதானே யோசிக் கிறீங்கள்? புகையிரதம் ஓடுறதே யாழ்ப் பாணத்தில இருக்கிற ஆமிக்காரர் பயணம் செய்யத்தான் எண்டு சொல்லிச்சினமுங்கோ.

இப்ப ஊருக்குள்ள இருக்கிற பெடியள், பெட்டையளை கொழும்புக்கு அமைச்சரைப் பார்க்கவேணும், அங்க போகவேணும் எண்டு தனிப்பெட்டி முன்பதிவு செய்து பயணம் செய்யிறது ஆமிக்காரர் இல்லை யுங்கோ. அப்படிச் சொன்ன உந்த ரெண்டெழுத்து கிரக அரசியல்வாதிகள் தானுங்கோ.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

## வரலாறு படைத்த வல்லுநர்கள் — மரண பயத்தை ஒழித்த மருத்துவர்



அவருடைய ஆராய்ச்சிக் குறிப்புக்களையெல்லாம் சேகரித்து வைத்தாள். பல வருடங்களாகத் தீர்க்கப்படாமல் ஒரு பிரச்சினை எப்படி அவரை வாட்டி வதைக்கிறது என்பதை அவள் அறிவாள். அப்படி என்ன பிரச்சினை? அவரது வாழ்க்கைப் பிரச்சினையா, பொருளாதாரக் கவலையா?, பதவி உயர்வா? இல்லவே இல்லை. என்னைப் பற்றிய கவலை அல்ல அவருக்கு. மனித சமுதாயத்தின் நல்வாழ்வு பற்றிய கவலைதான். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, பத்தில் எட்டுப் பேர் உயிரிழந்து வந்தனர். இது ஏன், ஏன் என்று கேட்டுக் கவலையடைந்தார். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அவர்களை விஷக்காய்ச்சலும் வேறு பலவும் தாக்கி இறக்கிறார்கள். இதைத் தடுக்கமுடியாதா? எதில், எங்கே? கோளாறு எப்படி இவர்கள் மரணத்தின் பிடியில் சிக்குகிறார்கள்? இதே கவலைதான். விடுவிக்கமுடியாத இந்தப் புதிரைப் பற்றியே சதா அவர்து சிந்தனை.

எஸக்ஸ் மாகாணத்தில் பழைமையான க்வாக்கர் குடும்பத்தில், ஒரு மது வியாபாரியின் மகனாகப் பிறந்தவர் லிஸ்டர். சிறுவயதிலேயே சேர்ஜனாக வேண்டும் என்ற ஆசையை வளர்த்துக்கொண்டார். நோயினால் அவதியுறுவோரின் வேதனைக் கதைகளும் அனுபவங்களுமே அவரது இந்த ஆசைக்குக் காரணம். நோயாளிகளின் துன்பம் போக்கும் மருத்துவனாக வேண்டுமென்று உறுதியோடு படித்தார். புகழ்பெற்ற சேர்ஜனான ஜேம்ஸ் சிமி என்பவரின் உதவியாளாகச் சேர்ந்தார்.

(முற்றும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(21.05.2015 தொடக்கம் 27.05.2015 வரை)

### மேடம்

முன்கோபத்தை தவிர்ப்பது நல்லதாகும். தந்தை – மகன் உறவில் சிற்சில பிரச்சினைகள் வரலாம். மனைவிழிச் சொந்த பந்தங்களால் பொருட்செலவு ஏற்படும். கைவிட்டுப்போன பொருட்கள் திரும்பக் கிடைக்கும். உற்றார், உறவினர்களால் ஆதாயம் இல்லை. தந்தையால் பொருள்வரவு உண்டு. குலதெய்வ வழிபாட்டிற்காக வெளியூர் செல்லுவீர்கள். புதிய வீடு, நிலம் வாங்குவது சம்பந்தமான முயற்சிகளைச் சற்று காலதாமதமாகச் செய்வது நல்லது. சூதாட்ட சம்பந்தமான ரேஸ், லோட்டரி போன்ற விசயங்களில் பணம் மற்றும் பொருட்களை ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### இடபம்

கண்களில் கவனம் தேவை. செய் தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். தந்தையின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். நண்பர்களால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகும். மாமன்வழியின்மூலம் சில நன்மைகளை அடைவார்கள். குலதெய்வ வழிபாடு செய்துவருவது நல்லது. பொதுநலத் தொண்டுகளில் பிரியமுடன் ஈடுபடுவீர்கள். பிறருக்காக உழைப்பதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். தென்திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும்.

### மிதுனம்

புதிய நண்பர்கள் சேர்க்கையால் மனநிம்மதி அடைவீர்கள். புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதில் காலதாமதம் ஏற்படலாம். பிறரிடம் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட சுபகாரியங்கள் நடை பெறும். விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சி உண்டாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லதாகும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். பெண்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். உடம்பில் நரம்பு, எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும்.

### கடகம்

பெண்களால் வடதிசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். ஒரு சிலர் இருப்பிடம் விட்டு வெளியூர் செல்ல வாய்ப்பு உள்ளது. திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ், லோட்டரி போன்றவற்றால் தனவரவுகள் உண்டு. மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்காக வெகு முயற்சிகளை செய்து கடனை அடைப்பீர்கள். சூதாட்டத்தால் வீண் பொருள்விரயம் ஏற்படக்கூடும். காதல் விசயங்களில் வெற்றி கிடைக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். பெரியவர்களின் நல்லாசிகள் கிடைக்கும்.

### சிங்கம்

வெளிநாட்டில் வசிப்பவர்கள் தனது தாய்நாட்டிற்குச் சென்றுவர வாய்ப்புகள் உள்ளன. மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் சற்று குறையும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். சேர் மார்க்கெட் தொழில் செய்வோர்கள் இலாபம் அடைவார்கள். நீண்டகாலமாகப் பிரச்சினைகளில் இருந்துவந்த குடும்பச் சொத்துக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் பணவரவு உண்டு. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### கன்னி

உறவினர்கள் மற்றும் நண்பர்களால் எதிர்பாராத ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் உண்டாகும். உணவு பொருட்களின் வியா– பாரிகள் ஆகியோர்களுக்கு நல்ல இலாபம் அடைவார்கள். தொலைதூரப் பயணங்கள்மூலம் எதிர்பார்த்த காரியங்கள் கைகூடும். தெய்வத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்வீர்கள். அரசு சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகள் கிடைக்கச் சற்று காலதா– மதம் ஆகலாம். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங்களை வாங்குவீர்கள். தாய்க்கு இருந்துவந்த நோய்கள் குறைந்து காணப்படும். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் குறையும்.

### துலாம்

கண்களில் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விவசாயம் செய்வோர்கள் மிகுந்த கவனமுடன் இருக்கவும். தொலைதூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லதாகும். கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் நீங்கி உறவுகள் பலப்படும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் விபரீதங்களைச் சந்திக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவும். உடம்பில் வாதம் வாயு மற்றும் எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். சொத்துக்கள் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்த நல்ல முடிவுகள் கிடைக்கச் இன்னும் சற்று காலதா– மதம் ஆகலாம். சகோதர சகோதரிகளுடன் காரணமில்லாத சச்சரவுகள் வந்துபோகும்.

### விருச்சிகம்

நாட்பட்ட விசா சம்பந்தமான பிரச்சினைகள் தீருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உறவினர்களிடம் இருந்து தூரத்து நற்செய்திகளை கேட்பீர்கள். திடீர் அதிர்ஷ்டம் ஆகிய ரேஸ் லோட்டரி வழியாகத் தனவரவு உண்டாகும். தீராத நாட்பட்ட வழக்குகள் தீர நல்ல முடிவுகள் கிடைக்கும். தொலைதூரப் பயணங்களில் எதிர்பார்த்த வெற்றிகள் கிடைக்கும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். வங்கிகளில் இருந்து வரவேண்டிய பணம் மற்றும் வங்கி கடன் உதவிகள் கிடைக்கும். பழைய கடன்கள் அடைபடும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பல்ன் தரும் வாரமாகும்.

### தனுசு

அடுத்தவர் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். வீடுகளில் பணம் பொருட்கள் திருட்டுப்போக இருப்பதால் எச்சரிக்கை தேவை. வடதிசையில் இருந்து எதிர்பாராத தனவரத்துகள் உண்டு. மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச்செலவுகள் வந்து சேரும். பூ பழம் நறுமணப் பொருட்களின் வியா– பாரிகள், ஆலயப் பணிகளைச் செய்பவர்கள், கம்யூட்டர் துறையைச் சார்ந்தவர்கள், உடல் ஊனமுற்றோருக்கான கல்விச்சாலைகளை நடத்துபவர்கள், இன்சினியரிங் மற்றும் கம்பியூட்டர் துறை சார்ந்தவர்கள் நல்ல இலாபம் பெறுவார்கள்.

### மகரம்

வேண்டாத மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு பிரச்சினைகளை விலைக்கு வாங்கி மனநிம்மதியை இழக்க வேண்டாம். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். அடுத்தவர்களின் விசயத்தில் தலையிட்டு மனநிம்மதியை இழக்கவேண்டாம். காதல் விசயங்களில் எதிர்பார்த்திருந்த நல்ல செய்திகள் கிடைக்கக்கூடிய காலமாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் எச்சரிக்கை தேவை. காணாமற்போன பொருட்கள் காவல் துறையினர்களின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடைவர்.

### கும்பம்

புதிய வீடு மற்றும் நிலங்கள் வாங்குவீர்கள். அரசியல்வாதிகளால் ஆதாயம் உண்டு. தேவையற்ற மனச்சஞ்சலமும் குழப்பங்களும் குடும்பத்தில் வரக்கூடும். விருந்தினர்களின் எதிர்பாராத வரவால் பொருள்விரயமாகும். நீண்டதூரப் பயணங்களால் மனநிம்மதி ஏற்படாது. ரேஸ், லோட்டரி போன்றவற்றின்மூலம் எதிர்பாராத தனவரவு உண்டாகும். மூத்த சகோதரரால் பொருட்செலவுகள் ஏற்படும். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். புதிய நண்பர்களைச் சேர்ப்பதைத் தவிர்க்கவும். வேற்று மதத்தவர்களால் எதிர்பாராத ஆதாயங்கள் கிடைக்கும்.

### மீனம்

பொருளாதாரம் நெருக்கடி ஏற்படுத்தினாலும் சமாளித்து கொள்வீர்கள். சகோதர சகோதரிகளின் திருமணம்போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளில் இருந்துவந்த தடைகள் நீங்கித் திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த கடன் உதவிகளில் கிடைக்க வாய்ப்புகள் உள்ள காலமாகும். விபரீதமான எண்ணங்களை விட்டுக் காரியத்தில் கவனமாய் இருங்கள். சுயதொழில் செய்வதற்கான முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படலாம். சகோதரர்களால் பொருள்வரவு உண்டாகும். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)




## ஒரு நூற்றாண்டையும் தாண்டியவர்

உலகில் அதிக காலம் வாழ்ந்த பெண்ணாக டுட்டி யுசுபோவா விளங்குகிறார். உஸ்பெகிஸ்தானியைச் சேர்ந்த இவர் சில தினங்களுக்கு முன்னே இறைபதம் அடைந்தார். இறக்கும்போது இவருக்கு வயது 135. இவர், 1880 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1 ஆம் திகதி பிறந்ததாக இவரது பிறப்பட்சாத்தி பத்திரம், கடவுச்சீட்டு என்பன உறுதிப்படுத்தியுள்ளன. இதனை அந்நாட்டு அரசாங்கமும் ஏற்றுகொண்டுள்ளது.

உலகில் இதுவரை மிக வயதான பெண்ணாக கின்னஸ் சாதனை நூல் வெளியீட்டாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஜப்பானைச் சேர்ந்த மிசாவோ ஒக்காவா கடந்த புதன்கிழமை(13) தனது 117 ஆவது வயதில் காலமானார். ஆனால், மிசாவோ ஒக்காவாவைவிட 17 வருடங்கள் மூத்தவராக டுட்டி யுசுபோவா கருதப்படுகிறார். இதன்படி, பிரான்ஸின் ஈபிள் கோபுரத்தைவிட 8 வருடங்கள் மூத்தவராக யுசுபோவா வாழ்ந்துள்ளார். உலகில் மிக நீண்டகாலம் உயிர்வாழக்கூடிய மக்கள் தொகையை கொண்ட நாடாக உஸ்பெகிஸ்தானி விளங்குவதாக அந்நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர். இங்கு வாழும் 30 மில்லியன் மக்கள் தொகையில் 8,700 பேர் நூறு வயதை தாண்டியவர்கள் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

## சாரதி இல்லா வாகனம்





டிரைவர் இல்லாமல் ஓடும் டிரக் வண்டி அமெரிக்க வீதிகளில் ஓடத் தொடங்கியுள்ளது. இத்தானியங்கி வர்த்தக வண்டி அனுமதிப்பத்திரத்துடன் அமெரிக்காவின் பொது நெடுஞ்சாலையில் பயணிக்கின்றது. வாகன சாரதி வண்டியில் இருப்பார். தேவை ஏற்படும்போது நிலைமையை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவார். கூகுளின் தானியங்கி கார் போன்று டிரக்கும் வீதியில் செல்லும் எனக்கூறப்படுகின்றது. மனித சாரதிகளைவிட கணினி சாரதிகள் பாதுகாப்பானவையாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை களைப்படையாது உணர்ச்சிவசப்படவோ அல்லது ஆக்ரோசமடையவோ மன உளைச்சலுக்கு ஆளாகவோமாட்டாதென கனேடிய தானியக்க வாகனங்கள் சிறப்பு மைய நிர்வாக இயக்குநர் பார்ரி கேர்க் கூறியுள்ளார். வணிக நோக்கத்தின் அடிப்படையில் இவை அர்த்தமுள்ளவை எனவும் அவர் தெரிவித்தார். ஒரு ஐந்து வருட தானியங்கி வாகன பரீட்சார்த்த வெள்ளோட்ட சோதனைக்கு ஒன்றறியோ ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இது ஒரு மைல்கல் சாதனை

கனடா-ரொறொன்ரோவை சேர்ந்த 34 வயது நற்ராசா ரஜனி என்ற பெண் தனது முட்டைகளை மறுநிரப்பல் செய்து அதன் மூலம் குழந்தை ஒன்றை பெற்று உலகிலேயே முதலாவது பெண் என்ற பெருமை பெற்றுள்ளார்.

ஏப்ரல் 13ஆம் திகதி பிறந்த ஷாயின் எனப் பெயரிடப்பட்ட இந்த குழந்தை மருத்துவ நிபுணர்களை கலவரத்திற்குள்ளாக்கியுள்ளான் என பேசப்படுகின்றது. இது ஒரு மைல்கல் சாதனை எனவும் விபரிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு பரீட்சார்த்த கருவுறுதல் சிகிச்சையாகும். குறைபாடான முட்டைகளை, பெண்ணின் சொந்த கருப்பையில் இருந்து எடுக்கும் இளைய சக்தி - உற்பத்தி செய்யும் உயிரணுக்களை பாவித்து மீளநிரப்பல் செய்யும் முறையாகும். உலகில் இந்த பரீட்சார்த்த கருவுறுதல் சிகிச்சைமூலம் குழந்தை ஒன்றை பிரசவித்த முதல் பெண் இவராவார்.



## குப்பைக் கிடங்கின் குழந்தைகள்



குழந்தை

ஆ



# குப்பைக் கிடங்கின் குழந்தைகள்



குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் குப்பை கிடங்கில் குடும்பம் நடத்திய தம்பதியை பொலிசார் கைதுசெய்தனர். அமெரிக்காவின் பெரெக்கன்ரிட்ஜ் (Bre ckenridge) நாட்டில் ஜோ நக்லெர் (Jonaugler) மற்றும் நிக்கோலி (Nicole) தம்பதி தங்களின் பக்கத்து வீட்டுக்காரரை துப்பாக்கி கொண்டு மிரட்டியதாக பொலிசில் புகார் அளிக்கப்பட்டது. இதுதொடர்பாக அவர்களை விசாரணை நடத்தவந்த பொலிசார் அதிர்ச்சி அடைந்தனர்.



அவர்கள் தங்களில் 10 குழந்தைகளுடன் அருகிலுள்ள குப்பை கிடங்கில் தற்காலிக குடிசை போட்டு வசித்துவருகின்றனர். மேலும் அவர்கள் தங்கள் குழந்தைகளை சிறு வயது முதல் பள்ளிக்கு அனுப்பாமல் தாங்களே வீட்டில் கல்வி கற்றுக்கொடுத்தும் அவர்கள் விருப்பம்போல் வாழும்விதமாக நாகரிகமற்ற முறையில் வளர்த்துவந்தனர்.

அவர்களை கைதுசெய்த பொலிசார் சிறையில் அடைத்தனர். குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் பெற்றோர்களே அவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுத்து அவர்களை பிற மனிதர்கள் தொடர்பில்லாமல் வளர்க்கும் பழக்கும் தற்போது அங்கு அதிகரித்துவருவது குறிப்பிடத்தக்கது.

# ஆபத்தான முயற்சி



துபாயில் உள்ள சோபிடெல் ஹோட்டலின் 43ஆவது மாடியிலிருந்து சும்மா கீழே பாத்தாலே உயிர் பயத்தில் முதுகுத்தண்டு சில்லிடும். அந்த 42ஆவது மாடியிலிருந்து ஒவ்வொரு தூணாக தாவித்தாவி போவதென்றால்...

என்ன மனுஷய்யா நீயெல்லாம் என்றுதான் ஓலக்கை பார்க்கும் அனைவரும் அதிர்ந்துபோய் கேட்கின்றனர். ஸ்டண்ட் கலைஞரான ஓலக் எந்தவிதமான பாதுகாப்பு உபகரணங்களுமின்றி இந்த சாகசத்தை செய்கிறார். இது மட்டுமின்றி தன் கையிலிருக்கும் கேமராவைக் கொண்டே இந்த சாகசத்தை வீடியோவாக பதிவு செய்கிறார்.



இப்பத்திரிகை 378, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அர்ஜுனா அச்சகத்தில் டி.டி. எண்டர்பிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் மே 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 07 வியாழக்கிழமை (21.05.2015) பக்கங்கள் IV ஓசை – 233

# வடக்கு ஸ்தம்பிதம்

## ☆ஆர்ப்பாட்டங்கள்
## ☆கண்டனப் பேரணிகள்
## ☆பகிஷ்கரிப்பு





(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவைச் சேர்ந்த உயர்தர மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையிட்டு நேற்று வடமாகாணம் தழுவிய ரீதியில் பெரும் ஆர்ப்பாட்டங்கள், கண்டனப் பேரணிகள், பகிஷ்கரிப்பு இடம்பெற்றன.

(IV) ஆம் பக்கம் பார்க்க

# போர்க்களமானது நீதிமன்ற வளாகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற வளாகத்தைச் சூழ்ந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், நீதிமன்றத்தின் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தியதையடுத்து, பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் அவரகளை கலைத்தனர்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பாக கொழும்பில் கைது செய்யப்பட்ட ஒன்பதாவது சந்தேகநபர் மற்றும் அவரைத் தப்பிச் செல்ல உதவிய சட்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் ஆகியோர், நேற்று மதியம் யாழ். நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர் என்று நேற்று முன்தினம் வட பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுக் காலையில் இருந்தே யாழ். நீதிமன்ற வளாகத்தின் இரு புறத்திலும் கூடிய பொதுமக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினர். ஒரு கட்டத்தில் இந்தப் போராட்டம் வன்முறையாக மாறியது.

பொலிஸாரின் தடுப்புகளை மீறி நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைய முயன்ற ஆர்ப்பாட்டக்

(IV) ஆம் பக்கம் பார்க்க

கல்வீச்சு, கண்ணீர் புகை, தடியடி, துப்பாக்கிச்சூடு
பொலிஸார், படையினர் குவிப்பு



# மாணவி கொலைச் சம்பவத்தை அரசியலாக்கி கேவலப்படுத்தாதீர்!

## பாரபட்சமற்ற விசாரணைக்கு ஒத்துழையுங்கள்
## டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா படுகொலைச் சம்பவத்தை அரசியலாக்கி, அதில் இலாபம் தேடிக் கொள்வதற்கு சில சுயநல அரசியல் சக்திகள் முயற்சிக்கின்றன. இதன் மூலம் அம் மாணவியின் நற்பெயரை கேவலப்படுத்தும் செயற்பாடுகள் தொடரப்படுகின்றன.

இது அம்மாணவியின் குடும்

(IV) ஆம் பக்கம் பார்க்க

# 127 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்ற வளாகத்தில் பதற்றத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக, 127 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


புங்குடுதீவைச் சேர்ந்த மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ். நீதிமன்ற வீதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.


இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய கல்வீச்சுத் தாக்குதலில், நான்கு பொலிஸார் காயமடைந்தனர். இந்நிலையில், நீதிமன்ற வளாகத்தில் பதற்றநிலை

(IV) ஆம் பக்கம் பார்க்க

# யாழில் நேற்று களேபரம்
































# தொடரும் கண்டனப் போராட்டங்கள்...




பொலிகண்டியில்...



ஒட்டுசுட்டானில்...



மாங்குளத்தில்...




முல்லையில்...



மட்டக்களப்பில்...



ஊர்காவற்றுறையில்...



வற்றாப்பளையில்...





யாழில்...



வேலணையில்...



சாவகச்சேரியில்...

18,160,165,11,21,125,90

# மாணவியின் குடும்பம் சார்பாக இன்று நீதிமன்றில் ஆஜராவோம்

## சட்டத்தரணிகள் ஒருமித்துக் குரல்



புங்குடுதீவு மாணவி படு கொலை வழக்கில் மாணவியின் குடும்பத்தினர் சார்பாக நீதிமன் றத்தில் ஆஜராகவுள்ளதாக சட்டத தரணிகள் தெரிவித்தனர்.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே சட்டத்தரணிகள் சார் பாக சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகை யில், புங்குடுதீவு மாணவி படு கொலைச் சம்பவத்துடன் தொடர் புடையவர்கள் என முன்னர் கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்கள் மீதான வழக்கு விசாரணை, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இன்று எடுத்துக்கொள்ளப்பட வுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்தார் நலன்கள் சார்ந்த விடயங்களுக்காக நான் உள் ளடங்கலான சட்டத்தரணிகள், ஓய்வுபெற்ற நீதிபதிகள் ஆஜராக வுள்ளோம்.

சட்டத்தரணிகள் மாணவியின் நலன்சார்ந்து நடப்பார்கள் என நேற்று முன்தினம் அறிவிக்கப் பட்ட போதும், நேற்று நீதிமன்ற வளாகத்தில் நடந்த வேண்டத்த காத சம்பவங்கள் பல சந்தே கங்களை எழுப்புகின்றன.

தென்னிலங்கை வாசிகளின் சதிச் செயல்களால் இவ்வாறான அட்டகாசச் செயல்கள் நடை பெற்றுள்ளதாக சந்தேகம் உள்ளது.

சமூக நலன்சார் விடயங் களை யாரும் எங்களுக்கு சொல்லித்தர வேண்டியதில்லை. எமது சமூகப் பொறுப்பை நாங் கள் அறிவோம். எந்த அச்சுறுத தல்களுக்கும் நாங்கள் அஞ்ச மாட்டோம். மீண்டும் இராணுவம் வீதிக்கு வந்துள்ளமைக்கு நடை பெற்றுள்ள அட்டகாச செயல் களே காரணம்.

எதுவாக இருந்தாலும் எமது இலக்கிலிருந்து விலகிப்போக மாட்டோம். ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் கண்ணீரில் ஆழ்ந்தி ருக்கையில் நடைபெற்றுள்ள இளைஞர்களின் அட்டகாச செயல் கவலைக்குரியது.

இவ்வாறான செயற்பாடு களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவ லில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் சிறு கட்சி பிரமுகர்கள் உள் ளமையை காணமுடிந்துள்ளது. அவர்கள் எமது அலைபேசி களுக்கு தொடர்பை ஏற்படுத்தி தங்களை வெளியில் எடுக்கும் படி கேட்டனர். ஆனால் எந்தச் சட்டத்தரணியும் அதற்கு உடன் படவில்லை என்றும் அவர் தெரி வித்தார்.

## அனிஞ்சியன்குளத்தில இன்று பேரணி

(மல்லாவி)

வித்தியாவின் படுகொலை யைக் கண்டித்து மல்லாவி அனிஞ யன்குள தமிழ் வித்தியாலயத்தி லிருந்து பேரணி ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெறவுள்ளதுடன் இது மல்லாவி மத்திய கல்லூரி வரை இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அனைத்து அமைப்புக்களும் அழைப்பு விடுத் துள்ளதாக துண்டுப் பிரசுங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. (81)

## இன்று அகண்ட தீபமேற்றி ஆலயங்களில் வழிபாடு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் ஆத்மா சாந்தியடையவும் சட்டத்தின் முன் குற்றவாளிகள் நிறுத்தப்பட்டு தண்டனை காலதாமதம் இன்றி வழங்கப்பட வேண்டும் என்றும். எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தனை செய்யும் முகமாக இன்று மாலை 5.00 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் வழிபாடு இடம்பெறவுள்ளது. அகண்ட தீபம் ஏற்றி சிறுமி வித்தியாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனைகளையும் வேத திருமுறை பஜனையும் செய்து வழிபாட்டில் ஈடுபடுமாறு ஆலய குருமார்கள் பரிபாலகர்கள், தர்மகர்தாக்கள், அடியார்களை அன்புடன் வேண்டுகின்றோம் என சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் மற்றும் வீணாகான குரு பீட தலைவர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

## கண்ணீர் புகை தாக்குதலில் வித்தியாவின் தாயார் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.. நீதி மன்றத்திற்கு வருகை தந்த வித்தியாவின் தாய் பொலிஸாரின் கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதலில் சிக்கி மயக்கமுற்ற நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

வித்தியாவை பலாத்காரம் செய்து படுகொலை செய்த குற்றவாளிகள் நேற்று மதியம் 12 மணிக்கு யாழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவிருந்த நிலை யில் நீதிமன்றை ஆயிரக்கணக் கான மக்கள் முற்றுகையிட்டனர். பொலிஸாருக்கும் பொது மக்க ளுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டதால் கலகம் அடக்கும் பொலிஸார் மேற்கொண்ட கண் ணீர் புகைக்குண்டுத் தாக்கு தலிலேயே நீதிமன்றத்திற்கு வருகை தந்த வித்தியாவின் தாயாரும் சிக்கியதாக தெரி விக்கப்படுகிறது.

## முள்ளியவளையில் கதவடைப்பு

முல்லைத்தீவு - முள்ளியவளையில் இன்று கதவடைப்பு போராட்டம் இடம் பெறவுள்ளது.

மாணவி வித்தியாவின் படு கொலையைக் கண்டித்தும், அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் இன்று காலை 8.00 மணியிலிருந்து முற்பகல் 11.00 மணி வரையும் முள்ளியவளை வர்த்தக சங்கத்திற்கு உட்பட்ட வர்த்தக நிலையங்களை மூடி இந்தப் போராட்டம் இடம்பெற வுள்ளது. (125)

## தமிழ்மாறனின் கொடும்பாவி எரிப்பு



பளை பிரதேசத்தில் நேற்று சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறனின் கொடும்பாவி இளைஞர்களால் எரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பத்து மணிக்கு பளை பிரதேச விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த இளை ஞர்கள் ஒன்றுசேர்ந்து பளை பொது விளையாட்டு மைதானத் திலிருந்து மத்திய பேரூந்து நிலையம் நோக்கி ஊர்வலமாக சட்டத்தரணி வீ.ரி.தமிழ்மாறனின் கொடும்பாவியை இழுத்துச் சென்றனர். அங்கு கொடும்பா வியை எரித்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

கடந்த வாரம் புங்குடுதீவில் மாணவி சிவலோகநாதன் வித் தியா கூட்டு வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கொலை சந்தேக நபர்களுக்கு ஆதரவாக சட்டத்தரணி வீ.ரி.தமிழ்மாறன் செயற்படுவதனை கண்டித்தும் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் இளைஞர்கள் ஈடுபட்டனர். (29)

### 127 பேர்...

ஏற்படுத்தியமை, அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை, பொலிஸாரின் கடமையை செய்யவிடாது தடுத்தமை, பொலிஸாரை தாக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக மேற்படி 127 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்ட அதேவேளை, சட்டத்தை மீறி செயற்படுபவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ள யாழ். நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. இவர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட வுள்ளதுடன், கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களும், துவிச்சக்கர வண்டிகளும் பாரப்படுத்தப்படவுள்ளன.

### போர்க்களமானது....

காரர்கள், கற்களையும் கையில் அகப்பட்ட பொருட்களை யும் வீசியெறிந்து தாக்கினர்.

இதனால் நீதிமன்ற கண்ணா டிகள் நொருங்கின நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை வாகனங் களும் அடித்து நொருக்கப்பட்டன.

அப்பகுதியில் காவலில் இருந்த மூன்று பொலிஸாரும் காயமடைந்தனர்.

இதையடுத்து, பொலிஸா ரும், சிறப்பு அதிரடிப்படை யினரும், கண்ணீர் புகைக்குண்டு களை வீசியும், தடியடி நடத்தி யும், வானத்தை நோக்கி துப் பாக்கிச் சூடு நடத்தியும் ஆர்ப் பாட்டக்காரர்களைக் கலைத்த னர். வன்முறையில் ஈடுபட்டவர் களை கைது செய்துள்ளனர்.

(இ,25)

### வடக்கு...

- பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், வர்த்தகர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், அரச திணைக் கள உத்தியோகத்தர்கள், அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பெண்கள் அமைப்புக்கள் எனப் பலதரப்பட்டவர்களும் இந்தப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

யாழ். நகரப் பகுதிக்கு நேற்றுக் காலை பல்வேறு பகுதிகளிலி ருந்து பொதுமக்கள் பேரணியாக திரண்டு வந்தனர். பாடசாலை சமூகத்தினர், பல்கலைக்கழகத்தினர், இளைஞர் அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் மற்றும் பல்வேறுபட்ட பொது அமைப்புக் கள், பொதுமக்கள் யாழ். நகருக்கு திரண்டு வந்தனர். நகரிலிருந்து பேரணியாக மாவட்ட செயலகம் வரை கோஷங்களை எழுப்பிய வாறு சென்றனர்.

பகல் 10.00 மணி முதல் மாவட்ட செயலகம் முன்பாக திரள ஆரம்பித்த மக்கள் கூட்டம் மதியம் வரை நீடித்தது. அங்கு வைத்து புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கு நீதி வேண்டி யும், குற்றவாளிகளுக்கு உச்சகட்ட தண்டனை வழங்கக் கோரியும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி, வடமாகாண ஆளுநர், வடமாகாண முதலமைச்சர் உட்பட பல்வேறு தரப்பினருக்குமான மகஜர்கள் பொதுமக்களாலும் பொது அமைப்புக்களாலும் ்கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வடபகுதி மாவட்டங்களிலும் நகர்ப்புறப் பாடசாலை மாணவர்கள் மட்டுமல்லாமல் நெடுங்கேணி ஓமந்தை சிதம்பரபுரம் போன்ற கிராமப்புறப் பாடசாலை மாணவர்களும் மாணவி வித்தியா வின் மரணத்திற்கு நீதி வழங்க வேண்டும் என்று கோரி பாட சாலைகளில் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

இந்தப் போராட்டங்களுக்கு அந்தந்த நகரங்களைச் சேர்ந்த வர்த்தகர் சங்கங்கள், தனியார் போக்குவரத்து சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் என்பன ஆதரவு தெரிவித்து கடையடைப்பு மற்றும் பணி புறக்கணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

(இ,25,18,66,29,160,81,92,125,40)

### மாணவி...

பத்தாரின் மன வேதனையை அதிகரிப்பதற்கே வழி வகுக்கும். எனவே, இவ்வாறான கேவலமான செயற்பாடுகளில் இறங்குவதை இச் சக்திகள் தவிர்த்துக்கொள்வதுடன், நியாயமான செயற்பாடுகளுக்கு வழிவிட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகம்,

இம்மாணவியின் படுகொலை தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு, குற்றவாளிகள் தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதையும், அதே நேரம் இவ்வாறான படு மோசமான சம்பவங்கள் எங்கும் தொடராதிருக்க உரிய சட்ட நடவடிக்கை கள் அவசியம் என்பதையும் நான் ஜனாதிபதிக்கு வலியுறுத்தியுள்ளேன்.

அதே நேரம் இன்றைய தினம் (நேற்று) நாடாளுமன்றத்தில் வைத்து, சட்டம் மற்றும் ஒழுங்கு விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் குற்றவாளிகள் விசாரிக்கப்பட்டு, அவர்களுக்குப் பொருத்தமான தண்டனைகள் வழங்கப்பட வேண்டுமெனவும், வழங்கப்படும் தண்டனைகள் ஏனையவர்களுக்கு படிப்பினை யாக அமைய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டேன்.

இந்நிலையில் சில சுயநல அரசியல்வாதிகள் இச் சம்பவத்தை முன்வைத்து குறுகிய அரசியல் இலாபம் பெற முயற்சிக்கின்றனர். இதனால் பாரபட்சமற்ற விசாரணைக்கான செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்ற நிலைமைகள் தோன்று கின்றன.

எனவே இவ்வாறான நிலைமைகள் தவிர்க்கப் பட்டு, பாரபட்சமற்ற விசாரணைக்கு கயவு செய்து அனைவரும் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும் என செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.